கோகுலம்

GOKULAM

நவம்பர் '86 ரூ 2.



வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இபபோது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

புரதம்	[illegible]
கொழுப்பு	[illegible]
கார்போ	[illegible]
ஹைட்ரேட்	[illegible]
கால்ஷியம்	கால்ஷியம்
பாஸ்பரஸ்	பெண்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	வைட்டமின் (பி6)
(ஸி வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாஷியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் ஸி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'பி'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

J84. GLC. 120 Tm



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்

1986 நவம்பர் இதழ்
மலர் 4 இதழ் 10
தனிப் பிரதி ரூ. 2/—

ஆண்டுச் சந்தா ரூ. 24/—

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: கா. ரா. குமார்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

1949 ஆம் ஆண்டு. ஒருநாள் ஜப்பான் தேசத்திலிருந்து நேருஜிக்கு ஒரு கடிதம் வந்தது. அது மிகவும் கனமாக இருந்தது. கடிதத்தில் சில வரிகளே இருந்தன. அதில் 2,000 ஜப்பானியக் குழந்தைகள் கையெழுத்திட்டிருந்தார்கள்! அதனால்தான் அது கனமாக இருந்தது.

நேருஜி கடிதத்தைப் படித்துப் பார்த்தார். ``எங்கள் நாட்டின் தலைநகராகிய டோக்கியோவில் இருந்த மிருகக் காட்சி சாலை யுத்தத்தில் அழிந்துவிட்டது. அதை மீண்டும் புதுப்பித்து வருகிறார்கள். எங்கள் நாட்டில் யானை இல்லை. யானையைப் பார்க்க எங்களுக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது. ஆகையால், தயவு செய்து ஒரு யானையை டோக்கியோவுக்கு அனுப்பி உதவுங்கள்''

கடிதத்தைப் பார்த்த நேருஜி, உடனே மைசூரிலிருந்து ஒரு பெண் யானைக் குட்டியை டோக்கியோவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். அந்த யானைக் குட்டிக்கு ஜப்பானியக் குழந்தைகள் மிகப் பெரிய வரவேற்பளித்தார்கள். அதற்கு நேருஜி வைத்த பெயர்: இந்திரா.

இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்ததும், அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, துருக்கி, அரேபியா, கனடா, ஹாலந்து முதலிய நாட்டுக் குழந்தைகளும் யானை கேட்டு நேருஜிக்குக் கடிதங்கள் எழுதினார்கள். அந்தத் தேசங்களுக்கும் அவர் யானைக் குட்டிகளை அனுப்பி, அவர்களை மகிழ்வித்தார்.

நேருஜி உலகக் குழந்தைகள் அனைவரிடமும் அன்பு கொண்டிருந்தார் என்றாலும், நம் இந்திய தேசக் குழந்தைகளிடம் அவர் ஒரு தனி அன்பு காட்டி வந்தார்; மிகுந்த அக்கறை செலுத்தி வந்தார். அரும்பாடு பட்டுப் பெற்ற சுதந்திரத்தைக் கட்டிக் காத்து, இந்திய நாட்டிற்குப் பெருமை தேடித் தரக் கூடியவர்கள் குழந்தைகளே என்று நம்பினார். அந்த நம்பிக்கை வீண் போகலாமா? வருங்காலக் குடிமக்களாகிய உங்களிடம்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது. ``நாம் பிறந்த நாட்டிற்கு நாம் எந்த எந்த வகைகளில், எந்த எந்த வழிகளில் உதவலாம்?'' என்று இந்த வயதிலிருந்தே நீங்கள் சிந்திக்க வேண்டும். உயர்ந்த எண்ணங்களை உங்கள் உள்ளத்தில் விதைத்தால், நாளடைவில் அவை நல்ல பலன் அளிக்கும். இதில் ஐயமே இல்லை.

—அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



த. பழனிவேலு



மதிவண்ணன்



சு. கிருஷ்ணமூர்த்தி

பிருந்தாவனக் கதாசிரியர்



ஏ. ஆர். வீரராகவன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



ஜே. ரேவதி




ஏ. எஸ். முத்துக்குமார்




பா. ஆனந்து

அட்டை வண்ணப்படம் : திலீப் பானர்ஜி


இன்சுவைக்கு ரஷ், களிப்பூட்டுவதற்கு ரஷ்,
மனமகிழ்வுக்கு ரஷ், சேர்ந்திடுவீர் ரஷ் அணியில்
Rush
Rush
Rush
சுவையும் மணமும்மிக்க
ஆரஞ்சு பானம்
From McDowell
Artificially flavoured. Contains no fruit juice or fruit pulp.
everest/d86/MDR/295 Tam

மின் மினிக் கதைகள்

நன்கு உண்டீரா?



புலவர் ஒருவர்: என்ன ஔவையாரே! பாண்டிய அரசரின் திருமணத்தில் கலந்து கொண்டீரே. சுவையான விருந்தாக இருக்குமே நன்கு உண்டீரா?

ஔவையார்: உண்டேன், உண்டேன், உண்டேன்.

புலவர்: என்ன அவ்வளவு சிறப்பான விருந்தா? மூன்று முறை உண்டேன், உண்டேன் என்று சொல்கிறீரே?

ஔவையார்: (எரிச்சலுடன்) அதையேன் கேட்கிறீர். விருந்திற்கு வந்த கூட்டத்தில் நெருக்குண்டேன். வெளியே தள்ளுண்டேன். பெரும்பசியினாலே வயிறு சுருக்குண்டேன். ஆனால் சோறு மட்டும் உண்டிலேன், அதைத்தான் சொன்னேன்.


பிஞ்சிருக்கு

புலவர் ஒருவரின் பாடலைக் கேட்டு மகிழ்ந்த அரசன், மரம், செடி கொடிகள் வரையப் பெற்ற பொன்னுடை ஒன்றை அவருக்குப் பரிசளித்தான்.

அதைப் பெற்றுக் கொண்ட புலவர், அவ்வாடை நடுவில் சிறிது கிழிந்திருப்பதைக் கண்டு திகைத்தார்.

தமக்குப் பரிசளித்த பொன்னுடை கிழிந்திருப்பதை அரசனுக்கு உணர்த்த வேண்டும். அதே சமயத்தில் அவன் உள்ளமும் வருந்தக் கூடாது. அதை எப்படி உணர்த்துவது என்று சிந்தித்தார் புலவர்.

"அரசே! நீங்கள் பரிசளித்த பொன்னுடையில் மரம் இருக்கிறது. கிளை இருக்கிறது. பூ இருக்கிறது. பிஞ்சும் இருக்கிறது. பி...ஞ்...சு...ம் இருக்கிறது--" என்று கூறிக் கிழிந்திருந்த பகுதியைக் காட்டினார்.




புலவரின் சொல்லாற்றலைக் கண்டு வியந்த அரசன், அவருக்கு மேலும் பல பரிசில்களைக் கொடுத்து அனுப்பி வைத்தான்.

பணத்தட்டு யாருக்கு?

மாம்பழக் கவிச்சிங்க நாவலர்க்கு அரசர் வெள்ளித் தட்டிலே பணமும் பட்டாடையும் வைத்துப் பரிசு அளித்தார். அந்த வெள்ளித்தட்டை எப்படியேனும் அரசரிடம் இருந்து பெறவேண்டும் என்று அவர் நினைத்தார்.

''அரசே! பணத்தட்டு யாருக்கு?'' என்று வினவினர்..




புலமை நிரம்பிய அந்த அரசன், நாவலர் கூறியதன் பொருளை உணர்ந்தார்., பணத்தட்டு எனக்கு என்றால் பணத் தட்டுப்பாட்டில் இருப்பவர் அரசர் என்று அல்லவா ஆகிவிடும்? அதனால் வேறு வழியின்றிப் பணத்தட்டு உங்களுக்குத்தான் என்று சொல்லியவாறே அப்பணத்தட்டை அவரிடம் தந்தார் அரசர்.

காலாட்டிச் சாப்பிடலாம்

''காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிக் கொண்டே சாப்பிடலாம்'' என்று இருவர் பேசிக் கொண்டிருந்ததை ஒரு பிச்சைக்காரன் கேட்டான்.

'சரி! நாம் காஞ்சிபுரம் செல்ல வேண்டியதுதான்' என்று நினைத்த அவன் எப்படியோ அவ்வூர் வந்து சேர்ந்தான்.

நல்ல பசி அவனுக்கு. ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்தான். காலை ஆட்டிக் கொண்டிருந்தால் சாப்பாடு வருமென்ற எண்ணத்தில் தன் காலை வேகமாக ஆட்டிக் கொண்டிருந்தான்.



நீண்ட நேரமாகியும் சாப்பாடு வரவில்லை. அப்பொழுது அங்கு வந்த ஒருவர், "ஏன் எப்பொழுதும் காலை ஆட்டிக் கொண்டே இருக்கிறாய்? ஏதாவது வியாதியா?" என்று கேட்டார்.

அதற்குப் பிச்சைக்காரன், "இங்கு காலாட்டிக் கொண்டே சாப்பிட லாம் என்றார்கள். அதை நம்பி இங்கு வந்தேன். அவர்கள் சொன்னது பொய் போலிருக்கிறது. எனக்கு யாரும் சாப்பாடு போடவில்லையே, என்ன செய்வது என்றும் புரியவில்லையே?" என்று சொன்னான்.

அதைக் கேட்ட அவர் சிரித்துக் கொண்டே, "அவர்கள் சொன்னது உண்மைதான். அதை நீ புரிந்து கொண்ட விதம்தான் தவறு. இங்கே ஏராள மான நெசவாளர்கள் உள்ளனர். தறி நெய்து அதனால் வரும் வருமானத்தால் அவர்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். அப்படி வாழ்வதைத்தான் காலாட்டிக் கொண்டே சாப்பிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று சொல்லி விட்டு அவனுக்குச் சாப்பாடு போட்டு ஊருக்கு அனுப்பி வைத்தார்.

மீன் கருவாடு ஆகாது

அரசர் ஒருவர் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். அவர் உடல் நலத்தை ஆராய்ந்த மருத்துவர் கடுமையாகப் பத்தியம் இருக்க வேண்டும் என்று சொன்னார்.

பக்கத்திலிருந்த அமைச்சர், "அரசர் எதைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக் கூடாது என்று சொல்லுங்கள்," என்றார்.

அதற்கு மருத்துவர், "முட்டை கோழி ஆகும்; மீன் கருவாடு ஆகாது" என்றார்.



இதைக் கேட்டதும் அரசர் கோபம் கொண்டு மருத்துவரை ஓங்கி அறைந்தார். "என்னை என்ன பைத்தியக்காரன் என்று நினைத்துக் கொண்டாய்?" என்று கத்தினார்.

அமைச்சருக்கு ஒன்றும் புரியவில்லை. அரசரை அமைதிப்படுத்திவிட்டு மருத்துவரைப் பார்த்து, "அரசர் என்ன சாப்பிடலாம் சொல்" என்றார்.

மருத்துவரும் நடுங்கிக் கொண்டே, "முட்டை கோழி ஆகும். மீன் கருவாடு ஆகாது" என்றார்.

இதைக் கேட்டதும் அரசர் மீண்டும் கடுங்கோபம் கொண்டார். "என்ன இந்த மருத்துவர் இப்படி அறிவில்லாமல் பேசுகிறார். முட்டை கோழி ஆகும் போது எப்படி மீன் கருவாடு ஆகாமல் போகும்?" என்று கத்திவிட்டு மருத்துவரை அறைந்தார்.

அப்பொழுதுதான் அமைச்சருக்கு அரசரின் கோபத்திற்கான காரணம் புரிந்தது. "அரசே! மருத்துவர் அந்தப் பொருளில் சொல்லவில்லை. தாங்கள் முட்டையும் கோழியும் சாப்பிடலாம். மீன், கருவாடு ஆகியவற்றைச் சாப்பிடக் கூடாது" என்று சொல்லி அரசரை அமைதிப்படுத்தினார்.



—எ. சோதி தொகுத்த 'சிரிக்க சிந்திக்க, சிலேடைகள்' என்ற புத்தகத்திலிருந்து வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.



நேருஜி வாழ்விலே

* ஜவஹர்லால் நேரு இந்தியாவில் பள்ளியில் சேர்ந்து படித்ததெல்லாம் ஆறு மாதங்களே! இவர் படித்த பள்ளியின் பெயர் செயின்ட் மேரீஸ் கான்வென்ட். அதன் பிறகு, ஃபர்டினன்ட் புரூக் என்ற ஆங்கிலேயர் இவரது வீட்டுக்கு வந்து கல்வி கற்பித்தார்.

* குதிரைச் சவாரி, நீச்சல், கிரிக்கெட், டென்னிஸ் ஆகியவற்றில் இளம் வயதிலே ஆர்வமுடன் ஈடுபட்டார்.

* பதினைந்தாவது வயதில் (1905) தகப்பனார், தாயார், ஐந்து வயதுக் குழந்தையாக இருந்த சகோதரி ஆகியோருடன் இங்கிலாந்து சென்றார். ஹாரோவில் உள்ள பொதுப் பள்ளியில் சேர்ந்தார். 18 வது வயதில் கேம்பிரிட்ஜில் உள்ள ட்ரினிட்டி கல்லூரியில் சேர்ந்தார். பல பிரதமர்களை உருவாக்கியது, அந்தக் கல்லூரி!

* கேம்பிரிட்ஜில் இந்திய மாணவர்கள் மஜ்லிஸ் (Majlis) என்று ஒரு சங்கம் வைத்திருந்தனர். அங்கு அடிக்கடி கூட்டங்கள், விவாதங்கள் நடக்கும். ஜவஹர் ஒருமுறை கூட அங்கு பேசியதில்லை. அவ்வளவு கூச்சம்! ஒருவர் ஒரு பருவம் (Term) முழுவதும் பேசாத போனால், அவர் அபராதம் செலுத்த வேண்டும். ஜவஹர் பேசாமல் அபராதத்தைச் செலுத்தி விடுவார்! அப்போது அப்படிப் பேசாதிருந்தவர்தான் பிற்காலத்தில் உலகிலேயே சிறந்த ஒரு பேச்சாளர் என்று பெயர் எடுத்தார்!

* இவர் பரிசாகப் பெற்ற ஒரு புத்தகத்தின் பெயர் 'கரிபால்டியின் வீர வாழ்க்கை வரலாறு' என்பதாகும். இத்தாலி தேச விடுதலைக்கு அவர் எவ்வளவு தூரம் பாடுபட்டார் என்பதை அறிந்து, அவரைப் போல் நாமும் நம் தேச விடுதலைக்குப் பாடுபட வேண்டுமென நினைத்தார்.

* இங்கிலாந்தில் இருந்த போது ரைட் சகோதரர்கள் முதல் முதலாக விமானத்தைப் பறக்க விட்ட செய்தியைப் படித்த ஜவஹர், தம் தந்தைக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "வாரக் கடைசி விடுமுறையில் நான் ஆகாய மார்க்கமாக இந்தியாவுக்கு வந்து திரும்பினாலும் திரும்ப முடியும்" என்று எழுதினார்.

* கமலா கால் (Kamala Kaul) இவரைத் திருமணம் செய்து கொண்டது 1916 ஆம் ஆண்டில் — வசந்த பஞ்சமி நாளில்.

* இவர் முதல் முதலாக காந்திஜியைச் சந்தித்தது, 1916 இல் லக்னோவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில்தான்.

* இவர் முதல் முதலாக மேடை ஏறிப் பேசியது 1915 இல் அலகாபாத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில். அந்தப் பேச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. பலரது பாராட்டைப் பெற்றது.

* நம் தேச விடுதலைக்காக 3262 நாட்கள் (சுமார் 9 ஆண்டுகள்) சிறையில் இருந்தார். 9 சிறைகளில் வைக்கப்பட்டார்.

* சிறையிலிருந்த போது இவர் எழுதிய புத்தகங்கள் மூன்று: சுய சரிதம், உலக சரித்திரம் (Glimpses of world History), Discovery of India.

* பழங்கால நாகரிகத்தைப் பற்றியும், சரித்திர, சமூக, பொருளாதார மாற்றங்களைப் பற்றியும் சிறையிலிருந்து தம் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பே உலக சரித்திரம். அப்போது இந்திராவுக்கு வயது 10.

* 1935 வரைதான் இவர் தமது சுயசரிதத்தை எழுதியிருக்கிறார். அது, 1936 இல் இங்கிலாந்தில் முதல் முதலாக வெளியிடப்பட்டது. வெளிவந்த சில மாதங்களிலே விற்றுத் தீர்ந்து விட்டது!

* இவர் அன்புடன் வளர்த்த பிராணிகள்: அர்ஜுனன், பீமன் என்ற புலிக்குட்டிகள், பூனை முகமும், கரடி உடலும், நரி வாலும் கொண்டு இமயத்திலிருந்து வந்த பண்டா என்ற பிராணி.

* இவர் பாரதப் பிரதமராக இருந்த ஆண்டுகள் 17.

* இவர் மறைந்த பிறகு இவரது அஸ்தி கங்கையிலும், நாட்டின் பல பாகங்களிலும் தூவப்பட்டது.



பிருந்தாவனக் கதையரங்கம்



திருப்பிக் கொடு

ஏ. ஆர். வீரராகவன் (உ/18)

வாசுவும், கார்த்தியும் இணை பிரியாத நண்பர்கள். வாசு நல்லவன்; பிறர் சொல்வதைக் கேட்பான்; பெரியோர்களை மதிப்பான்.

கார்த்தி எல்லோரிடமும் அன்பாகப் பழக மாட்டான். அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வான். சண்டை போடுவதோடு, "நான் முந்தா நாள் வாங்கித் தந்தேனே சாக்லெட், அதைத் திருப்பிக் கொடு" என்று கேட்பான். அவர்கள் தராவிட்டால், கேலி செய்து அவர்களை இழிவு படுத்துவான்.

கார்த்தி நிறையப் பேர்களுடன் சண்டைச் சச்சரவு செய்து கொண்டிருந்தான். இது வாசுவிற்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் வாசு கார்த்தியிடம், "கார்த்தி, நீ செய்வது நன்றாயில்லை" என்று கூறினான்.

"என்னடா, நான் செய்வது பிடிக்கவில்லையா?" என்று கார்த்தி கேட்டான்.

"நீ எல்லோரிடமும் சண்டை பிடிக்கிறாயே, இது நல்லதா? அத்துடன் ஒரு நாள் பிரியமாக வாங்கிக் கொடுத்ததை பிறகு ஒருநாள் திருப்பிக் கேட்கிறாயே! இது சரியா?" என்று கேட்டான்.

"நான் அப்படித்தான் கேட்பேன். நீ பேசாமல் வாயை மூடிக் கொண்டு இரு" என்றான் கார்த்தி. சிறிது நேரத்தில் இருவருக்கும் வாய்ச் சண்டை முற்றியது. ஆனால், வாசு சாதாரணமாகத்தான் பேசினான். அன்பாகத் தான் பேசினான். கோபத்தில் கார்த்தி "பளார்" என்று வாசுவின் கன்னத்தில் அறைந்து விட்டான்! ஆனால், வாசு பொறுமையாகவே இருந்தான். "நான் வாங்கித் தந்ததையெல்லாம் திருப்பித் தாடா!" என்று கார்த்தி கூறினான். உடனே வாசு தனக்கு அவன் வாங்கித் தந்த பொருள்களை ஒவ்வொன்றாகத் திருப்பிக் கொடுத்தான். கடைசியில் வாசு தன் வலது கையை மேலே உயர்த்தினான். ஓங்கி ஓர் அறை... இல்லை, வாசு அறையவில்லை. அறைவது போல் பாசாங்கு செய்தான்.

உடனே கார்த்தியின் உடல் நடுநடுங்கியது. வாசுவின் கையைப் பிடித்துக் கொண்டு, "ஏண்டா வாசு, என்னை அறைய வருகிறாயே! இது நியாயமா?" என்று கேட்டான்.

"நீ எனக்குக் கொடுத்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் திருப்பிக் கொடுத்து விட்ட நான், ஒன்றை மட்டும் திருப்பிக் கொடுக்காமல் இருக்கலாமா? சற்று முன்பு கொடுத்தாயே அறை, அதைத்தான் சொல்

கிறேன்'' என்றான் வாசு.

''டேய்,என்னை மன்னிச்சுக்கோடா. நான் தெரியாமல் இத்தனை நாளும் தவறு செய்துவிட்டேன். என்னை மன்னிச்சுடுடா'' என்று கூறி கார்த்தி அழுதான். வாசுவும் அவனுக்கு மன்னிப்பு அளித்து அறிவுரை கூறினான். அது முதல் கார்த்தி யாரிடமும் சண்டை போடுவதில்லை. 'திருப்பிக் கொடு' என்று கேட்பதும் இல்லை!



தாராபுரம் என்ற ஊரில் ஒரு தனவந்தர் வசித்து வந்தார், அவருக்கு ஷீலா என்றொரு பெண் இருந்தாள். ஷீலா ரொம்ப நாகரிக மோகம் கொண்டவள். ஒருசமயம், அவள் தன் அத்தையின் கிராமத்தைப் பார்க்க ஆசைப்பட்டாள். ஆகவே ஷீலாவைத் தன்னுடன் கிராமத்திற்கு அழைத்துச் சென்றாள் அவள் அத்தை.

ரயிலிலிருந்து இறங்கியதும், ஷீலாவும் அவள் அத்தையும் குதிரைகள் பூட்டிய ஜட்கா வண்டியில் ஏறி வீட்டிற்குச் சென்றார்கள். ஷீலாவிற்கு இது புது அனுபவம். ஏனென்றால், அவளிருந்த ஊரில் இம்மாதிரி வண்டிகளை அவள் பார்த்தது கிடையாது. ஆதலால், குதிரைகள் வண்டியிழுப்பது அவளுக்கு வேடிக்கையாய் இருந்ததோடு அந்த ஜீவன் மேல் ஒரு பிரியமும் உண்டாயிற்று.

வழியில் ஷீலா வேறு சில அதிசயங்களைக் கண்டாள். வயலில் ஒரு குடியானவன் ஏர்க்காலில் மாடுகளைப் பூட்டி நிலத்தை உழுவதை முதன் முதலாகப் பார்த்து வியப்பு அடைந்தாள். அத்தை அவளுக்கு உழவுத் தொழிலைப் பற்றி விவரித்த போதுதான் அரிசி யார் மூலம் கிடைக்கிறது என்பதை உணர்ந்தாள் ஷீலா. அவளுக்கு மாடுகள் மீதும் ஒரு மதிப்பும் அன்பும் உண்டாகியது. அத்தையிடமிருந்து ,தான் போர்த்திக் கொள்ளும் கம்பளி, ஸ்வெட்டர், கோட்டு இவைகளுக்கு மூலப் பொருளான கம்பளி நூல், ஆட்டு உரோமத்திலிருந்து கிடைக்கிறது என்பதை ஷீலா அறிந்து கொண்ட போது அவளுக்கு விலங்குகள் மீது மேலும் அன்பு பெருகியது.

கிராமத்திலிருந்து திரும்பிய ஷீலா முற்றும் மாறியே போயிருந்தாள். ஒழிந்த நேரங்களில் தழைகளையும் புல்லையும் வெட்டி ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் போட்டு வந்தாள். குதிரை, ஆடு, மாடு எந்த மிருகமானாலும் அன்புடன் நேசித்தாள்.

ஷீலாவின் தந்தைக்கு இந்த மாறுதல் பிடித்தது. இதை அவளிடமே கேட்டுவிட்டார். அதற்கு ஷீலா, ''அப்பா! நாம் இப்படிச் சுகபோக வாழ்வை அனுபவித்து வருவதற்குக் காரணமே இந்த வாயில்லா ஜீவன்கள் தாமே! நாம் உண்ணும் உணவைத் தர வயலில் உழைக்கின்றன மாடுகள். நாம் உடுக்கும் கம்பளி உடைகளுக்குத் தம் உரோமத்தையே தந்து உதவுகின்றன ஆடுகள். நம் நாட்டைக் காக்க யுத்த வீரர்களைத் தம் மேல் சுமந்து சென்று போர்க்களத்தில் தம் உயிரையே தியாகம் செய்கின்றன குதிரைகள். அப்பா! இந்த வாயில்லா ஜீவன்களை—நம்மைக் காக்கவே பாடுபட்டு உழைக்கும் இந்த மிருகங்களை — ஆதரிக்க வேண்டியது நம் கடமையல்லவா?'' என்றாள். தந்தைக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. அவர் ஆனந்த மிகுதியால் தம் அருமை மகளை வாரியணைத்துக் கொண்டார்.

— சு. கிருஷ்ணமூர்த்தி

குழந்தைகளுக்காக ஒரு தியேட்டர்

ஆம், குழந்தைகளுக்காகவே ஒரு தியேட்டர் இருக்கிறது — கல்கத்தாவில். அதன் பெயர் 'சில்ட்ரன்ஸ் லிட்டில் தியேட்டர்' (Children's Little Theatre) சுருக்கமாக C. L. T. என்று அழைப்பர்.

தெற்கு கல்கத்தாவில் டாகுரியா மேம்பாலத்தையடுத்து அமைந்திருக்கிறது C. L. T. யின் ஐந்தடுக்குக் கட்டடம். குழந்தை இலக்கியமும் குழந்தைகளுக்கான சித்திரங்களும் படைத்துள்ள அவனீந்திரநாத் தாகூரின் நினைவாக இந்தக் கட்டடத்துக்கு 'அபன் மஹல்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது வெறும் தியேட்டர் அல்ல; இசை, நடனம், நாடகம், சித்திரம் முதலிய பல துறைகளிலும் சிறுவர், சிறுமியருக்குப் பயிற்சியளித்து, அவர்கள் கூடி வாழக் கற்றுக் கொடுக்கும் ஓர் இயக்கமாகும். ஐந்து வயது முதல், பதினான்கு வயது வரையுள்ள சுமார் எழுநூறு சிறுவர், சிறுமியர் இதில் உறுப்பினராகிப் பயனடைந்து வருகிறார்கள்.

அலுவல் நேரத்தில் அபன் மஹலுக்குள் நுழைந்து பார்த்தால், ஒவ்வொரு அறையிலும் குழந்தைகள், சிறுவர் சிறுமியர் பயிற்சி பெறுவதைக் காணலாம். ஒவ்வோர் அறைக்கும் ஒரு பறவையின் பெயரிடப்பட்டிருக்கிறது.

1975 இல் வெள்ளிவிழாக் கொண்டாடிய C. L. T. பிறந்த வரலாறு சுவையானது:

சாரண இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த சமர் சாட்டர்ஜி (இப்போது 78 வயது இளைஞர்!) குழந்தைகளிடம் மிகுந்த அன்பு கொண்டவர். அந்தக் காலத்தில் இளஞ்சாரணர்கள் (Cubs) சாரண இயக்க விழாக்களில் ஆங்கில நர்சரிப் பாடல்கள் பாடுவதைக் கேட்ட இவருக்கு, அவர்கள் ஏன் வங்காளிப் பாடல்கள் பாடக் கூடாது என்று தோன்றியது. அவர் உடனே ஆங்கிலப் பாடல்களை வங்காளியில் மொழி பெயர்க்கத் தொடங்கியதோடு, வங்காளியில் புதிய பாடல்களும் இயற்ற முற்பட்டார். இவ்வாறு சுமார் இருநூறு பாடல்கள் இயற்றியுள்ளார் இவர். இவர் போல் குழந்தைகளிடம் அக்கறை கொண்டிருந்த இன்னும் சிலர் இப்பாடல்களைப் பள்ளி மாணவ மாணவியருக்குப் போதிக்க முன் வந்தனர். இவ்வாறுதான் Rhythms & Rhymes என்ற அமைப்பு உருவாயிற்று. இந்த அமைப்பே பின்னர் வளர்ச்சியடைந்து C. L. T. யாக மலர்ந்தது.

முதலில் இந்த அமைப்புக்குத் தனி அலுவலகம் இல்லை. பயிற்சியாளர்கள் வெவ்வேறு பள்ளிகளுக்குச் சென்று மாணவ மாணவியருக்கு இசை, நடனம், நடிப்பு இவற்றில் பயிற்சியளித்தனர்.

பாடி ஆடும் பையன்கள்





இராமர் வில்லை ஒடித்தபின் — இலக்குவன், விஸ்வாமித்திரர், ஜனகர், இராமர், சீதை.

இந்த அமைப்பில் பயிற்சி பெற்ற சிறுவர் சிறுமியர் முதன் முதலாக 1952 ஆம் ஆண்டு நியூ எம்பயர்தியேட்டரில் பல்சுவை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்தது.

1953 இல் இந்திய மியூசியத்தின் கட்டடத்தில் தொடர்ந்து நான்கு நாட்கள் குழந்தைகள் விழா விமரிசையாக நடைபெற்றது.

C. L. T. 1956 இல் ஓரிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டது 1958 ல் அது வேறிடத்துக்கு மாறியது. 1963 இல் C. L. T. யின் சொந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லைப் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் நாட்டினார். 1965 ஆம் ஆண்டு முதல் C. L. T. இக்கட்டடத்திலிருந்து இயங்கத் தொடங்கியது. 1969 இல் கட்டடம் நிறைவு பெற்றது.

C. L. T. யின் நோக்கம் சிறுவர் சிறுமியரைத் தனிப்பட்ட முறையில் மென்கலை நிபுணர்களாக்குவதல்ல; கூட்டிசை, நடனம், நாடகம் இவை மூலம் அவர்களிடையே இசையுணர்வையும், கூடி இயங்கும் தன்மையையும் வளர்ப்பதேயாகும். ஆகவே, சிறுவர் சிறுமியர் இங்கு குழுக்கள் குழுக்களாகவே பயிற்சி பெறுகிறார்கள். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் சிலர் தனிப்பட்ட வெவ்வேறு துறைகளில் புகழ் பெற்றும் இருக்கிறார்கள். திரைப்பட நட்சத்திரம் ஷர்மிலா டாகூர் தம் 12 — 13 வயதில் பள்ளிச் சிறுமியாக C. L. T. யில் பயிற்சி பெற்று C. L. T. நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறார்.

குழந்தைகள் வயதுக்கேற்றவாறு கீழ்ப் பிரிவு, மேற் பிரிவு என்று பிரிக்கப்படுகிறார்கள். மேற்பிரிவுக் குழந்தைகளுக்கு மணிபுரி, கதகளி, கதக், பரத நாட்டியம், ஒடிஸ்ஸி முதலிய நடனங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இத்துறைகளில் வல்லுனர் பலர் வெவ்வேறு சமயங்களில் C. L. T. பயிற்சியாளராகப் பணிபுரிந்துள்ளனர்.

C. L. T. யின் சிறப்புத் தன்மை அது அரசாங்கங்களின் பண உதவியை நம்பியிருக்கவில்லை என்பதுதான்! பொது மக்களின் நன்கொடையும் அது நடத்தும் கலை விழாக்கள் மூலம் கிடைக்கும் வருமானமுமே C. L. T. யின் முக்கிய பலமாகும். தென் கல்கத்தா ரோட்டரி சங்கம் 'அபன் மஹல்' உருவாகக் கணிசமாக உதவியிருக்கிறது.

C. L. T. யின் இன்னொரு சிறப்பு, அதன் பயிற்சியாளர்கள் மாதச் சம்பளம் வாங்கும் ஊழியர்களல்லர்! அவர்கள், தங்கள் கலையார்வத்தாலும் குழந்தைகளிடம் உள்ள பரிவாலும் இலவசமாகவே தங்கள் சேவையை C. L. T. க்கு வழங்குகிறார்கள்.

C. L. T. யில் சிறுவர் சிறுமியர் சித்திரம் வரையக் கற்றுக் கொள்கின்றனர். ஆண்டு தோறும் C. L. T. அகில இந்திய சித்திரப் போட்டியும் நடத்துகிறது.

C. L. T. சமூகத்துக்குச் செய்யும் ஒரு சிறந்த சேவை, அது மனவளர்ச்சி குன்றிய சிறுவர், சிறுமியருக்கு அளிக்கும் விசேஷப் பயிற்சிதான். இப்பயிற்சி குழந்தைகளின் கலையுணர்வை வளர்ப்பதோடு, அவர்

வனவாசம் போகும் இராமரும், சீதையும் இலக்குவனும்.





ஆண்டர்சன் கதை ஒன்றை நாடகமாக நடிக்கிறார்கள்.

களுக்குத் தக்க சிகிச்சையாகவும் அமைகிறது. இத்துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவர் C. L. T. க்கு ஆலோசனை வழங்கி வருகிறார்.

உயர்நிலைப் பள்ளித் தேர்வில் தேறிய மாணவ மாணவியருக்கு C.I.T. அரங்கேறு கலைகளில் (Performing arts) பயிற்சியளித்து ஒரு சான்றிதழும் (Diploma) அளிக்கிறது. இப்பயிற்சியில் தேர்வு பெறுபவர்கள் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளைத் தாங்களே இயக்கும் திறமை பெறுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக C.I.T. சிறுவர் சிறுமியருக்குத் தபால் தலைகள் சேகரிக்கும் கலையில் (Philately) சிறப்புப் பயிற்சி அளிக்கிறது. இத்துறையில் புகழ் பெற்ற பத்மஸ்ரீ

எஸ். பி. சாட்டர்ஜி, அவர்களுக்குப் பயிற்சியளிக்கிறார். இப்பயிற்சி பெற்றவர்கள் பலர் உள்நாட்டிலும் அனைத்து நாட்டுத் தபால்தலைக் கண்காட்சிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளனர்.

C. L. T. பொம்மலாட்டப் பயிற்சியும் அளிக்கிறது. சுமார் ஐம்பது பொம்மலாட்டப் பாத்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. C. L. T. அலாவுதீன், அலிபாபா, லவகுசா முதலிய பொம்மலாட்டங்களை மேடையேற்றியுள்ளது.

C. L. T. நூலகத்தில் சுமார் 8000 நூல்கள் உண்டு. இவற்றில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் மட்டுமன்றி, பல்வேறு மென்கலைகள் பற்றிய தரமான புத்தகங்களும் அடங்கும்.

அபஸ் மஹாலின் கீழ்த்தளத்தில் சுமார் 500 இருக்கைகள் கொண்ட அரங்கம் உண்டு. இதற்காக எலெக்ட்ரானிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒளி, ஒலியமைப்புகள் உள்ளன. புகழ் பெற்ற ஒளியமைப்பு நிபுணர் கனிஷ்க சென் அவர்களின் சேவை C. L. T. க்குக் கிடைத்துள்ளது.

C. L. T. ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் சுமார் இரண்டு வார காலம் கலைவிழா நடத்துகிறது. இது தவிர மே மாதம் ஆண்டு விழாவும் உண்டு. C. L. T. யின் குழந்தைக் கலைஞர்கள் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் சென்று கலைநிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

முன்பெல்லாம் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தேவையான பின்னணி இசைக்கு அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முறையில் சிரமமும் பணச் செலவும் அதிகமாவதால், இப்போதெல்லாம் பதிவு செய்யப்பட்ட இசை பயன்படுத்தப்படுகிறது. இசை பதிவு செய்வதற்காக நவீன வசதிகள் கொண்ட ஒரு ஸ்டுடியோவும் அபஸ் மஹாலில் உள்ளது. C. L. T. யிடம் ஒரு சொந்தக் கூட்டிசைக் குழு (Choir Group) உள்ளது. சுருக்கமாகச் சொல்லப் போனால் C. L. T. கல்கத்தாக் குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதம்!

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அறிவித்த கோடை விடுமுறைப் போட்டியில் பரிசு பெற்றோர்:

I ஸ்ரீ இராமாயணம், ஸ்ரீ மகாபாரதம் — இவைகளுள் வரும் ஒரு கதாபாத்திரத்தைப் பற்றிய கதை.

முதற் பரிசு



ஆ. மகேஸ்வரி

2 ஆம் பரிசு



ஆர். சித்ரா

3 ஆம் பரிசு



கொ. மா. கோ. இளங்கோ


II ஆழ்வார்கள், நாயன்மார்கள் — இவர்கள் மூலமாகத் தமிழ் வளர்ந்ததைப் பற்றி ஒரு சிறு நாடகம்.

முதற் பரிசு



கா. சிவசுப்பிரமணியன்

2 ஆம் பரிசு



பா. கிரிஜா

3 ஆம் பரிசு



ஏ. சுமதி

III நமது தேச சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்தவர்களைப் பற்றி ஒரு கவிதை.

முதற் பரிசு



வெ. புகழொளி

2 ஆம் பரிசு



பி. சரவணக்குமார்

3 ஆம் பரிசு

மை. பிரேமா

IV பாரத நாட்டில் உள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய ஒருமைப்பாட்டைப் பற்றிய ஒரு கட்டுரை.

முதற் பரிசு



ஆ. மணிமாறன்

2 ஆம் பரிசு



க. லெட்சுமி

3 ஆம் பரிசு



ஆர். பார்வதி

மேலே கண்ட ஒவ்வொரு விஷயத்திற்கும்

முதற் பரிசு — ஒரு தங்க டாலருடன் ரூ. 500/— 2 வது பரிசு ரூ. 250/—

3 வது பரிசு ரூ. 100/— அனுப்பி வைக்கப் பெற்றது.

(வி)சித்திரச் செய்திகள்

— ஆழி

பேச்சில் சாதனை




கடலூரில் ஜெயராமன் என்னும் தொழிலாளி ஒருவர் 7 நாட்கள் — அதாவது 165 மணி நேரம் — இரவு பகல் பாராமல், இடைவிடாது தொடர்ந்து பேசி உலக சாதனை புரிந்துள்ளார். சூரியன் முதல் பூமி வரை, அரசியல் முதல் ஆன்மீகம்வரை எல்லாவற்றையும்பற்றிப் பேசினார். இதற்கு முந்தைய உலக சாதனை இலங்கையைச் சேர்ந்த கபிலா குமாரசிங்கே பேசியது 159 மணி நேரம்தான்!



நீர்மூழ்கிப் பறவை

பறவைகளில்மிகுந்த ஆழத்தில் நீர்மூழ்கக் கூடியது அண்டார்ட்டிகா பறவையான பெங்குவின்தான் என்று பறவை ஆராய்ச்சியாளர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தப் பறவை 200 மீட்டர் ஆழத்துக்கு அதிகமாக நீரில் மூழ்குகிறதாம்.

படம் வரையும் குரங்கு




சமீபத்தில் 'டிக்' என்னும் சிம்பான்ஸிக் குரங்கு ஒன்று வரைந்த சித்திரங்களை பிரிட்டனில் ஏலம் விட்டார்கள். அந்த ஏலத்தின் மூலம் கிடைத்த தொகையைப் பிராணிகள் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப் போகிறார்களாம்.



நிறம் மாறும் திரைப்படங்கள்


அந்தக்கால கறுப்பு —'வெள்ளை திரைப் படங்களை வண்ணப்படங்களாக மாற்றி விடுகிறார்கள் அமெரிக்காவில். கறுப்பு வெள்ளைப் படம் முதலில் வீடியோ நாடாவில் பதிவு செய்யப்பட்டு, பிறகு, ஒவ்வொரு பிரேமும் கம்ப்யூட்டரின் உதவியுடன் வண்ணப்படமாக மாற்றப்படுகிறது.

சமர்த்து நாரை




ஜப்பானில், பச்சை முதுகு நாரைகள், பூச்சி புழுக்களைப் பிடித்து வந்து நீரில் போட்டு, அந்தப் பூச்சி புழுக்களைத் தின்ன வரும் மீன்களைக் கொத்திக் கொள்ளுகின்றன என்று ஜப்பானியப் பறவை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மீன்களுக்குப் பிடித்தமான புழுக்களையே அவை கொண்டு வந்து நீரில் போடுகின்றனவாம்!

தூண்டில் போடும் எலிகள்



நியூகினியாவில் மீன் பிடிக்கும் எலிகள் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது அந்த எலி, கரையில் நின்று, தன் வாலினை நீரில் விட்டு லேசாக அசைத்துக் கொண்டிருக்கும். எலியின் வாலைப் புழு என்று எண்ணி, மீன்கள் கடிக்கும். உடனே எலி தன் வாலைக் கரைக்கு இழுத்துக் கொண்டு, வாலைக் கடித்துக் கொண்டிருக்கும் மீன், கரையில் வந்து விழுந்தவுடன் தின்றுவிடும்!

விரல் ரேகை விசித்திரம்



தோலின் அமைப்பு, மற்றும் ரேகைகளைக் கொண்டு அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் யார் என்பதைத் திட்டவட்டமாக அடையாளம் காண முடியும் என்று ஹங்கேரி நாட்டு விஞ்ஞானி 'சாண்டர் ஆக்ரஸ்' என்பவர் கண்டு பிடித்திருக்கிறார். இதற்காக அவர் 1600 பெற்றோர்களையும், அவர்கள் குழந்தைகளையும் பரிசோதித்திருக்கிறார்!

அடுத்த இதழில்:

* இருமொழிகளில் பழமொழிகள் (Parallel Proverbs)
* கடவுளைக் கண்டவர்கள் (தொடர்) — தேவி நாச்சியப்பன்
* கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் மனு (உறுப்பினர் ஆகாதவர் பூர்த்தி செய்து அனுப்பலாம்)

ஸியோல்-சில தகவல்கள்

தென் கொரியாவின் தலைநகர் ஸியோல். அங்கு நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்போட்டிகள் 1988 ஒலிம்பிக்குக்கு முன்னோடி. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஒரு ரிகார்டு! 4700 விளையாட்டுக் கலைஞர்களும், இருபத்தைந்து தேசப் பிரதிநிதிகளும் இதில் பங்கு கொண்டார்கள்.

* துப்பாக்கி சுடும் வல்லமை சூவுக்குச் சின்னஞ்சிறு வயதில் 'காட்டா



புல்லட்'டில் பறவைகளையடித்துப் பழகியதில் கிடைத்தது. இவனது குறி தவறாத திறமையைக் கண்டு பயிற்சியாளர் ஜோயோகுருவாயி அவனை மாணவனாக ஏற்றுக் கொண்டார். ஸியோல் ஆசியப் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களும், வெள்ளி, வெங்கலப் பதக்கங்களும் சீனா சூடுவதற்கு சூவின் சாதனைகளும் உதவின. இப்போது கோச் ஜோயோர்குவாருயி சூவைத் தம் மருமகனாகவும் ஏற்றுக் கொள்ள முடிவு செய்துவிட்டார். லாஸ் ஏஞ்ஜெல்ஸ் ஒலிம்பிக்கில் முதல் தங்கப்பதக்கத்தைச் சூடிய பெருமை சூவுக்கு உண்டு.

* இந்தியாவுக்கு நிச்சயம் தங்கத்தை ஓட்டப் பந்தயத்தில் தருவார் என்ற நம்பிக்கை நட்சத்திரம் பி. டி. உஷா. ஸியோலில் நானூறு மீட்டர் தடை ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் மூவண்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்க, தேசிய கீதம் முழங்க, முதல் தங்கம் பெற்று வழிவகுத்தவர் பி. டி. உஷா. இதுவரை நான்கு தங்கப் பதக்கங்களும் வெள்ளியும் இந்தியாவின் பெருமையை உயர்த்தின. பாதை தவறி ஓடியதால் ஷைனி ஆபிரகாமுக்குக் கிடைக்கவிருந்த தங்கம் பறிபோயிற்று! தன் அறையில் கதவைச் சாத்திக் கொண்டு பெருமை இழந்த ஷைனி ஆபிரகாம் அழுது தீர்த்தார்! இந்திய விளையாட்டு நிர்வாகிகள் எழுப்பிய ஓலங்களும் எடுபடவில்லை! நானூறு மீட்டர் பந்தய வெள்ளி ஒரு சமாதானம்! — ரிலேயில் ஒரு தங்கம்.

* படேபடே இந்திய, பாகிஸ்தான் ஹாக்கி சாம்பியன்களைத் தென் கொரிய சர்வ கலாசாலை மாணவர்கள் தோல்வியடைய வைத்துத் தங்கப் பதக்கம் சூடியது இணையற்ற சாதனை! புதிதாகக் கற்றுக் கொண்ட தென் கொரிய மாணவர்கள் இத்தகைய அரிய சாதனை புரிந்ததற்கு அவர்களது வேகத் திறனும் உடல் வாகுவும்தான் காரணம் என்கிறார் இந்தியப் பயிற்சியாளர் அஜித்பால்!

* உடல் உபாதை, தோள் பட்டை பாதிப்பு ஆகியவை நாற்பத்தியொரு வயது முரோசிபுக்கு 'ஹாமர் த்ரோ'வில் தங்கப் பதக்கம் சூடக் குந்தகமாக இருக்கவில்லை. ஸியோலில் அவருக்குக் கிடைத்தது ஐந்தாவது தங்கப் பதக்கம். புதுதில்லி ஆசிய விளையாட்டுப் போட்டியில்தான் நான்காவது தங்கப் பதக்கத்தைப் பெற்றவர் இவர்

— குண்டுமணி



மகாத்மா காந்தி பிறந்த அக்டோபர் 2 ஆம் தேதி பிறந்த ஜப்பானிய விளையாட்டு வீரர் இவர். இவருக்கு பாடியாலா தேசிய விளையாட்டுக் கழகம் சர்வதேச விருதை வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

* நீச்சல் போட்டியில் கொரியப் பெண் சோயீ இவான் ஹீ ஜப்பானிய, சீன வெற்றி வீராங்கனைகளுக்கிடையே ஒரு தங்கப் பதக்கத்தை இருநூறு மீட்டர் பெண்கள் 'பாக் ஸ்டிரோக்' பந்தயத்தில் பெற்றது தனிச் சிறப்பு. அதோடு ஆசிய ரிகார்டும் அவர் கண்டிருக்கிறார். ஸ்கோர் போர்டில் வெற்றிச் செய்தியைப் படித்ததும் சோயி ஆனந்தக் கண்ணீர் வடித்தார். "இது என் வாழ்க்கையின் பொன்னான நாள். 1982 ஆசிய விளையாட்டுப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றேன். லாஸ் ஏஞ்ஜெல்ஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டேன். இந்தப் பந்தயத்தின் வெற்றிதான் எனது மிகப் பெரிய சாதனை!'' என்று ஆனந்தக் கண்ணீருக்கிடையே கூறினார், சோயி. அது மட்டுமல்ல; சோயி இந்தப் பந்தயத்தோடு ஓய்வு பெற விரும்புகிறார். சோயி இரண்டு தங்கப் பதக்கங்களோடு புகழேணியில் நிற்பதும் தன் பத்தொன்பதாவது வயதிலேயே ஓய்வு பெறப் போவதும் அதிசயங்கள்.

* பி. டி. உஷாவின் பிறந்த ஊரான பையோலியில் உஷா முதல் தங்கப் பதக்கம் பெற்ற செய்தி கேட்டதும் பள்ளி மாணவ மாணவியர் குதூகலமாகக் கூடி அவரது பெருமையை





ஸி.பி.ராமசுவாமி ஐயர்

தீபாவளியன்று வந்தவாசியில் பிறந்த இவர், சிறந்த சிந்தனையாளராகவும், செயல் வீரராகவும், நிர்வாகியாகவும் விளங்கினார்.

வக்கீலாகத் தொழிலைத் தொடங்கிய இவரது திறமையை உணர்ந்து, இவருக்கு உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவியை அளிக்க முன்வந்த போது, இவர் அதை ஏற்க மறுத்து விட்டார்.

1917 — 18 இல் இந்திய தேசிய காங்கிரஸின் செயலாளராகவும், பிறகு ஜவஹர்லாலுடன் கூட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

சென்னை அரசாங்கத்தின் சட்ட உறுப்பினராக இருந்தபோது, பைக்காரா, மேட்டூர் மின்சக்தித் திட்டங்களும் கொச்சி, தூத்துக்குடி, விசாகப்பட்டினத் துறைமுகத் திட்டங்களும் உருவாக முக்கிய காரணமாக இருந்தார்.

திருவாங்கூர் சமஸ்தான திவானாக இருந்த போது, இவர் செய்த சாதனைகள் பல. முதல் முதலாக இந்தியாவில் பஸ் போக்குவரத்தை அரசுடைமையாக்கினார். திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு முதல் முதலாக சிமெண்ட் சாலை போடச் செய்தார். இந்தியாவில் அலுமினியத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, ரயான் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகளை முதன் முதலாக அமைத்தார்.

இவை மட்டுமா? ஏழைக் குழந்தைகளுக்கு முதல் முதலாக மதிய உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார். திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்துவிடக் காரணமாயிருந்து, மகாத்மா காந்தியின் பாராட்டைப் பெற்றார்.

வாழ்த்திக் கொண்டே ஊர்வலமாகச் சென்றனர். உஷாவின் தந்தை இந்த மகிழ்ச்சிகரமான செய்தி கேட்டதும் தம் பெண்ணின் சாதனையை டீ. வி. யில் பார்க்கத் தம் கடையை மூடிக் கொண்டு வீட்டுக்கு ஓடினார்!

* ஸியோலில் சாம்ஷில் நீச்சல் குளத்தில் இருநூறு மீட்டர் 'பட்டர்ப்ளை' நீச்சலில் காஸான் வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஜப்பானிய நீச்சல் வீரர்களே அத்தனை பதக்கங்களையும் சுருட்டிக் கொண்டிருக்கும்போது, இந்திய நீச்சல் வீரர் காஸான் வெள்ளிப் பதக்கம் சூடியது தனிச் சிறப்பு. 1983 காட்மண்டு தெற்கு ஆசியப் போட்டியில் காஸான் எட்டுத் தங்கப் பதக்கங்களைப் பெற்றவர். காஸானுக்கு இருபத்தொரு வயதாகிறது! "பல வருஷங்களுக்குப் பிறகு இந்திய நாட்டுக்கு ஒரு வெள்ளிப் பதக்கம் பெற்றதில் பெருமைப்படுகிறேன்!" என்கிறார் காஸான்.

* பிலிப்பைன்ஸ் சினிமா நட்சத்திரம் லீடியா டீ வேகா நூறு மீட்டர் பந்தயத்தில் உஷாவிடமிருந்து தங்கப் பதக்கத்தைப் பறித்துக் கொண்டு விட்டார்! உஷா தன் மூன்றாவது தங்கப் பதக்க வெற்றியைத் தன் அறையில் தென்னிந்திய உணவு உண்டு மகிழ்ந்தார். பிலிப்பைன்ஸ் சினிமா நட்சத்திரம் லீடியா டீ வேகா நூறு மீட்டர் தங்கப் பதக்க வெற்றியைக் கொண்டாட டிஸ்கோ நடனத்துக்குச் சென்று களித்தார். பிலிப்பைன்ஸ் ஓட்டராணிக்கு நடனம் என்றால் கொள்ளை ஆசை. ஓர் ஒற்றுமை — இரு ஓட்ட வீராங்கனைகளும் 1964 ஆம் வருஷம் பிறந்தவர்கள்!

* குத்துச் சண்டையில் வல்லவர்கள் இந்தியாவில் உண்டு என்பதை வெள்ளிப் பதக்கங்கள் சூடி நிரூபித்தனர் பிராஸ்தானும் ஜெய்ராமும்.

* அடுத்த, அதாவது 11 வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சீனாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதும், "நாம் மீண்டும் சீனாவில் சந்திப்போம்" என்று விளையாட்டு வீரர்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் கூறி விடை பெற்றனர்.

படங்கள்; நன்றி: ஸ்போர்ட்ஸ்டார்

ஆசிரியர் தினத்தில் 1000 மடங்கு பலன்!

* 13 வது வயதுக்குள் தாய் தந்தையரை இழந்து, மாமாவின் ஆதரவில் வளர்ந்த ஒருவர், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாகவும், தமிழ்நாட்டின் தற்காலிக கவர்னராகவும் விளங்கினார் என்பதை அறியும் போது, நீதிபதி எம். எம். இஸ்மாயீல் போலப் படித்தால், ஆசிரியர்களிடம் மரியாதை காட்டினால் நாங்களும் உயர முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

— பி. சின்னத்தம்பி, வேதாரண்யம்.

* நீதிபதி அவர்களின் குழந்தைப் பருவம் எங்களுக்குப் பல படிப்பினைகளைத் தந்தது.

— சி. ஞானமணி, திருவாரூர்.

* செப்டம்பர் இதழில் வெளிவந்த வா. செ. குழந்தைசாமி அவர்களின் குழந்தைப் பருவக் கட்டுரை வாயிலாக அவர் ஆசிரியர்களை எவ்வளவு தூரம் மதிக்கிறார் என்பதை அறிய முடிந்தது. கட்டுரை என் நெஞ்சைக் கவர்ந்தது. ஆசிரியர் தினம் கொண்டாடும் சமயத்தில் இக்கட்டுரை வெளிவந்தது ஆசிரியர் சமூகத்திற்கு அளித்த ஒரு பெரிய கௌரவம் என்றே நான் கருதுகிறேன். ஆயிரம் ஊர்களில் ஆசிரியர் தினம் கொண்டாடிக் கிடைக்கும் பலனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு பலனை இந்தக் கட்டுரை தருகிறது. எங்கள் பள்ளித் தேர்ச்சி அறிக்கையில், இக்கட்டுரையின் கடைசிப் பத்தியை அச்சிட்டு வழங்கியிருக்கிறோம். தயவு செய்து அதை அங்கீகரிக்கக் கோருகிறோம்.

— சுப. முருகப்பன், தலைமை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப் பள்ளி, கந்தர்வ கோட்டை, செயலர், தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் கழகம் (புதுக்கோட்டை வட்டம்)

* காந்திஜியின் படத்தை வெளியிட்டதற்கு நன்றி. அதை அட்டையில் ஒட்டி எங்கள் வீட்டுப் பூஜை அறையில் மாட்டி விட்டேன்.

ஏன் காந்திஜியின் படத்தை வண்ணப்படமாக வெளியிடவில்லை?

— எம். எஸ். சுரேஷ் (7005), சென்னை —7.

(1983 இல் நான்கு வண்ணத்தில் காந்திஜி படத்தை வெளியிட்டிருந்தோமே!

— ஆசிரியர்)

* காந்தியடிகள், நாமக்கல் கவிஞர், பண்டிதமணி படங்களை அழகாக வெளியிட்ட கோகுலத்திற்கு நன்றி.

— என். சந்திரசேகரன், கோட்டாத்தூர்.

இனி, கோகுலம் உறுப்பினர் ஒவ்வொருவர் வீட்டிலும் மகாத்மாவின் திருவுருவப் படம் இருக்கும்.

— என். மாதேஸ்வரன் (12,950), ஒசூர்.

* லால்பகதூர் சாஸ்திரி, காமராஜர் படங்களை வெளியிட மறந்து விட்டீர்களா?

— சு. மணியரசு, கடலூர்.

(ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதம் பிறந்த தலைவர்களின் படங்களை வெளியிட்டு வருகிறோம். 1983 இல் இந்த இரு தலைவர்களையும் காணலாம்.

ஆசிரியர்.)

* 'அகடவிகடச் சக்கரவர்த்தி' ராமனின் கதையைக் கேட்டு காளிதேவி மட்டும் சிரிக்கவில்லை. கதையைப் படித்த நாங்களும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

— வி. எம். பாரதி, வி. எம். அச்சுதன், வி. எம். தெய்வானை, விளாங்குப்பம்.

* 'புதையல் வீடு' கதையின் ஆரம்பமே ராக்கெட் வேகத்தில் செல்கிறது. அடுத்த இதழ் எப்போது வரும் என ஏங்க வைக்கிறது.

— பெ. கலைச்செல்வன், டி.பி.எஸ். புரம்.

* எங்கள் அபிமான எழுத்தாளர் டாக்டர் பூவண்ணன் அவர்கள் கைவண்ணத்தில் அழகாகக் கட்ட ஆரம்பித்திருக்கும் 'புதையல் வீடு' முதல் அத்தியாயத்திலே ஆவலைத் தூண்டுகிறது. வெல் டன், டாக்டர் பூவண்ணன்.

— பா. ரமாபிரபா (3492), பா. சுகந்தி (6894), பா. ராஜேஷ்குமார் (5344), மதுரை — 11.

* வகுப்பறையில் சிறு தாள்களையும், நாவல் பழக் கொட்டைகளையும் போட்டு வந்த நான், சுவாமிகளின் 'தனி மரம் தோப்பாகுமா?' கட்டுரையைப் படித்துத் திருந்தி, அவ்வாறு செய்யாமல் இப்போது வகுப்பறையில் உள்ள கூடையில் போட்டு வருகிறேன்.

— பா. ராஜேஸ்வரி, கேமத்தான்பட்டி.

* 'வாடா மலர்' நாடகம் படித்தேன். கருத்தோடு நகைச்சுவையும் இருந்தது. இது போன்ற இன்னும் பல நாடகங்களை எங்களுக்கு அளிக்க வேண்டுகிறேன்.

— சு. ஜெ. கிருபானந், சக்திநகர், ஈரோடு.

* ராஜாஜியின் 'இராமாயணம்' 'மகாபாரதம்' இரண்டையும், தக்கார் ஒருவரைக் கொண்டு சுருக்கி 'குழந்தைகள் பதிப்பாக' வெளிவர ஏற்பாடு செய்யலாமே!

— ப. மணிவாசகன் (594), ப. மணிமேகலை (3203), தேவகோட்டை.

பிருந்தாவனம்

குறளில் வள்ளுவர்



திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றுது புத்தேள் உலகு.

ஈன்றாள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து.

ஏழு திருக்குறளில் முதல், இரண்டு, மூன்று — என வரிசையான எழுத்துக்களில் திருவள்ளுவர் தெரிகிறாரல்லவா?

— எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி.


ஓர் எழுத்து மாறினால்..?

குளவி	—	வண்டு
குழவி	—	குழந்தை
தளை	—	கட்டு
தழை	—	இலை, குழை
இரத்தல்	—	யாசித்தல்
இறத்தல்	—	சாவு
விளி	—	அழைத்தல்
விழி	—	கண்
பரவை	—	கடல்



பறவை	—	பட்சி
வாள்	—	கருவி
வாழ்	—	வாழ்ந்திடு

— விஜி (397), மதுரை.



என்ன போடுகிறார்கள்?


"ரேஷன் கடையிலே இவ்வளவு கூட்டமா இருக்கே! என்ன போடுறாங்க?"

"சத்தம் போடுறாங்க."

— சி.எல்.சரவணன் (706), மதுரை—1

நீல நிறம்

ஒரு முறை உடுமலைப் பேட்டைக்குச் சென்றிருந்த அம்மாவும் நானும் ஊர் சுற்றிப் பார்க்கக் கால்நடையாகச் சென்றோம். இருட்டிய பின்னர் வீடு திரும்பினோம். வீட்டிற்கு வந்தவுடன் பார்த்தால், அம்மாவின் கால், கை அனைத்திலும் நீலநிறம் படர்ந்து இருந்தது. 'பூச்சி ஏதாவது கடித்திருக்குமோ?' என்று நினைத்துப் பயந்து விட்டோம்.



அப்பொழுது என் சித்தி மகனிடமிருந்து சட்டென உண்மை வெளி வந்தது.


என் அம்மாவின் சேலை நிறமும் நீலம். அம்மாவின் கால் கைகளில் படர்ந்திருந்த நிறமும் நீலம். வந்த வழியில் மழையில் நனைந்ததால், சேலையின் சாயம் என் அம்மாவின் கைகளில் ஒட்டியிருந்தது. அனைவரும் நிம்மதி அடைந்தோம்.

— ஆ. ஜெரார்டு சுதாகர் (14,508), திருச்சி — 8.

வயது என்ன?

முரளி, நித்யாவின் அண்ணன். இவர்களுடன் அம்மாவும், அப்பாவும் இருக்கிறார்கள்.

நான்கு பேர்களின் வயதையும் கூட்டினால் 83 ஆண்டுகள் கிடைக்கும். அப்பாவின் வயதை ஆறால் பெருக்கினாலும், அம்மாவின் வயதை ஏழால் பெருக்கினாலும் ஒரே விடைதான் வரும். முரளியைப் போல அம்மா மூன்று மடங்கு மூத்தவள். முரளியோ தன் தங்கை நித்யாவை விட இரண்டு வயது மூத்தவன்.




அப்பா அம்மா, முரளி, நித்யா — நால்வரின் வயதென்ன?

விடை: நித்யா — 8
முரளி — 10
அம்மா — 30
அப்பா — 35

— மு. சுந்தரி (14,443), அரியலூர்.

இடி இடி

"இவன் குழந்தையாக இருந்த போது இவன் அருகிலே இடி விழுந்து விட்டது! நல்ல காலம், உயிர் பிழைச்சான்!"



"அதான் 'இடிஇடி'ன்னு சிரிக்கிறானே!"

— ஏ. தங்கராஜ் (14,011), ஈரோடு — 10.



கண்கள் வலிக்கும் எண்ணெயிலே
கங்காஸ்நானம் செய்கையிலே!

தின்பண்டங்கள் மிகஅதிகம்
தின்றேவயிற்று வலிஎடுக்கும்!

பட்பட்டென்றே வெடிச்சப்தம்
பட்டுக்காதுகள் மிகவலிக்கும்!
கட்கட் என்றே பட்சணங்கள்
கடித்துப் பற்கள் வலிஎடுக்கும்!

கடைக்கே அலைந்து பொருள்வாங்கி,
கால்கள் வலியால் துடிதுடிக்கும்!
வடைக்கே அரைத்து அம்மாகை
வலிக்கும்! உடம்பு சோர்ந்துவிடும்!

எப்படிச் செலவு ஆகுதென்று
எண்ணியே அப்பா மனம்வலிக்கும்!
இப்படி பற்பல வலியுளதால்
இனிநாம்தீபா 'வலி' என்போம்!

இதுவும் இந்தியாவில்தான்



நானும் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த மாமாவும் ஒரு நண்பரைக் காண்பதற்காக, காரில் சென்றுகொண்டிருந்தோம். அன்று நல்ல மழையாதலால் சாலை அருகில் உள்ள சேற்றில் கார் சக்கரம் சிக்கிக் கொண்டது. உடனே மாமா, ''இப்படிப் பட்ட மோசமான பாதைகளை இந்தியாவில் தான் காண முடியும்'' என்றார். நான் அருகிலிருந்தவர்களை அழைத்த போது நாலைந்து பேர் முகமலர்ச்சியுடன் உதவிக்கு வந்து காரை அப்புறப் படுத்தினர். அருகிலிருந்த ஒரு வீட்டுக்காரர் வாளி நிறைய நீர் கொண்டு வந்து சுத்தம்செய்ய உதவினார். எல்லாருக்கும் நன்றி தெரிவித்துவிட்டு, காரை எடுத்துப் புறப்படும் போது மாமா நெகிழ்ச்சியுடன், ''மற்றவர்களுக்கு உதவும் மனிதப் பண்புகளையும் இந்தியாவில்தான் காண முடியும்'' என்றார்.

—ந. கனகசபாபதி (294), பெருந்துறை

விடை என்ன?


1. நீளவாலு நாகம் மேலே மேலே பறக்குது அது என்ன?
2. வீட்டைச் சுமந்து வீதிக்கு வருவான் சின்னப் பையன், அவன் யார்?
3. சத்தம் போட்டுப் பாடுவான்; மனிதனில்லை. சொன்னதைத் திருப்பிச் சொல்வான்; கிளியில்லை. அவன் யார்?
4. கண்ணுக்குத் தெரியுது வெள்ளித் தட்டு. கைக்கு எட்டாத வெள்ளித் தட்டு. அது என்ன?
5. குடிகாரன் குழிக்குள் ஆடுறான். அவன் யார்?



விடை: 1. பட்டம், 2. நத்தை, 3. டேப் ரிகார்டர், 4. முழு நிலா, 5. ஆட்டுக் கல்.
என். மாலா (8223), தேவ கோட்டை.

குரங்கும் புலியும்


ஒரு சர்க்கஸ் கம்பெனிக்கு நல்ல வசூலைத் தேடித் தந்த மனிதக் குரங்கு ஒருநாள் திடீரென்று இறந்து விட்டது. வசூல் குறைந்து விடுமே என்ற கவலையில், சர்க்கஸ் முதலாளி ஒருவனுக்கு மனிதக் குரங்கு போல் வேஷம் போட்டு, சர்க்கஸில் வித்தை காட்டச் செய்தார். அன்று இரவு ஆட்டம் முடிந்ததும் மனிதக் குரங்கு வேஷம் போட்டவன் புலிக் கூண்டு அருகே நடந்து சென்றான். உடனே,



புலி அவனை எட்டிப் பிடித்தது. ''ஐயோ! புலி! புலி!'' என்று மனிதக் குரங்கு வேஷம் போட்டவன் கத்தினான். உடனே, அவனிடம், ''டேய் முட்டாளே! கத்தாதே! கத்தினால் நம் இருவருக்குமே வேலை போய்விடும்'' என்று ரகசியமாகச் சொன்னான் புலி வேஷத்திலிருந்த மனிதன்!
— வை. விஸ்வநாதன் (14,317), மண்மங்கலம்.

மக்களுக்குத் தேவை

எறும்பின் சுறுசுறுப்பும் எருதின் உழைப்பும்
நரியின் தந்திரமும் நாயின் விசுவாசமும்
கழுகின் பொறுமையும், காகத்தின் கூட்டுறவும்
புலியின் வீரமும், புறாவின் ஒழுக்கமும்




சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும்
மானின் வாழ்வும், மக்களுக்குத் தேவை.

(கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய 'அறிவுக்கு உணவு' நூலிலிருந்து.)
— கா. சேட்டு முகம்மது (3048), விருத்தாசலம்.

நூலும் ஆசிரியரும்

இங்குள்ள நூல்களின், ஆசிரியர்களின் பெயர்கள் இடம் மாறி இருக்கின்றன. கண்டு பிடிக்க முடியுமா?



1. நளவெண்பா — வீரமாமுனிவர்
2. பாஞ்சாலி சபதம் — மாணிக்க வாசகர்
3. குற்றாலக் குறவஞ்சி — உமறுப் புலவர்
4. தேம்பாவணி — புகழேந்திப் புலவர்
5. சீறாப்புராணம் — சீத்தலைச் சாத்தனார்
6. திருவாசகம் — பாரதியார்
7. மணிமேகலை — திருகூட ராசப்பக் கவிராயர்.

விடை: 1 = 4, 2 = 6, 3 = 7, 4 = 1, 5 = 3, 6 = 2, 7 = 5.
— கோ. முனிரத்தினம் (9523), அக்கசமுத்திரம்.



2. கலைப் புதையல்

ஈரமான விறகுகளை எரிக்க முயன்று, திரைப்படத்தின் கனவுக் காட்சியைப் போலப் பெருகி எழுந்த புகை மண்டலத்தில் கண்ணைக் கசக் [illegible]டிருந்தாள், சண்பகம்.

[illegible] அடுப்புக்கு முள் மரந் தான விறகு. வெட்டி எடுத்து காயப் போட்டு உள்ளே வைத்திருந்த விறகுகள் முற்றிலும்தீர்ந்துபோனதைஅன்று தான் உணர்ந்தாள். உடனே முட்புதரில்,தானே காய்ந்திருந்த சுள்ளிகளைப் பொறுக்கி வந்து அடுப்பில் வைத்தாள். அவை முன்னிரவு பெய்திருந்த மழையில்நனைந்திருந்ததால்எரியமறுத்துப் புகையை உண்டாக்கின.

''சே... இந்த ஈர விறகைக் கொண்டு எப்படித்தான் சமைக்கிறதோ?''

சண்பகம் அலுத்துக் கொண்டாள். அடுப்படியை விட்டுப் போகவும் ஆசைப்பட்டாள். போய் விட்டால் பிறகு யார் சமைப்பது? எவ்வளவு நேரமானாலும் அவள்தானே சமைக்க வேண்டும்? அதனால் கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் விறகை எரிய் வைக்க முயன்ற போது, வெளியே ஒரு குரல் கேட்டது.

''செங்கோடா! செங்கோடா!''

யாரோ வெளியே நின்று அழைக்கிறார்கள் என்பது சண்பகத்துக்குப் புரிந்தது.

செங்கோடனுக்கு நண்பர்கள் அதிகம். ஆனால் அவனைத்தேடிக்கொண்டு ஊரிலிருந்து விலகி ஒதுங்கியிருக்கும் வீட்டுக்கு வரும் நண்பர்கள் குறைவு. ஏன், அவள் வீட்டைத் தேடி வரும் விருந்தினரும் இல்லை. உறவினரும் இல்லை. அதனால் இந்தக் காலை நேரத்தில் செங்கோடனைத் தேடிக் கொண்டு யார் வந்திருந்தாலும் அது அவளுக்கு அதிசயந்தான்.

சண்பகம்புகைமண்டலத்திலிருந்து புறப்பட்டாள். 'அடுப்பில் தண்ணீர் தான். அரிசி வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்துக் கொண்டே, அடுப்படியிலிருந்து வெளியே வந்தாள். அந்த வீட்டின் வாசலுக்கு விரைந்தாள். வீட்டுக்கு முன்னே அழகான — நாகரிகமான ஒரு சிறுமி நிற்பதைக் கண்டதும், சண்பகத்தின் அதிசயம், பெரும் பேர் அதிசயமானது.

முந்தானையால் கண்ணில் இன்னமும் படிந்த ஈரத்தைத் துடைத்துக் கொண்டே, ''வா அம்மிணி'' என்று கூறினாள்.

அவளைக் கண்டு சண்பகம் அதி

சயப்பட, அந்தச் சிறுமி சுமதியோ, சண்பகத்தின் வரவேற்பைக் கண்டு அதிசயப்பட்டாள். யாராக இருந்தாலும், அந்த நேரத்தில் எதற்காக வந்தாலும் முதலில் ''வாங்க'' என்று வரவேற்கும் கொங்கு நாட்டுப் பண்பு சுமதியின் வயதுக்கேற்ப, ''வா, அம்மிணி''யாக மாறியிருந்தது.

சுமதி சிந்தனையை உதறி, ''அம்மா! நான் சுமதி. இந்த ஊரு பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன். செங்கோடனைப் பாக்கலாம்னு வந்தேன். வீட்டிலே இல்லையாம்மா?'' என்று கேட்டாள்.

''இல்லை அம்மிணி. அரிசி வாங்கக் கடைக்குப் போயிருக்கான். இப்போ வந்துடுவான்'' என்றாள் சண்பகம்.

''இவ்வளவு தூரம் வந்துட்டேன். இருந்து பாத்துட்டுப் போறேன்.''

சுமதி சொன்னாள். ''சரி, அம்மணி'' என்று கூறிய சண்பகம், தன்னை வீட்டுக்குள்ளே வருமாறு அழைப்பாள் என்று எதிர்பார்த்த சுமதி ஏமாந்தாள். ''இப்படி உட்காரு அம்மிணி'' என்று கூறிவிட்டு உள்ளே போய் விட்டாள். சண்பகம் உட்காரும்படி காட்டியது படிக்கட்டு. அந்தப் படியில் சுமதி உட்காராமல் சற்று விலகி நின்று அந்த வீட்டைப் பார்த்தாள்.

அது உண்மையில் வீடல்ல. மண்டபம். கருங்கல்லால் அமைக்கப்பட்ட மண்டபம். முன்வரிசையில் நான்கு இருந்தன. சுமதி மெதுவாக வீட்டை ஒரு சுற்றுச் சுற்றி வந்தாள். எல்லாப் பக்கமும் நான்கு தூண்கள். வீட்டுக்குள் அவள் போகாவிட்டாலும் உள்ளேயும் தூண்கள் இருப்பதைக் கண்டாள். ஒரு வரிசையில் நான்கு தூண்கள் வீதம் கொண்ட பதினாறுகால் மண்டபம்தான், வீடாக மாற்றப்பட்டுள்ளது என்பதைச் சிறிது நேரத்தில் புரிந்து கொண்டாள், சுமதி.

சுமதியின் தாத்தா ஒரு தமிழ்ப் புலவர். சென்னையில் பிரபலமான தமிழறிஞர். உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். அவர் அவளை எத்தனையோ கோயில்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். எவ்வளவோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அனைத்தும் சுமதியின் நினைவில் எட்டிப் பார்த்தன.

பதினாறு கால் மண்டபம் வடக்கு நோக்கியதாய் இருந்தது. அதன் தென் கிழக்கில் உள்ள நான்கு கால்களை நான்கு தூண்களை ஓர் அறையாகத் தடுத்திருந்தார்கள். தென் மேற்கில் உள்ள நான்கு தூண்களையும் ஓர் அறையாகத் தடுத்திருந்தார்கள். மற்றபடி வெளிப் புறத்தூண்களை ஓலைப் படலால் மூடியிருந்தார்கள். ஓலைகளுக்கு நடுவே தெரிந்த ஒவ்வொரு தூணையும் சுமதி நின்று கவனித்துப் பார்த்தாள்.

தூண் ஒவ்வொன்றும் நான்கு பட்டை கொண்டதாய் அமைந்திருந்தது. அந்தப் பட்டையில் அற்புதமான சிற்பம் செதுக்கப்பட்டிருந்தது.

சுமதி ஒவ்வொன்றாகக் கவனித்துப் பார்த்தாள்.

ஆற்றின் நடுவே வசுதேவர் தலையில் கூடையுடன் செல்கிறார். கூடையில் குழந்தைக் கண்ணன் குறுநகையுடன் காட்சி தருகிறான். பெய்யும் மழை கண்ணன் மீது விழாமல் தடுக்க, ஒரு நாகம் படம் விரித்துக் குடைபிடிக்கிறது. இது ஒரு தூண் காட்சி.

அடுத்த தூணில் வெண்ணெய் திருடும் கண்ணன்; இன்னொன்றில் தன்னைக் கட்டியுள்ள உரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து வரும் கண்ணன்; மற்றொன்றில் கோவர்த்தனகிரியைக் குடையாய்ப் பிடிக்கும் கண்ணன்; வேறொன்றில் காளிங்கன் தலை மீது நின்று அதன் வாலை ஒரு கையால் பிடித்து நடனமாடும் நிலையில் நிற்கும் கண்ணன்; பிறிதொன்றில் கம்சனைக் கொல்லும் கண்ணன்...

''இந்தக் கல் மண்டபம், கண்ணன் மண்டபமா?''

சுமதி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ''வந்து நேரமாச்சா, சுமதி?'' என்று கேட்டபடி செங்கோடன் அங்கு வந்தான்.

''உம்... ஆச்சு. ஆனா நேரம் போனதே தெரியலே, செங்கோடா, இதுதான் உன் வீடா?''

''ஆமாம். இது எங்க வீடு. சொந்த வீடு'' என்றான் செங்கோடன். 'சொந்த வீடு' என்பதை ஓர் அழுத்தத்தோடு சொல்வதைக் கவனிக்கத் தவறவில்லை சுமதி.

அதே நேரத்தில் சண்பகம் இரண்டு கையில் இரண்டு தம்ளர்களுடன் வந்



தான். "இந்த மோரைக் குடி அம்மிணி" என்று கூறியபடி ஒரு தம்ளரைச் சுமதியிடம் கொடுத்துவிட்டு, இன்னொன்றை மகனிடம் கொடுத்து விட்டுப் போனாள்.

சுமதி தம்ளரிலிருந்த மோரைப் பார்த்தாள். நிறம் மாறிய நீராகக் காட்சி தந்த அந்த மோரில், இஞ்சி, கொத்துமல்லி, பச்சை மிளகாய் — எதுவும் இல்லாமல் ஒருவகைப் புளித்த வாசனை வீசியது.

"சுமதி, நேத்து எனக்கு முறுக்கும் தேநீரும் கொடுத்தே. உனக்குத் தர இந்த நீர் மோரைத் தவிர வேற எதுவும் இல்லே."

செங்கோடன் குற்ற உணர்வுடன் கூறியதைக் கேட்டதும் சுமதி, அவசர அவசரமாக அதைப் பருகினாள். எப்போதும்சுவைத்து,கொஞ்சம்கொஞ்சமாகக் குடிப்பதுதான் சுமதிக்கு வழக்கம். ஆனால் அந்தப் புளித்த மோரை வைத்த வாய் எடுக்காமல், 'மடக், மடக்' கென்று ஒரே மூச்சில் குடித்து விட்டாள். ஒருவாய் குடித்து நிறுத்தினால் மறுமுறை குடிக்கத் தயக்கம் பிறக்கும் என்பது உறுதி. அதைக் கண்டு செங்கோடன் மனம் வருந்தும். அதனால் சுமதி தனக்குப் பிடிக்காத புளித்த மோரை ஒரே மூச்சில் குடித்து விட்டாள்.

"மோர் புளிக்குதா?" செங்கோடன் கேட்டான்.

"மோர் புளிக்குது. மோரைக் கொடுத்தவங்க அன்பு இனிக்குது. புளிப்பை உணர்வது நாக்கு. அது அதை அடுத்தவிநாடியே மறந்துவிடும். அன்பை உணர்வது மனம். அது எதையும் எளிதில் மறப்பதில்லே," — சுமதி சொன்ன பதிலைக் கேட்ட செங்கோடன், "சுமதி, நீ பேச்சிலே வல்லவள். அது கிடக்கட்டும், இவ்வளவு தூரம் நடந்து எங்கள் வீட்டைத் தேடி வந்திருக்கிறாயே, என்ன விஷயம்?" என்று கேட்டான் செங்கோடன்.

"நேத்து ராத்திரி கொட்டற மழையிலே நீ வீட்டுக்குப் போனே. இரவு நேரத்திலே நீ, உங்க தாத்தா ரெண்டு பேருலே ஒருத்தர் தவறாம வீட்டுலே இருக்கணும்னு சொன்னே. எனக்குக் காரணம் புரியலே. புரிஞ்சப்போ ஒரே அதிசயமாப் போச்சு. அதனாலே உங்க வீட்டைப் பாக்கலாம்னு காலையிலேயே வந்துட்டேன். இன்னைக்கு விடுமுறைதானே!"

"என்ன காரணம்? யாரு சொன்னா?"

"உங்க வீட்டை நீயும் உங்க தாத்தாவும் காவல் காத்துக்கிட்டு வர்றதுக்குக் காரணம்... சொல்லட்டுமா...?"

"உம்... சொல்லு..."

சுமதி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, குரலை இறக்கி, "உங்க வீட்டுலே புதையல் இருக்கு" என்று பரம ரகசியத்தை வெளிப்படுத்துபவள் போலக் கூறினாள். அதைக் கேட்டதும்,தீப்பட்டதும்படபடவென நிறுத்தாமல் வெடிக்கும் ஆயிரம் வெடிச் சரம் போல அவன் கடகட வெனச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கறே?"

சுமதி சீறும் குரலில் கேட்டாள்.

செங்கோடனின் சிரிப்பு வெடி தொடர்ந்தது. தொடர்ந்து கொண்டேயிருந்தது. அவன் சிரிக்கச் சிரிக்க, அவள் முகத்தின் சிவப்பு கூடிக் கொண்டேயிருந்தது. அவனால் தன் சிரிப்பை அடக்க முடியவில்லை. உடனே அவள் கையிலிருந்து மோர் தம்ளரைப் பறித்துக் கொண்டு, இரண்டு கைகளில் மோர் தம்ளருடன், இன்னும் தளராமல் தொடரும் சிரிப்புடன், அவன் வீட்டுக்குள் போனான். காட்சியில் அவன் படா விட்டாலும், காதிலே அவனது சிரிப்பொலி கேட்டுக் கொண்டே இருந்தது. சுமதி கோபம் பொங்க, தான் நின்ற இடத்தை விட்டு வீட்டின் வாசற் படிக்கு வந்தாள்.

ஒரு நிமிடத்தில் செங்கோடன் திரும்பி வந்தான். அப்போதும் விட்ட குறை தொட்ட குறையாகச் சிரிப்பு அவனிடம் ஒட்டிக் கொண்டிருந்தது. படியிலே நிற்கும் சுமதியின் கோபம் கொதி நிலையை அடைந்திருப்பதைக் கண்டு, "இல்லே, நான் சிரிக்கலே" என்று ஒரு கையால் வாயைப் பொத்தினான்.

வாய்தானா சிரிக்கும்? அவன் கண்கள் இன்னமும் சிரித்துக் கொண்டிருந்

தன.

''செங்கோடா, உங்க வீட்டிலே புதையல் இருக்குது — அதனுலேதான் நீங்க ஊருக்குள்ளே வசிக்காம இங்கேயே இருக்கிறீங்க. அதனுலேதான் தாத்தாவும் பேரனும் பகலும் இரவுமா இந்த வீட்டைப் பாதுகாத்து வர்றீங்க. ஊரிலே ரொம்பப் பேருக்கு உங்க வீடு புதையல் வீடுங்கற ரகசியம் தெரியுமாம். இதை ராமுதான் சொன்னுன். இங்கே வந்த என்னை, வா அம்மணின்னு அன்பா வரவேத்த உங்கம்மா, பாசத்தோடு மோர் கொடுத்த உங்கம்மா, உள்ளே வான்னு கூப்பிடாம இந்தப் படியிலே உட்காரச் சொன்னப்போ, உள்ளே புதையல் இருக்கிறதை நான் பாத்திடுவேனேன்னு பயந்த மாதிரிதான் இருக்கு. உங்க வீட்டிலே புதையல் இல்லேன்னு நீங்க ஏன் இப்படி வித்தியாசமா நடந்துக்கணும்?''

சுமதி கேட்டதும், செங்கோடனின் சிரிப்பு பறந்தது. ''சுமதி! எங்க வீட்டுக்குள்ளே எங்க குடும்பத்தார் தவிர யாரும் வந்ததில்லே. பொதுவா யாரையும் இங்கே அழைக்கிற பழக்கம் இல்லே. எங்க தாத்தாவைத் தேடி யாராவது வந்தாலும் இந்தப் படியிலே உக்காந்துபேசுவாங்க. இல்லே, அதோ தூரத்திலே இருக்குதே பெருமாள் கோயில், அங்கே உக்காந்து பேசுவாங்க. முதன் முதலா உன்னைக் கூப்பிடறேன். உள்ளே வா சுமதி! வீட்டிலே புதையல் இருந்தா நீ பாதி எடுத்துக்கிட்டு எங்களுக்குப் பாதி கொடு.''

செங்கோடன் அழைத்தான்.

சுமதியின் கோபம் தணிந்தாலும் அவள் உள்ளே போகவில்லை.


செங்கோடன் இரண்டு படி இறங்கி வந்து, உரிமையோடு, உள்ளன்போடு சுமதியின் கையைப் பிடித்து, ''வா, சுமதி!'' என்று அழைத்தான்.

செங்கோடன் முன்னே செல்ல, அவள் பின்னே சென்றுள். படிகளைக் கடந்து மண்டபத்துக்குள் சென்றுள். உள்ளே தென் கிழக்கு மூலையில் புகை எழுந்து கொண்டிருந்தது. அதன் மேற்கூரையில் கருமை படிந்திருந்தது. அவள் வெளிப்புறத்தில் பார்த்ததைப் போலவே உட்புறத்துத் தூண்களிலும் கோகுலத்துக் கண்ணனின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் உள்ளத்தைக் கவரும் உயிர்ச் சிற்பங்களாகத் திகழ்ந்தன. அவை அவளோடு பேசின. ஒவ்வொரு தூண் முன்னும் நின்று நின்று . தாள்.

ஒரு தூணில் குழலூதும் கண இருந்தான். வாய் இதழ் குலைழது குழலின் துளையில் பட்டும் படாமலும் இருக்க, ஏழு துளைகளை எழில் விரல்கள் மூடியும் மூடாமலும் இருக்கும் காட்சியைக் கண்ட போது, அவள் காதிலே குழலோசை கேட்பது போல் இருந்தது. குழலூதும் கண்ணன் அருகே ஒரு பசு அரைக் கண் மூடிய நிலையிலும் அதன் மடியினருகே மயங்கிய நிலையில் கன்றும் இருப்பதைக் கண்டாள்.

''கண்ணனின் குழலிசை கேட்டு இந்தப் பசு மயங்கி நிற்கிறது. பசி போகப் பாலைக் குடிக்க வந்த கன்றும் அதை மறந்து நிற்கிறது. இந்தக் காட்சியைப் பார்த்து நீயும் மயங்கி நிற்கறே, இல்லையா, சுமதி?'' செங்கோடன் கேட்ட போதுதான் சுமதி உணர்வு பெற்றுள்.

''இந்தக் கண்ணன் எங்கள் தெய்வம். இந்தக் கண்ணனை எப்போதும் பிரியக் கூடாதாம். கண்ணனைத் தனியே இருக்க விடாமல் இந்தத் தூணருகே என் தாத்தா படுத்துக் கொள்வார். அவர் இல்லையென்றுல் நான் படுத்துக் கொள்வேன். காலையிலும் இரவிலும் இந்தக் கண்ணனுக்குப் பூஜை செய்வோம். கற்பூரம் கொளுத்த வசதியில்லா விட்டால் ஓர் ஊதுவத்தியைக் கொளுத்தி, அதையே தீபமாகக் கொண்டு பூஜிப்போம். இப்படிச் செய்வது எங்கள் குலப் பழக்கமாம். தாத்தா, தாத்தாவுக்கு முந்திய கொள்ளுத் தாத்தா, எள்ளுத் தாத்தா முதலிய எல்லார் காலத்திலும் இது நடந்தது. இனியும் நடக்கும். இதற்காகத்தான் நான் ஊருக்குள் வந்து குடியிருக்கலே. தாத்தா எப்போதும் இந்த வீட்டிலேயே இருக்கிறுர். அவர் இல்லாத போது, நான் இருப்பேன். இதைச் சொன்னு ஊர் மக்கள் நம்பாமல் இங்கே புதையல் இருக்குன்னு பேசிக்கிறுங்க. சுமதி, நாங்க பரம ஏழைங்க. புதையல் இருந்தா எப்பவோ எடுத்துச் சகல



வசதிகளோடு வாழ்ந்திருப்போமே!''

செங்கோடன் கூறினான்.

''செங்கோடா, நீ பொய் சொல்றே! இங்கே புதையல் இருக்கு! மதிப்பிட முடியாத புதையல் இருக்கு! இதோ இந்தத் தூண் ஒவ்வொன்றிலும் இருக்கிற ஒவ்வொரு சிற்பமும் விலை மதிக்க முடியாத செல்வம். எங்க தாத்தா கோயில்களுக்குப் போறப்ப இந்த மாதிரி தூணுக்குப் பக்கத்திலே இன்னொரு தூணா நின்னுடுவாரு. 'என்ன தாத்தா, இப்படி பிரமிக்கிறீங்க'ன்னு கேட்டா, சிற்பத்தின் சிறப்பைச் சொல்லுவாரு. அவரு கூட மகாபலிபுரம், காஞ்சிபுரம், வேலூர் கோட்டை முதலிய இடங்களுக்குப் போயிருக்கேன். அவரு ஆறு மாசத்துக்கு முன்னாடிதான் செத்துப் போனாரு. அவரு இதைப் பாத்திருந்தா எப்படி சந்தோஷப்படுவார்! செங்கோடா, இது புதையல் வீடுதான்! மண்ணைத் தோண்டி எடுக்காமல் கண்ணைத் தொறந்து பார்த்தால் போதும்-இந்தப் புதையலை ஒவ்வொரு தூணிலும் பார்க்கலாம். கலைச் செல்வம் நிறைஞ்சிருக்கற இந்தக் கல் மண்டபம் உங்களுக்குச் சொந்தமா?''

''ஆமாம் சுமதி. அதுக்கான பத்திரமெல்லாம் இருக்கு. இப்ப பாழடைஞ்சிருக்கிற பெருமாள் கோயில் சேவகத்துக்காக இருநூறு, முந்நூறு வருஷங்களுக்கு முன்னாடியே இந்த மண்டபத்தையும் ஊரிலே கொஞ்சம் நஞ்சை நிலத்தையும் கொடுத்து சாசனம் செஞ்சிருக்காங்க. அதனாலே இந்த மண்டபந்தான் எங்க வீடு.

செங்கோடன் கூறினான்.

சுமதி அந்த வீட்டின் கலைச் செல்வத்தை மேலும் பார்த்துக்கொண்டிருந்தாள். செங்கோடன் பெருமையுடன் அவளுக்கு ஒவ்வொரு தூணைக் காட்டிக்கொண்டு வந்தான். பதினாறு தூண்களின் அறுபத்து நான்கு பக்கங்களில் அறுபத்து நான்கு கண்ணன் காட்சிகள்! அறுபத்து நான்கு புதையல்கள்! பொக்கிஷங்கள்!

சுமதியும், செங்கோடனும் மண்டபத்துக்குள்ளே இருக்கும் போது, வெளியேயிருந்து யாரோ, ''சோமு தாத்தா! சோமு தாத்தா!'' என்று கூப்பிடுவது கேட்டது.

செங்கோடன் வெளியே வந்தான். சுமதியும் அவனோடு வந்தாள்.

வெளியே, சுமார் ஐம்பது வயது

மதிக்கத்தக்க ஒருவர், சாயம் வெளுத்துப்போனகுடையோடுநின்றுகொண்டிருந்தார்.

''என்னங்க மாமா, இந்தப் பக்கம்?'' செங்கோடன் கேட்டான்.

''மாப்பிளே! இவ்வளவு நாளா கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கிற உங்களுக்கு அதிர்ஷ்டம் வந்திருக்கு. அதைச் சொல்லத்தான் வந்தேன். தாத்தா இல்லையா? யாரு இந்தப் புள்ளே?'' குடைக்காரர் கேட்டார்.

''மாமா! இவள் சுமதி. பட்டணத்திலிருந்து இங்கே நம்ம மருந்துக் கடை முத்துசாமி வீட்டுக்கு வந்திருக்கு..''

செங்கோடன் அறிமுகத்தை முடிக்கும் முன், ''இவர் உங்க மாமாவா?'' என்று கேட்டாள் சுமதி. கொங்கு நாட்டில் மாமா — மாப்பிள்ளை என்று சொந்தம் கொண்டாடிக் கொள்வது இயல்பு. அதற்குப் பொருள் இல்லை.

அதையெல்லாம் விளக்காமல், ''ஆமாம். பேரு ரங்கசாமி. இந்த ஊரிலே வீடோ, நிலமோ வாங்கணும்னு இவர் உதவி இல்லாமல் நடக்காது'' என்று கூறிய செங்கோடன் தொடர்ந்து, ''தாத்தா ஈரோடு போயிருக்காரு'' என்றான்.

''மாப்பிளே! மெட்ராசிலிருந்து எங்கிட்டே ஒரு சரியான பார்ட்டி வந்திருக்கு, சிலை, சிற்பம்னு உயிராம். அவர் உங்கவீட்டைவாங்கிக்கறேன்னு சொல்றார். ரெண்டாயிரம் பெறாத இந்த வீட்டுக்கு இருபதாயிரம் தரத் தயாரா இருக்கார். தாத்தா வந்ததும் சொல்லி, என்னைப் பார்க்கச் சொல்லு. இருபதாயிரத்துக்கு இதை வித்துட்டா, பத்தாயிரத்துக்கு ஊருக்குள்ளே நல்ல வீடா பாத்து நானே வாங்கித் தர்றேன். பத்தாயிரம் மிச்சமாகும்.''

செங்கோடனுக்கு இது புதுமையாய் இருந்தது.

''என்னது? ஊரை விட்டு விலகி இருக்கிற இந்தக் கல் மண்டபத்தையா இருபதாயிரம் கொடுத்து வாங்கப் போறாங்க? என்னாலே நம்ப முடியலையே!''

''அதிர்ஷ்டம் வர்றப்போ நம்ப முடியாததுதான் நடக்கும்.''

தரகர் அழுத்தமாகச் சொன்னார்.

சுமதிக்குச் சென்னையில் ஏதோ ஒரு பத்திரிகையில் படித்த செய்தி நினைவுக்கு வந்தது. திருவாரூர் கோயிலில் இருந்த கல் தூண்களை விலை கொடுத்து வாங்கி, சென்னையில் அதிசய உலகமோ அற்புத உலகமோ அமைக்க எடுத்துச் சென்று விட்டார்களாம். அவள் உடனே தரகரிடம், ''ஐயா, இந்த வீட்டை விலை கொடுத்து வாங்கறவங்க இங்கிருக்கிற தூணைப் பெயர்த்து எடுத்துப் போக வர்றாங்களா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் இல்லே. மண்டபம் இங்கேதான் இருக்கும். வாங்கறவர் அப்பப்போ இங்கே வந்து தங்குவார். அவ்வளவுதான்,'' என்று சுமதியிடம் சொன்ன ரங்கசாமி, ''மாப்பிளே! தாத்தா வந்ததும் என்னைப் பார்க்கச் சொல்லு!'' என்று கூறிவிட்டு நகர்ந்தார்.

''சுமதி! தூணிலே இருப்பது விலை மதிக்க முடியாத செல்வம்னு சொன்னே! அதுக்கு விலை நிர்ணயமாயிடுச்சு. இருபதாயிரம்!'' என்றான் செங்கோடன்.

சுமதியிடமிருந்து பதில் இல்லை. செங்கோடன் அவள் முகத்தைப் பார்த்தான். அவள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது தெரிந்தது.

''சுமதி என்ன யோசனை?'' செங்கோடன் கேட்டான்.

''செங்கோடா, இந்த வீட்டிலே கலைப்புதையலைத்தவிரவேறுபுதையல் நிச்சயமா இருக்கு'' என்று சுமதி சொன்னாள்.


''எங்களுக்குத் தெரியாத புதையல் எங்க வீட்டிலே இருக்கா?'' — வியப்போடு வினவினான், செங்கோடன்.

''இருக்கு. உங்களுக்குத் தெரியாத புதையல் வேறு யாருக்கோ தெரிஞ்சும் இருக்குது.'' என்று சுமதி சொன்னாள்.

''சுமதி சொல்வது உண்மையாக இருக்குமோ? நம்ம வீட்டிலே புதையல் இருக்குதோ? இல்லேன்னா இதைப் போய் இருபதாயிரம் ரூபாய் கொடுத்து யாரு வாங்குவாங்க?'' என்று செங்கோடனும் நினைத்தான்.


அந்த வீட்டில் அப்படி என்ன புதையல் இருக்கும்?

(தொடரும்)




மீனாட்சி கல்யாணம்


கதை: ஆனந்தி
படம்: விஜய்





யாகம் நடக்கும் போது விசுவரூபன் மனதுக்குள்...
தேவர்கள் தோல்வி அடையட்டும்; அசுரர்கள் மேன்மை அடையட்டும்!
விசுவரூபனின் கபடநாடகம் இந்திரனுக்குப் புரிந்து விட்டது.
நயவஞ்சகன்! தேவ குருவாக இருந்து கொண்டு அசுரர்களின் வெற்றிக்குப் பிரார்த்திக்கிறான்!
கோபத்துடன் இந்திரன் விசுவரூபனைத் தாக்க...
உன் தலைகளைக் கொய்கிறேன்!
விசுவரூபனின் மூன்று தலைகளும் வெட்டுண்டதும் மூன்று பறவைகளாக மாறிப் பறந்தன....
இதென்ன அதிசயம்!
செய்தி அறிந்து துவஷ்டா கோபமடைந்தார். அக்னி வளர்த்து மூலிகைகளைப் போட்டு மந்திரங்கள் கூறி...
என் மகனைக் கொன்ற இந்திரனைப் பழி வாங்க ஒரு அசுரன் இதில் தோன்ற வேண்டும்!



விருத்திராசுரன் தோன்றினான்...
தாங்கள் கட்டளையை நிறைவேற்றுவேன்! இந்திரனைக் கொல்வேன்!
விருத்திராசுரனுக்கு அஞ்சி இந்திரன் சகல உலகங்களிலும் ஓடிக் கொண்டேயிருந்தான்.
இதற்கிடையில் எமன், வாயு, அக்னி, வருணன் முதலான தேவர்கள், ததீசி முனிவரிடம் வந்து...
தாங்கள் மகத்தான தியாகம் ஒன்று செய்தால் இந்திரன் தப்புவார். நாங்களும் பிழைத்துப் போவோம்.
ஞாலம் வாழ தேவர்கள் வாழவேண்டும். என்ன வேண்டுமோ கேளுங்கள்!
ஞான முனிவரே! விருத்திராசுரனைக் கொல்லத் தவவலிமை மிக்கத் தாங்கள் முதுகெலும்பைக் கொடுத்தருள வேண்டும்.
ததீசி முனிவர் மகிழ்ச்சியுடன் உயிர்த்தியாகம் செய்ய, அவர் முதுகெலும்பு இந்திரனிடம் வஜ்ராயுதமாக உருமாறி விளங்கியது.
ஆ! என்ன பிரகாசம்!


வஜ்ராயுதத்துக்குப் பயந்து விருத்திரா சுரன் கடலுக்கடியில் தவம் புரியச் சென்று விட்டான். இந்திரன் அகத்தியரை அணுகி...
அசுரனைக் கண்டு பிடிக்கக் கடல் நீரை நீங்கள்தான் வற்றும்படி செய்ய வேண்டும்!
அகத்தியர் தம் உள்ளங் கையினால் கடல் நீரை மூன்று முறை அள்ளிக் குடித்து விட்டார்...
அதோ அசுரன்! வஜ்ராயுதத்தை வீசுகிறேன்!
விருத்திராசுரனை எளிதில் வென்றான் இந்திரன் ஆனால்...
குரு விசுவரூபனையும் விருத்திராசுரனையும் கொன்ற பாபத்தால் நிலை இழந்து போனேனே....
தேவர்களின் குருவான பிருஹஸ்பதி மனமிரங்கி, திரும்பி வந்து...
எல்லாம் என்னை நீ அவமதித்ததால் வந்த வினை... போகட்டும். உன் பாபங்கள் தீரக் கடம்பவனம் சென்று சோமசுந்தரரைப் பூஜை செய்!
அவ்வாறே இந்திரன் கடம்ப வனம் சென்று...
செங்கண போற்றி! ஆதிசிவ பரஞ்சுடரே போற்றி!....



லிங்க வடிவிலிருந்து ஈசன் தோன்றி....
இந்திரனே! இந்தப் புண்ணிய பூமியில் பூஜை செய்ததால் உன் பாவங்கள் நீங்கின. முன் போலவே தேஜஸுடன் விளங்குவாய்!
ஒரு சமயம் ஐராவதமும் துர்வாஸ முனிவரிடம் சாபம் பெற்றது. இதே கடம்ப வனத்தில் சிவனைப் பூஜித்து சாபம் நீங்கப் பெற்றது.
கடம்பவனத்துக்கு அருகில் மணவூரில் வசித்து வந்தான் தனஞ்செயன்.
வியாபாரத் துக்காக அசலூர் புறப்படுகிறேன்...
இரவு நேரம்; ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்!
கடம்ப வனத்தைக் கடக்கும் போது... இருட்டில், காட்டில் வழி தவறித் திரிகிறேனே!
தனஞ்செயன் ஓர் ஒளியைத் தூரத்தில் கண்டான்....
ஆ! அதோ ஒரு மண்டபம். .... வெளிச்சம் ... அங்கு போய் வழி விசாரிக்கலாம். ...



மண்டபத்தை நெருங்கவும் ஓர் அபூர்வக் காட்சியைக் கண்டான்...
ஆ! என்ன அதிசயம்! தேவர்கள் அல்லவா லிங்க பூஜை செய்கிறார்கள்!
பூஜை முடிந்து தேவர்கள் திரும்பும் போது....
இந்திரனும் ஐராவதமும் பூஜித்து நற்கதி அடைந்த இடத்தில் நாமும் பூஜை நடத்தி புண்ணியம் பெற்றோம்...
விடிந்தபின் வழிகண்டு பிடித்துச் சென்ற தனஞ்செயன், பாண்டிய மன்னனைச் சந்தித்து...
அரசே! கடம்ப வனத்தில் தேவர்கள் அர்த்த ஜாம பூஜை செய்யக் கண்டேன்... அவர்கள் பேசிக் கொண்டதைக் கேட்டேன்...
மன்னன் மனம் மகிழ்ந்து...
அந்த மண்டபத்தைப் பெருங்கோயிலாக்கி விடுவோம். சுற்றிலும் அந்தப் புண்ணிய பூமியைத் திருத்தி நகரம் அமைப்போம்!
அழகான நகரத்தைக் கட்டி முடித்தான் குலசேகர பாண்டியன்.



சிவபெருமான் மன மகிழ்ந்து சந்திர கலையிலிருந்து அமுதத்தையும் கங்கை நீரையும் நகரத்தின் மீது சொட்டும்படி செய்தார்.
இந்நகர் மதுரை என்று பெயர் பெற்றுச் சிறக்கட்டும்!
குலசேகர பாண்டியனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தான் மலையத்துவஜ பாண்டியன். அவன் தேவி காஞ்சனமாலை.
வாழ்க! வாழ்க!
ஜெயவிஜயீ பவ!
மன்னரும் தேவியும் தனித்திருக்கும் போது...
எவ்வளவோ தான தருமங்கள் செய்தும் நமது குழந்தை இல்லாக் குறை தீரவில்லையே...
வருந்தாதே! புத்திரகாமேஷ்டி யாகம் நடத்துவோம்.
மன்னன் முனிவர்களையும் பண்டிதர்களையும் ஆயிரக்கணக்கில் அழைத்து பெரிய யாகம் செய்தான்.
அக்னயே ஸ்வாஹா!




அக்னி அடங்கியதும் குண்டத்திலிருந்து மூன்று வயதுப் பெண் குழந்தை தோன்றினாள்...
கண்ணே வருக!
கற்கண்டே வருக!
அப்போது அசரீரி ஒலித்தது...
இந்தக் குழந்தை வளர்ந்து தன் மணாளனைக் கண்டதும் மூன்றாவது தனம் மறைந்து போகும்!
ஈசன் திரு அருளால் தோன்றிய இந்தக் குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிடுவோம்...
தடாதகை அம்மானை ஆடுவதில் நிகரற்று விளங்கினாள்... நன்கு வளர்ந்தாள்...
அடேயப்பா! பத்து அம்மானை!
கல்வி கற்பதிலும் ஊக்கம் காட்டினாள்...
உங்கள் மகள் வேத சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கற்றுத் தேறிவிட்டாள்!
மலயத்துவஜன், அசுவமேறுவதற்கும் தடாதகைக்குப் பயிற்சி அளித்தான்.
அடுத்து யானை ஏற்றமும் பயில வேண்டும்!



யானை ஏற்றமும் பழகினாள் தடாதகை...
எனக்குப் பயமே இல்லை அப்பா!
பலே!
வில் வித்தையும் வாள் வீச்சும் கற்றாள்...
மந்திரியிடம் பேசினான் மலையத்துவஜ பாண்டியன்.
சுமதி! தடாதகை எல்லா வித்தைகளையும் கற்றுத் தேர்ந்து விட்டாள். அவளுக்கு முடிசூட்டிப் பார்க்க ஆசை!
சித்தம் மன்னவா!
நல்லநாள் பார்த்து ஒன்பது புனித நதிகளிலிருந்து நீர் கொணர்ந்து...



பார்வதிதேவியின் அவதாரமான தடாதகைக்கு ரத்னக் கிரீடம் அணிவித்து மகிழ்ந்தான் மலயத்துவஜன்...
இனி நாடாளும் பொறுப்பு உன்னுடையது...
நகர்வலம் வந்தாள் தடாதகை. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்.
பாண்டிமாதேவி வாழ்க!
தடாதகைப் பிராட்டியார் வெல்க!
மலயத்துவஜ பாண்டியன் ஒரு நாள் சிவனடி சேர்ந்தார்... மந்திரி சுமதி...
வருந்த வேண்டாம்; அவர் எந்தக் குறையுமின்றிக் கண்மூடினார். அவர் எதிர் பார்த்ததை விடச் சிறப்பாக நாடாள்வது உங்கள் பொறுப்பு.
வீரம், அறிவு, நாடாளும் திறமை இவற்றோடு பக்தியும் பெற்று விளங்கினள் தடாதகை.
அம்மா! பிரசாதம் எடுத்துக் கொள்!
கண்ணே! உன் ஆட்சித் திறன் கண்டு உலகமே வியக்கிறது...



அவ்வாறிருக்க நீ ஏன் சதா வருத்தமாய் இருக்கிறாய்?
உனக்குத் தகுந்த கணவர் எங்கே இருக்கிறார்? தெரியவில்லையே!
அம்மா எதுவும் ஈசன் திருவுள்ளப்படி சரியான சமயத்தில் நடக்கும்... நான் திக்விஜயம் கிளம்புகிறேன்... கவலைப் படாதே!
போர்க் கோலம் பூண்டு புறப்பட்டாள் தடாதகை...
கன்னி நாடு வெல்க!
ஜெய விஜயீ பவ!
இமய மலைச் சாரலை நெருங்கினாள் தடாதகை. அங்கு விளையாடிக் கொண்டிருந்த பூத கணங்கள்...
தூரத்தில் சத்தம் கேட்கிறதே!
புழுதிப் படலம் தெரிகிறது!
ஐயய்ய! பெண்கள் கூட்டம்!
ஓஹோஹோ! யுத்தம் செய்ய வருகிறார்கள்!



கேலியும் குறும்பும் சற்று நேரத்தில் வேதனையாக முடிந்தது...
ஐயய்யோ!
செத்தேன் பிழைத்தேன்!
புறமுதுகிட்ட பூதகணங்கள் ஓட்டமாக ஓடி நந்திதேவரிடம்...
சுவாமி! தெற்கே இருந்து வந்துள்ள பெண்களின் படையை எங்களால் எதிர்க்க முடியவில்லை...
நல்ல வேடிக்கை!
நந்திதேவரே போருக்கு வந்தார். பயங்கரயுத்தம்...
இதென்ன விந்தை! என் ஆயுதங்கள் எல்லாமே இவள் படைகள் முன் வலுவிழந்து விழுகின்றனவே!
நந்திதேவரும் தோல்வி கண்டு...
ஈசனே! அம்பிகை போல ஒரு பெண்! எங்களால் அவளை எதிர்க்கமுடியவில்லை...
நானே வருகிறேன்!
சிவபெருமானை ஏறிட்டுப் பார்த்தாள் தடாதகை...
ஆ! இவரைக் கண்டதும் என் கை வில் நழுவுகிறது... மனத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது...


போர்புரிய மனமின்றி நாண முண்டாகிறது...
முன்பு விண்ணிடை ஒலித்த வாக்குப்படி பெற்றோர் கூற அறிந்திருந்த தடாதகை, அமைச்சர் சுமதியை அழைத்து...
இங்கு தோன்றியுள்ள சிவபெருமானே என் கணவர்...
தடாதகை விருப்பப்படி சுமதி ஈசனிடம் தூது சென்று வர...
தேவி! மதுரை சென்று உன் தாயுடன் இரு. நல்ல முகூர்த்தத்தில் உன்னை நான் மணம் புரிந்து கொள்வேன்.
மதுரை திரும்பிய தடாதகைக்குப் பாண்டிய மக்கள் ஆரவார வரவேற்பு அளித்தனர்.
திக்விஜய நாயகி வாழ்க!
வெற்றித்திலகம் வாழ்க!
கைலாயத்தில்...
சுவாமி! தங்களுக்கு மணக் கோலம் செய்ய குபேரன் ஆசைப்படுகிறார்...


சர்வேஸ்வரன் சுந்தரேசனாக மதுரைக்குப் புறப்பட்டார்.
மதுரையில் தேவர்களை வரவேற்றார் அமைச்சர் சுமதி.
வரவேணும், வரவேணும்!
ஹர ஹர ஹர ஹர...
சிவ சிவ சிவ சிவ....
தமது தங்கையாகிய தடாதகையை சிவ பெருமானுக்கு தாரை வார்த்துக் கொடுத்தார் மகாவிஷ்ணு....
திருமணம் இனிது நடந்தேறிய பின்னர் முனிவர்கள் பதஞ்சலியும் வியாக்ரபாதரும் வணங்கி...
சுவாமி! தாங்கள் பொன்னம் பலத்தில் செய்யும் தாண்டவத் தைப் பார்த்த பின்பே நாங்கள் உண்பது வழக்கம்...
தில்லைப் பொன்னம்பலம் போல மதுரையில் வெள்ளியம்பலம் மாணிக்க பீடத்துடன் இறங்கியது.



தடாதகையைப் பார்த்துப் புன்னகை புரிந்தபடி ஆனந்த தாண்டவம் ஆடினார் சிவன்.
வெள்ளியம்பலத்தாடல் போற்றி! நிருத்தனே போற்றி! போற்றி!
திருமணத்துக்கு வந்தவர்கள் அனைவரும் திருப்தியாக விருந்துண்டார்கள்.
ஆயினும் உணவு ஏராளமாய் மீந்தியது... காஞ்சன மாலை சற்று கர்வத்துடன்...
முப்பத்து முக்கோடி தேவர்கள் வருவார்கள் என்று மலைமலையாகச் சமைத்தோம்! யாரும் சரியாகவே சாப்பிடவில்லை...
தடாதகை கணவரிடம் தாயின் மனக் குறை பற்றிக் கூற...
இதோ என் குடை தாங்கும் குண்டோதரன் பசி தீர உணவு கொடு!
குண்டோதரன் சமைத்திருந்த அத்தனை உணவு வகைகளையும் அள்ளி விழுங்கிய பிறகு...
இன்னும் ஏதாவது இருக்கா?



உக்கிராண அறையில் புகுந்து காய்கறி நவதானியங்கள் உப்பு பருப்பு முதலிய அனைத்தையும் தின்று தீர்த்தான் குண்டோதரன்.
அரை வயிறு கூட நிறைய வில்லையே!
சிவபெருமான் திண்டலாக....
தடாதகை! குண்டோதரன் சாப்பிட்டு விட்டானா? மற்ற பூத கணங்கள் பசியோடு காத்திருக்கிறார்கள்.
காஞ்சனமாலையின் கர்வம் அடங்கியது.....
சுவாமி! மன்னியுங்கள்
மற்ற கணங்களையும் அனுப்பினால் உலகையே விழுங்கி விடுவார்கள்!
குண்டோதரன் அங்கு வந்து...
அது சரி என் பசிக்கு என்ன வழி?
அதோ அந்த இலையில் உள்ள தயிர் சாதத்தைச் சாப்பிடு.
பசி அடங்கினான் குண்டோதரன். தாகம் வாட்டியது.
கங்கையே! மதுரையில் நீ வைகை நதியாகப் பாய்வாயாக!
குண்டோதரன் தாகமும் அடங்கியது. ... சோமசுந்தரப் பாண்டியரும் தடாதகைப் பிராட்டியாரும் பாண்டிய நாட்டில் செங்கோல் செலுத்தி வந்தார்கள்.



என் குழந்தைப் பருவம்

நீதிபதி
எம். எம். இஸ்மாயீல்
(தொடர்ச்சி)

என் அண்ணன் முறையினரான முகம்மது கௌஸ் பாங்காக் சென்ற பிறகு அவரும் நானும் சேர்ந்து செய்த வேலைகளை நான் ஒருவனே செய்யும் படியாக ஆயிற்று.

ஒருநாள் பசு மாட்டைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும்பொழுது அது தன் கொம்புகளால் என்னை முட்டித் தள்ளி விட்டது. அதனால், எனக்குக் காயமும் உண்டாகிவிட்டது. வலியோ தாங்க முடியவில்லை. அந்த ஆத்திரத்தில் ஒரு கம்பை எடுத்து அதனை நன்றாக அடித்துவிட்டேன். சில நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு ஞானோதயம் உண்டாயிற்று. 'அது ஒரு விலங்கு; அதற்குப் பகுத்தறிவு இல்லை; அது முட்டிவிட்டது என்பதற்காகக் கட்டி வைக்கப் பட்ட அம்மாட்டை நாம் அடித்து விட்டது தவறு அல்லவா?' என்பதே அது.

உடனே அதே கம்பை எடுத்து என் தொடைகளில் நானே அடித்துக் கொண்டேன். என்னை நானே அடித்துக் கொள்ளும் அடி உரத்ததாக இல்லாமல், இருப்பது இயற்கையே. ஆனால், அதுவே எனக்கு அப்பொழுது திருப்தி அளிப்பதாக இருந்தது.

இந்த நிகழ்ச்சியிலிருந்துதானோ என்னவோ ஆயுள் முழுவதும் ஒரு பழக்கம் வந்துவிட்டது. தற்செயலாக, எதிர்பாராமல் உடலோ, மனமோ பாதிக்கப்பட்டால், அது தெரிந்தோ, தெரியாமலோ நாம் செய்துவிட்ட தவறுக்கு நமக்குக் கிடைத்த தண்டனை; கணக்கு நேராகிவிட்டது; எதிர்காலத்தில் தண்டனை கிடைக்கும் என்று பயந்து கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதுதான் அந்த மனப் போக்கு.

எனக்குப் பாட்டி முறையினரான ஓர் அம்மையார் அப்பொழுது இருந்தார்கள். முகம்மது கௌஸ் அவர்களின் அத்தை ஆவார்கள். அவர்களே என் தமக்கையார்க்கு மாமியாரும் ஆவார். மிகமிகத் திறமைசாலி. உறுதியும் தைரியமும் குன்றாதவர்.

அவர் இறப்பதற்கு முன் ஓராண்டு காலம் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். அவருடைய மகன் (என் தமக்கை புருஷன்) முகம்மது யூசுப் மரைக்காயர் என்பவர். தாயி





னுடைய உறுதியும், தைர்யமும் அச்சமின்மையும் அவரிடம் நிரம்ப இருந்தன.

அவருடைய வர்ணனைத் திறன் அசாத்தியமானது. வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் அவர்களுடைய நாவல்களை விரும்பிப் படிப்பார். இரவில் அனைவரும் உணவு கொண்டு, படுக்கப் போகுமுன் வீட்டில் உள்ள பெண்கள், பிள்ளைகள் ஆகிய அனைவரும் அவரைச் சூழ்ந்திருப்போம். தான் படித்த கதையை எல்லோர்க்கும் சொல்வார். அவர் கதை சொல்லும் விதம் அனைவரையும் கவரும். அவருடைய வர்ணனை ஆசிரியருடைய வர்ணனையை மிஞ்சுவதாக இருக்குமே அன்றிக் குறையாது.'

அவரும் வியாபாரத்திற்காகப் பாங்காக் சென்றுவிட்டபோது வீட்டில் கதை சொல்ல யாரும் இல்லை. நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடந்த அம்மூதாட்டியார்க்குப் பொழுதுபோகாது. ஆகையால், நான் பள்ளியில் இருந்த நேரம் தவிர மற்ற நேரங்களில் வீட்டில் இருக்கும் பொழுது நாவல்களை ஒவ்வொன்றாக அந்த அம்மையாருக்குப் படித்துக் காட்ட வேண்டும்.

இப்படியாக வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார், ஜே. ஆர். ரங்கராஜு, வை.மு. கோதை நாயகி அம்மாள் போன்றோர் நாவல்கள் அனைத்தையும் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

நாகையில் பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்பில் (3 வது படிவம்) சேர்ந்தது 1934ல். அன்றிலிருந்து 1938 வரை (எஸ். எஸ். எல். சி. படித்து முடிக்கும்வரை) எனக்கு மிக்க சுவையான அனுபவங்கள் கிடைத்தன.

நாகைப்பட்டின உயர்நிலைப் பள்ளியில் ஒரே வகுப்பில் பல மாணவர்கள் இருந்ததனால் அவ்வகுப்பு ஏ,பி, சி,டி என்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருக்கும்.

இப்பிரிவுகளுக்கு வகுப்பாசிரியர் வேறு வேறு. ஒரே பாடத்தை ஒரே ஆசிரியர் எல்லாப் பிரிவுகட்கும் படித்துக் கொடுப்பதும் இல்லை. எட்டாம் வகுப்பில் எனக்குத் தமிழாசிரியர் ஆக இருந்தவர் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்தவர். தெய்வசிகாமணி அய்யங்கார் என்ற பெயரினர். தலைப்பாகை, நெற்றியில் திருமண், நீண்ட கோட், பஞ்சக்கச்சம் கொண்ட அவர் தோற்றமே தனி. சற்றுக் கடுமையாக இருப்பார். மாணவர்களை அடித்துவிடவும் செய்வார்.

அந்தப் பள்ளியில் அதுதான் எனக்கு முதல் வகுப்பு. ஆகையால் என்னைப் பற்றி ஆசிரியர்கள் புரிந்து கொள்வதற்குக் கொஞ்ச காலமாயிற்று. அதற்குப் பிறகு மீண்டும் ஆசிரியர்களுடைய அன்பு மழையில் நனைந்தேன்.

ஒன்பதாம் வகுப்பில் எனக்குத் தமிழாசிரியர் ஆக இருந்தவர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள். சில மாதங்கள்தான் அவர் அவ்வகுப்பில் ஆசிரியராக இருந்தார். பிறகு திருவாரூர் போர்டு ஹைஸ்கூலுக்குப் பணியாற்றப் போய்விட்டார்.

அங்கே, கலைஞர் கருணாநிதி அவருடைய மாணவர். நாகைப்பட்டினத்திலிருக்கும் பொழுது ஒன்பதாவது வகுப்பில் படித்த சில மாதங்களிலேயே எனக்கு அவரிடம் மிகுந்த மரியாதையும், பிணைப்பும் உண்டாயின.

அவரும் என்னிடம் மிகுந்த அன்புடனேயே இருந்தார். ஆனால், குறிப்பிட்ட எந்த மாணவரிடமும் தமக்குத் தனியான அன்பிருப்பினும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார்.

அவருடைய கூர்ந்த மதியை எல்லோரும் பாராட்டினோம். பரீட்சையில் ஆங்கிலமாக இருந்தாலும் சரி, தமிழாக இருந்தாலும் சரி ஒரு பாலைக்

குறிக்கும் (Gender) சொல்லைக் கொடுத்துவிட்டு, மறுபால் சொல்லைத் தருமாறு மாணாக்கர்களிடம் கேட்கும் பழக்கம் அன்றும் உண்டு; இன்றும் இருக்கிறது.

ஒன்பதாம் வகுப்பில் கால் வருஷப் பரீட்சை. அவர் இத்தகைய கேள்வி ஒன்றைக் கேட்டிருந்தார். (ஏவலாளன் — இதன் மறு பால் எது?)

'அன்' விகுதியில் முடிவன ஆண்பால் என்றும், 'இ' விகுதியில் முடிவன பெண்பால் என்றும் பொதுவாகக் குறிப்பிடுவது வழக்கமாதலால் நாங்கள் யாவருமே 'ஏவலாளி' என்று பதில் கொடுத்திருந்தோம்.

விடைத் தாள்களைத் திருத்திய பிறகு, நாங்கள் எழுதிய 'ஏவலாளி' எனும் சொல் தவறானது என்றும் 'ஏவலாட்டி' என்பதுதான் சரியானது என்றும் அவர் உணர்த்தினார்.

எங்களைச் சோதிக்க அவர் காட்டிய இத்திறமைக்காக நாங்கள் எல்லோரும் அவரைப் பாராட்டினோம். வியந்தோம்.

அவர் நாகையை விட்டுத் திருவாரூர் செல்லும்பொழுது அவர்க்கு ஒரு பிரிவுபசார விழா நிகழ்த்தினோம். அப்பொழுது பேசிய நான் அழுதே விட்டேன்.

அவர் நாற்காலியில் அமர்ந்திருக்க பக்கத்தில் மொட்டைத் தலைமேல் தொப்பியுடனும், இடுப்பில் லுங்கியுடனும், சட்டையுடனும் நான் நிற்க எடுத்துக் கொண்ட புகைப்படம் இன்னமும் அவரிடம் இருக்கிறது.

அவர் திருவாரூர்க்குச் சென்ற பிறகு வாரம் ஒருமுறையோ, இரு வாரங்களுக்கு ஒருமுறையோ நான் நாகூரிலிருந்து, திருவாரூர்க்குச் சென்று அவரோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு, மதிய உணவு அவருடன் கொண்டு மாலையில் நாகூர் திரும்புவது வழக்கம்.

1935ல் உண்டான இத்தொடர்பு இன்றும் எனக்கும் அவர்க்கும் இடையே நீடித்துக் கொண்டிருக்கிறது.

ஒன்பதாவது வகுப்பில் இருக்கும் பொழுது நான் நன்றாகப் படிக்கக் கூடிய பையன் என்பது சக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தெரிந்துவிட்டது. அது அன்றியும், ஏற்கெனவே உண்டாகிவிட்ட மேடைப் பேச்சுப் பழக்கம் வளரவும் செய்தது. எனவே எல்லோர்க்கும் நான் தெரிந்தவன் ஆகிவிட்டேன்.


ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு வகுப்பு மாணவர்கள் பல பிரிவினராகப் பிரிக்கப் பெறும் பொழுது, அப்பிரிவுகளின் ஆசிரியர்கள் தம் பிரிவில் (செக்ஷன்) முதல் மார்க் எடுக்கும் திறன் கொண்ட மாணவன் இருக்க வேண்டும் என்று விரும்புவர்.


என்னையும் என் போன்ற சிலரையும் தம்பிரிவுகட்குக் கொள்ள வேண்டும் என்று தலைமை ஆசிரியரிடம் வற்புறுத்தும் ஆசிரியர்களையும் நான் பார்த்திருக்கிறேன்.

சொத்தில் பாகப் பிரிவினையின் போது சமமாகப் பிரித்துக் கொள்வது போல, அவ்வாசிரியர்கள் தலைமை ஆசிரியர் முன்வந்து அமர்ந்து அவ்வாண்டுத் தொடக்கத்தில் வந்திருக்கும் மாணவர்களைத் தரம் பார்த்து, எல்லாப் பிரிவுகளும் சமமான எண்ணிக்கையர் (தரத்தில்) இருக்குமாறு கோருவர்; பொறுக்கி எடுத்துக் கொள்வர்.

தமிழ்நாட்டில் ரெவின்யூ போர்டில் முதல் அங்கத்தினராக இருந்து ஓய்வு கொண்ட திரு கே.எஸ்.சிவசுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ்., அப்போது என்னுடன் படித்தவர். அவர் ஒரு பிரிவில் இருக்க நான் பிறிதொரு பிரிவில் இருப்பேன். இதுபோன்ற நிலையில் இரண்டு மூன்று மாணவர்களும் இருந்தனர்.

அப்பொழுது பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தவர் திரு டி. வெங்





சுடாச்சாரியார் என்பவர். அவர் மிக நல்லவர். அவர் மிகவும் ஆசாரத்துடன் வாழ்ந்தவர். ஆனால், அவருடைய ஆசாரம் எல்லா மாணவர்களுடனும் ஒரே மாதிரியான அன்புடன் பழகுவதற்குக் குறுக்கே நிற்கவில்லை.

அவர் என்னிடத்தில் அலாதி அன்பு வைத்திருந்தார். பள்ளியின் நிர்வாகம் சம்பந்தமான சில முக்கியமான சமாச்சாரங்கள் பற்றிக்கூட என்னை அழைத்துக் கேட்பார்.

மிக மெல்லிய குரலில் பேசுவார். ஒழுக்கத்தில் உயர்ந்தவர். எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றவர்.

நான் பதினோராம் வகுப்பு (எஸ். எஸ்.எல்.சி.) படித்துக் கொண்டிருக்கும் பொழுது வகுப்பில் என் பிரிவிற்கு ஒரு புதிய ஆசிரியர் நியமிக்கப்பட்டார். அவர் இளைஞர். திருமணம் ஆகாதவர். இதற்கு முன் ஆசிரியப் பயிற்சி இல்லாதவர். எம்.ஏ. படித்தவர்.

என். ஆராவமுதன் என்பது அவர் பெயர். ஆண்டு ஆரம்பத்திலேயே என்னைத் தனியாக அழைத்து, ''இஸ்மெயில்! நான் ஆசிரியப் பயிற்சி இல்லாதவன்; முதன்முறையாக நியமிக்கப்பட்டிருக்கிறேன். இந்த செக்ஷன் மாணவர்கள் நல்ல மார்க்குகள் வாங்காவிட்டால், 'தலைமை ஆசிரியர் ஓர் அய்யங்கார்; இவரும் ஓர் அய்யங்கார். ஆகையால் திறமையோ, ஆசிரியப் பயிற்சியோ இல்லாத இவரை நியமித்துவிட்டார்கள்' என்று பிறர் சொல்வார்கள்.

பள்ளிக்கூடத்திலேயே முதல் மார்க் வாங்கி அத்தகைய பேச்சு எதற்கும் இடமில்லாமல் நீதான் செய்ய வேண்டும்'' என்று சொன்னார்.

நானும், ''சரிதான் சார். என்னால் முடிந்தவரையில் செய்கிறேன் சார்'' என்று சொல்லி வந்துவிட்டேன்.

ஆண்டு முழுவதும் மிக்க அக்கறையுடனும் இந்த மனோநிலையின் பின்னணியில் மிகப் பொறுப்புடனும் கஷ்டப்பட்டும் பாடம் சொல்லிக் கொடுத்தார். ஆண்டு முழுவதும் பல பரீட்சைகள் வைத்தும், ஆண்டு இறுதிப் பரீட்சைக்கு எங்களைத் தயார் செய்தார். 1938ல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் பள்ளிக்கூடத்திலேயே முதல் மார்க் வாங்கியவனாக நான் தேறினேன்.

முடிவுகள் வந்த சமயத்தில் அவர் கும்பகோணம் சாரங்கபாணி சந்நிதித் தெருவில் வசித்து வந்தார்.

நான் நாகூரிலிருந்து கும்பகோணம் சென்று அவர் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து அவரைக் கண்டு 'நான் சொன்ன சொல்லைக் காப்பாற்றிவிட்டேன் சார்' என்று சொன்னேன். அவர் அளவற்ற மகிழ்ச்சியுடன் என்னைத் தழுவிக் கொண்டார். அவர் பல ஆண்டுகள் சிறப்பாக ஆசிரியப் பணி புரிந்து தென்னக ரயில்வேயில் உயர் பதவி வகித்து ஓய்வு பெற்று வாழ்கிறார்.

அவர் குமாரர்களில் ஒருவர்தாம் பிரபல பின்னணிப் பாடகரான ஏ.வி. ரமணன் என்பவர்.

(ஐந்தாவது பாரமோ, ஆறாம் பாரமோ நினைவில் இல்லை) திரு சந்தானம் அய்யங்கார் என்பவர் வேறு எங்கேயோ பணிபுரிந்துவிட்டு ஓய்வு பெற்ற பிறகு, இங்கு வந்து சேர்ந்தார்.

வயதானவராயினும் கணீரென்று பாடுவார். அவர் தமிழ் வகுப்பில் செய்யுள் பகுதிகளை எல்லாம் இசையுடன் பாடுவார். தாம், மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களுடைய மாணவர் என்றும், அவர் பிரசங்கம் செய்யும்பொழுது, விளக்க வரும் பாடல்களைத் தான் இசையுடன் பாடுவது வழக்கம் என்றும் சொல்லி இருக்கிறார்.

இத்தகைய ஆசிரியர்கள் பலர் தாம் என்னில் இலக்கிய ரசனையை ஊக்குவித்தவர்கள்.

அன்றைய ஆசிரியர்களுடைய நிலையே வேறு; தங்களிடம் படித்த மாணவர்களிடம் அவர்கள் எடுத்துக் கொண்ட அக்கறை இவ்வளவு, அவ்வளவு என்று சொல்வதற்கு இல்லை. அந்த அக்கறைதான் மாணவர்களிடையே இருந்த திறமையை முழுமையாக மலரச் செய்தது.

நாகைப்பட்டினத்தில் படித்துக் கொண்டிருக்கும்பொழுது, நாகூரிலிருந்து என்னுடன் வந்து, பயின்ற இன்னொரு முஸ்லீம் மாணவருடைய உதவியினால் புதியதோர் நண்பரைப் பெற்றேன். அவரால் நான் பெரும் பயன் அடைந்தேன்.

காசிநாதன் செட்டியார் என்ற ஒருவர் நாகூரில் நாட்டு மருந்துக் கடை ஒன்று வைத்திருந்தார். அவர்தாம் நாகூர்க்கு தினமணி, முதலிய தினசரிப் பத்திரிகைகளுக்கும் ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், ஆனந்த போதினி போன்ற வார மாத இதழ்களுக்கும் விற்பனை ஏஜெண்டு.

நாகைப்பட்டினம் பள்ளிக் கூடத்திலிருந்து மாலை நாகூர்க்கு வீடு திரும்பிய உடன் சற்று நேரத்திற்கு எல்லாம் அவர் கடைக்குச் சென்றுவிடுவேன்.

அங்கே அமர்ந்து இந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் படிக்கும் வாய்ப்பும் அவற்றில் வெளி வந்ததைப் பற்றி விவாதிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த வாய்ப்பு என் தமிழறிவை வளர்க்கப் பெரிதும் உதவிற்று.

நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுதே, ஆனந்த போதினிக்குக் கட்டுரை எழுதி அனுப்ப, அதுவும் வெளி வந்திருக்கிறது.

கிட்டத்தட்ட 13 அல்லது 14 வயதிலேயே நான் காங்கிரஸ்வாதி ஆகி விட்டேன். நாகூரில் நாகைப்பட்டினத்தில் (பெரும்பாலானவர்கள் முஸ்லீம்கள்) உள்ள முஸ்லீம்கள், முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர்கள். என்போன்ற ஒரு சிலரே காங்கிரஸ்வாதிகள்.

எனவே, அந்தப் பெரும்பாலான முஸ்லீம்களுடைய அலட்சியத்திற்கும், வெறுப்பிற்கும், ஏளனத்திற்கும் ஆளானேன். ஆனால், நாங்கள் அதற்கெல்லாம் அஞ்சவில்லை. அப்பொழுதே கதர் உடுக்கத் தொடங்கி விட்டேன். அது என்னுடைய பொருளாதார நிலையில் அவ்வளவு இலகுவாக இல்லை. எனக்கென்று என் பெற்றோர் விட்டுச் சென்ற உடைமைகள் சிறிதும் இல்லை.

எல்லாம் தாய் மாமன் ஆகிய அப்துல்அஜீஜ்அவருடையபோஷணை தான். அப்துல் அஜீஜ் அவர்கள் வெளிநாட்டுத் துணி வியாபாரி. இங்கும் அப்படியே, பாங்காக்கிலும் அப்படியே.

எனவே எங்கள் வீட்டில் எல்லோரும் — ஏன், ஊரில் உள்ளோரில் பெரும்பாலோரும் — வெளிநாட்டுத் துணிதான் அணிவார்கள். இந்த நிலையில் நான் மாத்திரம்தான் கதர் அணிபவன். இவ்வாறு கதர் அணிவது மிகக் கடினமாகத்தான் இருந்தது. நான்



நன்றாகப் படிக்கிறேன் என்ற ஒரே காரணமே இதை எல்லாம் என் மாமாவைப் பொறுத்துக் கொள்ள வைத்தது. என் மாமா அதிகம் படித்தவர் அல்லர். ஆனால், மிக்க திறமைசாலி. பிறரோடு பேசுவதில் வெகு சமர்த்தர். கூர்ந்த மதியினர். மிகச் சிறு வயதிலேயே இறைவன் ஒருவனே என்ற உண்மை அறிவினை எனக்கு உணர்த்தி ஆழமாகப் பதிய வைத்தவரும் அவரே.

அதிர்ஷ்டவசமாக எனக்குச் சில வாய்ப்புக்கள் தாமே வந்தன. எந்தக் காரணத்தினாலோ, சுவாமி விவேகானந்தரை எனக்கு வெகுவாகப் பிடித்துவிட்டது.

காவி நிறத் தலைப்பாகை கட்டி,

அதன் முனை நெஞ்சில் தவழ, இரு கைகளையும் கட்டியவாறு நின்ற நிலையில் படத்தில் காணப் பெறும் அவர் தோற்றம் என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது.

பன்னிரண்டு, பதின்மூன்றும் வயதினிலேயே அப்படத்தின் முன்நின்று நானும் அப்படியே கைகளைக் கட்டிக் கொண்டு இருக்க முயன்றது நினைவில் நின்று என்றும் அகலாத ஒன்று.

காசிநாதன் செட்டியார் மூலமாக இராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் பற்றிய நூல்களைப் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

அக்காலத்தில் எங்களூரில் முஸ்லீம் இளைஞர்கள். 'மீலாது நபி' எனப்படும் இஸ்லாத்தின் நபி ஆகிய



முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்ததின விழாவை விமரிசையாகக் கொண்டாடுவர். இவ்விழாவிலும் நான் முழுமையாக ஈடுபட்டிருந்தேன்.

'மீலாத்' கூட்டங்களுக்குச் சென்று பிரசங்கம் செய்யும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அப்படிப் பேசுவதற்காக, இஸ்லாத்தைப் பற்றியும், முகம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றியும் படித்துத் தெரிந்து கொள்ளும் அவசியமும் ஏற்பட்டது.

எனவே, இரண்டினையும் ஒரே சமயத்தில் படிக்கவும், ஒப்பு நோக்கவும், ஆராயவும் அற்புதமான வாய்ப்பு இறை அருளால் அப்பொழுதே கிட்டி விட்டது.

இவை அனைத்திற்கும் ஊக்குவிப்பதுபோல் அமைந்திருந்த ஒன்றைச் சொல்ல வேண்டும்.

நாகூரில் பள்ளிக் கூடங்களுக்கோ, கல்லூரிகளுக்கோ சென்று படித்த முஸ்லீம்கள் அதிகமாக இல்லாவிட்டாலும் பத்திரிகைகளையும், இதழ்களையும், நூல்களையும் படித்து, தங்கள் அறிவை வளர்த்துக் கொண்ட இளைஞர்கள் பலர் இருந்தார்கள்.

அவர்கள், 'நாகூர் வித்தியாபி விருத்தி சங்கம்' என்ற ஓர் அமைப்பின் மூலம் பேச்சு, தர்க்கம், விவாதம் ஆகியவற்றின் பயிற்சிக்கு இடமளித்து, ஓர் அருமையான வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவ்வமைப்பில் நானும் இணைந்து என் திறமையைப் பெருக்கிக் கொண்டேன்.

பின்னர் இந்த சங்கம், அதனுடைய முக்கியஸ்தர்கள் வெளிநாடுகள் சென்றுவிட செயல்படாமல் போயிற்று. எனவே 'மாணவர் பிரசங்கப் பயிற்சிக் கழகம்' என்ற அமைப்பு உருப் பெற்றது.

அப்பொழுது அரசாங்கப் பணியிலிருந்து தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் பொது வாழ்வில் ஈடுபட்ட முஸ்லீம் பெருமகனார் ஒருவர் இருந்தார்.

அவர்தாம் பா. தாவூத் ஷா சாகிப் பி.ஏ. என்பவர்.

அவர் காங்கிரஸில் ஈடுபட்டு அதன் பணிகள் பலவற்றில் பங்கு கொண்டவர், 'தாருல் இஸ்லாம்' என்ற ஒரு பத்திரிகையை நடத்தி, அதில் பல முற்போக்குக் கருத்துக்களை வெளியிட்டவர்.

அவர்தாம் 'நாகூர் வித்யாபிவிருத்தி சங்க'த்திற்கு முன்மாதிரியாக இருந்தவர். அவரது முற்போக்குக் கருத்துக்களைப் படிக்காத முஸ்லீம்களில் சிலர் அவரை வெறுக்கவும் பழிக்கவும் செய்தனர். ஆனால் அவர் அவற்றை எல்லாம் பொருட்படுத்தவில்லை!

அழகிய, எளிய தமிழில் நீண்ட நேரம் பேசக் கூடியவர். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை நன்றாகப் படித்தவர். தன்னுடைய பிரசங்கத்தினூடே தமிழ் இலக்கியக் கருத்துக்களையும், இஸ்லாமியக் கருத்துக்களையும் சரளமாக

வெளியிடுவார்.

மீலாத் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து அவரைப் பேசுமாறு நான் அழைத்திருக்கிறேன். அவருடன் பல ஊர்களுக்கும் சென்று நானும் பேசி இருக்கிறேன்.

இந்தத் துறையில் அவர் எனக்குப் பெருத்த ஊக்கம் கொடுத்திருக்கிருர். அவரை 'இராமாயணக்கார-சாகிபு' என்றும் சொல்வார்கள். அந்த அளவிற்குக் கம்ப ராமாயணத்திலும் பிற தமிழ் இலக்கியங்களிலும் அவர்க்குப் பயிற்சி இருந்தது. அவருடைய குமாரர் என்.பி. அப்துல் ஜப்பார் என்பவர் என்னுடன் மாநிலக் கல்லூரியில் படித்தவர். பி.ஏ. பட்டம் பெற்றவர். தம் தந்தையாருடன் பல இடங்களுக்கும் பிரசங்கங்களுக்குச் செல்வார்; தானும் பேசுவார்.

சென்னை மாநகராட்சி கவுன்சிலராகவும் தான் சார்ந்த காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சென்று பணியாற்றிய தாவூத் ஷா சாகிப் அவர்கள் ஆல்டர்மென் ஆகவும் பணியாற்றியிருக்கிருர்கள்.

சிறப்புக்குரிய செய்தி என்னவென்ருல் அவரது சாதாரணப் பேச்சில் கூட இலக்கணப் பிழை இராது. பேச்சுத் தமிழுக்கும், எழுது தமிழுக்கும் வேறுபாடு இராது.

தம் மகன் அப்துல் ஜாபர் அவர்கள் வீட்டினுள் இருக்க, யர்ரேனும் அவரைத் தேடி வந்தால், உடனே "தம்பி! அப்துல் ஜப்பார்! உம்மைப் பார்க்க யாரோ வந்திருக்கிருர்கள். இங்கே வாரும்" என்றுதான் குரல் கொடுப்பார். அத்தகைய பெருமகனுருடைய தாக்கமும் இளவயதில் என்னிடம் உண்டாகி இருந்தது.

இத்தகைய நன்மக்களின் உறவுகளினுலும், தொடர்புகளினுலும் பொதுவாக இலக்கிய ரசனையோடு கம்பனைப் பெரிதும் சுவைக்கும் வாய்ப்பும் கிடைத்துவிட்டது.

காங்கிரஸில் சேர்ந்து இருந்ததனுல் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் படிக்கும் வாய்ப்பும் அவர் பற்றிப்பேசும்வாய்ப்பும்அப்பொழுது கிட்டியது.

நான் படித்த நாகைப்பட்டினம் நேஷனல் ஹைஸ்கூல் தனியார் பள்ளியாக இருந்தபோதிலும், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டது. எனவே காங்கிரஸை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்கும் எந்தப் பொது நிகழ்ச்சியையும் வெளிப்படையாக நடத்திவிட முடியாது.

1934—1938க்கு இடையே மாகாண சுயாட்சி நாட்டில் அமுலுக்கு வந்தது அதற்கானதேர்தலும்நடந்தது. காங்கிரஸ் கட்சியும் தேர்தலில் பங்கு கொண்டு மாபெரும் வெற்றியும் பெற்றது. அதில் நான் முழுமையாக ஈடுபட்டிருந்தேன்.

அந்தச் சூழ்நிலையில்தான் எங்கள் பள்ளியில் சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்தேன்.

அரசுக்குப் பயந்த பலருடைய எதிர்ப்பும்இருந்தது. பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த அரசாங்க உத்யோகஸ்தரின் பிள்ளைகள் இதில் கலந்து கொள்ள விரும்பவில்லை.


ஆசிரியர்களோ, காங்கிரஸிடம் மனமார்ந்த அனுதாபம் கொண்டவர்களாக இருந்தனர். அதன் காரணமாகவும் அவர்கள் என்னிடம் வைத்திருந்த அன்பின் காரணமாகவும் வெற்றிகரமாக நான் இதனைச் செய்ய முடிந்தது.

அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்

பேராசிரியர் மயிலை சிவமுத்து

(தொகுப்பு : துணிகை உலகநாதன்)



பிருந்தாவனக் கவியரங்கம்



காக்கை

காக்கை நல்ல காக்கையடா!
கறுப்புநிறக் காக்கை!
வாழ்க்கையிலே மாந்தருக்கு
வழிகாட்டும் காக்கை!

காலையிலே ஊரையெல்லாம்
துயிலெழுப்பும் காக்கை!
மாலையிலே குளித்துவிட்டு
மனையடையும் காக்கை!

வண்ணமிகு கருஞ்சிறகில்
பாரதியா ருக்கு,
கண்ணனது திருவுருவைக்
காட்டியதோர் காக்கை!

வள்ளுவனர் திருக்குறளில்
வந்திருக்கும் காக்கை!
கொள்ளும் இரை சிறிதெனினும்
கூடியுண்ணும் காக்கை!

பாட்டிதனை ஏமாற்றிப்
பறித்தவடை தன்னை,
காட்டுநரி யிடங்கொடுத்து
ஏமாந்த காக்கை!

சனியனுக்கு வாகனமாய்த்
தானமைந்த தெனும்,
மனிதனுக்கு வழிகாட்டும்
மாண்புடைய காக்கை!

காக்கையிடம் இருக்கின்ற
ஒற்றுமையை என்றும்,
வாழ்க்கையிலே கடைப்பிடித்தால்
வளம்பெறலா மன்றோ?

கப. கலாவதி (14,348), நாரைக்கிணறு.

வாருங்கள், போகலாம்



ஆற்றங் கரைக்குப் போகலாம்
ஆடி விளையாடலாம்.


குளத்தங் கரைக்குப் போகலாம்
குத்தி விளையாடலாம்

ஏரிக் கரைக்குப் போகலாம்
எட்டிப் பிடித்து ஆடலாம்.

கடற்கரைக்குப் போகலாம்
கபடி விளையாடலாம்.

பள்ளிக் கூடம் போகலாம்
பாடங்களைப் படிக்கலாம்.

— ஜெ. ரேவதி (1797), திருக்கோவிலூர்



நேரு மாமா

நேரு மாமா நல்லவர்;
　நேர்மை யுள்ளம் கொண்டவர்;
பார தத்தைக் காத்தவர்;
　பண்பிற் சிறந்த பெரியவர்!

பஞ்ச சீலம் தந்தவர்;
　பாரோர் பகையைத் தீர்த்தவர்;
கொஞ்சிக் கொஞ்சிப் பேசிடும்
　குழந்தை உள்ளம் கொண்டவர்!

சாந்த மூர்த்தி பாபுவின்
　சத்ய வழியிற் சென்றவர்;
காந்தம் போல மக்களைக்
　கவரும் சக்தி கொண்டவர்!

— ஏ. எஸ். முத்துக்குமார் (14,186),
செட்டிக்குறிச்சி.

காலைப்பொழுது



தென்றல் வீசுது பார்
தெற்கிருந்து வருகுது பார்
மென்மை யான தென்றல்
மெதுவாக வீசுது பார்.

மரங்கள் ஆடுது பார்.
மாங்குயில்கள் கூவுது பார்.
அணில்கள் ஓடுது பார்
ஆடி ஓடிவிளை யாடுதுபார்.


தும்பி பறக்குது பார்
துளித் தேனைத் தேடுதுபார்
மலர்விட்டு மலர் சென்று
மதுவை நிரப்புது பார்.

கிளிகள் பறக்குது பார்
'கீச், கீச்' சென்குது பார்
காட்சி இது நடக்கின்ற
காலைப் பொழுதினைப் பார்.

— பா. ஆனந்து (14,083), பாளையங்
கோட்டை.

தபால் பெட்டி

செப்பு நிறத்தில் ஒரு பெட்டி,
சந்தில் — முனையில் நிற்குது பார்!




கவராம், கார்டாம் அஞ்சல்களை
கவர்ந்தே உள்ளே இழுக்குதுபார்!

பாப்பா பிறந்த செய்தியுடன்,
பாட்டி உடலின் நலத்தினையும்,
அப்பா விடத்தில் பணம்கேட்டு
அண்ணன் வரையும் அஞ்சலையும்,

சிப்பாய்த் துரையாம் சினன்வரும்
செய்தியும் தாங்கித் தந்திடுமாம்.
தப்பாய் விலாசம் எழுதிவிடின்
தவறி எங்கோ போய்விடுமாம்!

— எம். ஆர். ஸ்ரீப்ரியா (225),
சென்னை — 33.



எம். எஸ். கோபால்.

முசிறிக்குப் போனது திருச்சி வானொலி!


"இதோ பாருங்கள், நம் தேச விடுதலைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்ட தலைவர்களை! இதோ கேளுங்கள் அவர்களின் அரிய கருத்துக்களை' என்று கூறுவது போல் அமைந்தது, சுதந்திர தினத்தையொட்டி முசிறியில் நடந்த குழந்தைகளின் சிறப்பு நிகழ்ச்சியில் கண்ட ஒரு காட்சி — உணர்ச்சியூட்டும் வகையில் இந்தக் காட்சியை வழங்கியவர்கள் மேட்டுப் பாளையம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள்.

தீரர் சத்திய மூர்த்தியும், மக்கள் தலைவர் காமராஜரும் சந்தித்துப் பேசிக் கொண்ட உள்ளத்தைத் தொடும் ஒரு காட்சியை சத்தியமூர்த்தி நாடகத்திலே அருமையாக அளித்தார்கள் தாத்தையங்கார் பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள்.

அங்கு ஒரு புதுமையான கவியரங்கமும் நடைபெற்றது. மணமேடு சிவானந்தா நடுநிலைப் பள்ளி மாணவர்கள் 'தேசியச் சின்னங்கள்' என்ற பொதுத் தலைப்பில், தேசியப் பறவை, தேசிய மிருகம், தேசிய மலர், அசோகச் சின்னம் ஆகியவை பற்றிப் பாடினார்கள். கவியரங்கத் தலைவர் சிறுவன் செல்வராஜும், பங்கு கொண்டவர்களும் கவிதை மழை பொழிந்து எல்லாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டார்கள்.

சேர்ந்து பாடும்போது சிந்தைகள் இணைகின்றன, ஒற்றுமை உணர்வு ஓங்கி நிற்கிறது, தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி, முசிறி அமலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் சேர்ந்து பாடினார்கள். பத்துப் பத்துப் பேராக தேசியக் கொடிபோல் ஆரஞ்சு, வெள்ளை, பச்சை நிறங்களில் ஆடை அணிந்து அரங்கிலே தோன்றிய காட்சி அழகாக இருந்தது. சேவை உணர்வைத் தூண்டும் சாரணர் இயக்க நிகழ்ச்சிகளை மேட்டுப் பாளையம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் சிறப்பாகச் செய்து காட்டினர்.

நமது நாடு சீர்பெற்று விளங்க வேண்டுமானால், கிராமப்புற வளர்ச்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும்-புதிய திருப்பம்-என்ற நாடகத்தைக் காட்டுப்புத்தூர் ஜமீன்தார் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மிக நன்றாக நடித்துக் காட்டினர்.

* தீரர் சத்தியமூர்த்தி நாடகம்	* வாத்து நடனம்
	



• வில்லுப் பாட்டு

கிராமியக் கலைகளை இன்றைய தலைமுறையினரும் சிறப்பாகப் போற்றி வருகிறார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டும் வகையில், குளித்தலை அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் கரகாட்டம், கோலாட்டம், வில்லுப் பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளை வழங்கினர். அந்தந்த கிராமியக் கலையின் இயல்பு மாறாமல் மரபுப்படியே அவர்கள் செய்து காட்டியது பாராட்டுக்குரியது.

மேட்டுப்பாளையம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 'ஒயில் கும்மி' ஆடி அனைவரையும் குதூகலம் அடையச் செய்தனர்.

நொடி நாடகங்கள் என்ற புதிய நகைச்சுவை நிகழ்ச்சியை, மணமேடு சிவானந்தா நடுநிலைப் பள்ளி மாணவர்கள் வழங்கினார்கள். பத்து நிமிடங்களுக்குள் பதினைந்து நகைச்சுவைக் காட்சிகளை அவர்கள் படைத்துக் காட்டியதைக் கண்டு அவையினர் பரவசமடைந்தனர். அந்த நிகழ்ச்சியின் தொடக்கமாக ரவி, விவேகானந்தன் ஆகிய இரு மாணவர்கள் தொடர்ந்து ஐந்து நிமிடங்களுக்கு மேல் மேடையில் சிரித்துக் காட்டியதைக் கண்டு அவையினரும் தொடர்ந்து சிரித்தார்கள்.

நகரங்களிலுள்ள குழந்தைகளுக்குத் தங்கள் கலைத் திறமையை வெளிப்படுத்தப் பல வசதிகள் இருக்கின்றன. வானொலி, தொலைக்காட்சி, பொது அரங்குகள் — இப்படிப்பட்ட வசதிகள் கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு இருப்பதில்லை.

''மறைந்து கிடக்கும் அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்தத் தகுந்த வாய்ப்பளித்தால், அவர்களும் முன்னேறி, நம் நாட்டையும் முன்னேற்றுவார்கள். ஆகையால், நாம் அவர்களிடம் அதிக அக்கறை செலுத்த வேண்டும்'' என்று சுதந்திர தினத்தை முன்னிட்டு முசிறியில் திருச்சி வானொலி நிலையத்தினரும், திருச்சி மாவட்டக் கல்வித் துறையினரும் இணைந்து நடத்திய குழந்தைகளின் சிறப்பு நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய அகில இந்திய வானொலியின் முன்னாள் துணைத் தலைமை இயக்குநரும், வானொலி, தொலைக் காட்சியின் சிறப்பு நிகழ்ச்சி அமைப்பாளருமாகிய எம். எஸ். கோபால் அவர்கள் குறிப்பிட்டார். 200 க்கு மேற்பட்ட குழந்தைகள் கலைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆயிரக்கணக்கான குழந்தைகளும் பெற்றோர்களும் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்கள்.


திருச்சியில் நிகழ்ச்சிகளை நடத்துவதோடு, அடிக்கடி வெளியூர்களுக்கும் சென்று அங்குள்ள குழந்தைகளின் ஆற்றல்களையும் அறிந்து, அவற்றை வானொலி மூலம் வெளிப்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் மிகுதியாக உடையவர் திருச்சி வானொலி இயக்குநர் எஸ். வேணுகோபால் ரெட்டி அவர்கள். ''கிராமப்புறங்களைத் தேடி வந்து சேவை செய்வதில் வானொலி நிலையம் மகிழ்ச்சி அடைகிறது'' என்று அவர் தமது பேச்சிலே குறிப்பிட்டார்.

திருச்சி வானொலி நிலைய இயக்குநரையும், திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர். கண்ணன் அவர்களையும், நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக அமைத்த திருச்சி வானொலி அண்ணா இளசை சுந்தரம் அவர்களையும் பங்கு கொண்ட குழந்தைகளையும் கோகுலம் மனமாரப் பாராட்டுகிறது.


— 'நம்பி'

பழமொழிப் புதிர்

புதிர்-1



புதிர்-2



மேலே இருக்கும் ஒவ்வொரு படத்தையும் பார்த்தவுடனே உங்களுக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருமே! உங்கள் நினைவுக்கு வந்த பழமொழி சரிதானா என்று **75**-ஆம் பக்கத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

டாக்டர் பக்கம்



காதுகளைப் பாதுகாப்பது எப்படி?

டாக்டர் கு. கணேசன்

உலகத்தில் உள்ள மொத்த ஜனத்தொகையில் இருபது சதவீதம் பேருக்கு காது கேட்பதில்லை. இதில் ஒன்பது சதவீதம் பேர் பள்ளி செல்லும் குழந்தைகள்.

குழந்தைகளுக்குக் காது கேட்கா விட்டால் எத்தனை கஷ்டம்!

பள்ளியில் ஆசிரியர் நடத்தும் பாடங்களைக் கேட்க முடியாது. வகுப்பு நண்பர்களுடன் சகஜமாகப் பேசி விளையாட முடியாது. வானொலியில் பாட்டு கேட்டு ரசிக்க முடியாது. மேடைப் பேச்சோ, பட்டி மன்றமோ, கேட்க முடியாது. மொத்தத்தில் காது கேளாத குழந்தைக்கு கேள்வி ஞானம் என்பதே இல்லாமல் போய்விடும்.

அது எத்தகைய கொடுமை?

பரம்பரை காரணமாகவோ, பிறப்பில் உண்டாகும் கோளாறுகளினாலோ காது செவிடாகிப் போனால் அதைத் தவிர்க்க இயலாதுதான்.

ஆனால், நம் கவனக் குறைவினாலும் அலட்சியப் போக்கினாலும் காதுகளைச் சரியான முறையில் பராமரிக்கத் தவறும்போது பலருக்குக் காது கேளாமல் போகிறதே....!

அதைத் தவிர்க்க வேண்டியது அவசியம் இல்லையா?

"செல்வத்துள் செல்வம் செவிச்
செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை."

என்று வள்ளுவர்கூடச் சொல்லியிருக்கிறாரே! அந்தச் செல்வத்துள் செல்வமான செவிச் செல்வத்தைச் செம்மையாகப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையல்லவா?

இதோ இக்கட்டுரையில் காது நோய்களைப் பற்றியும் காதுகளைப் பராமரிக்கும் முறைகளைப் பற்றியும் விளக்கமாகப் பார்ப்போம்.

அதற்குமுன் —

'காதுகள் எப்படிக் கேட்கின்றன?' என்றுதானே கேட்கிறீர்கள்? அதையும் சொல்கிறேன், கேளுங்கள்.

"டாக்டர்!" என்று நீங்கள் அழைப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த ஓசை, ஒலி அலைகளாக மாறி, காற்றில் மிதந்து வந்து என் செவிகளுக்குள் நுழைகின்றன. செவியில் செவிப்பறை என்ற பகுதி உள்ளது.



எதைக் காணோம்?

"காணோம்; காணோம்; காணோம்னு அடிச்சுக்கிறியே! என்னத்தைக் காணோம்?"

"என்னோட முன்பல் ரெண்டு எங்கேயோ விழுந்திட்டிது! அதைக் காணோம்!..."

அச்செவிப்பறையில் ஒலி அலைகள் மோதும்போது சில அதிர்வுகள் உண்டாகின்றன. இவ்வதிர்வுகளை செவி நரம்பு மூளைக்கு எடுத்துச் செல்கிறது. மூளைதான் நீங்கள் என்னை 'டாக்டர்' என்று அழைப்பதை உணர்த்துகிறது. நான் சொன்ன இத்தனை செயல்களும் மின்னல் வேகத்தில் நடந்து முடிவது தான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

காது கேளாமல் போவதற்குப் பல காரணங்கள் உள்ளன. சிலருக்கு பரம்பரை காரணமாகக் காது கேளாது. சிலருக்கு, தான் கருவில் இருக்கும்போது தாய்க்கு வரும் தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி, கார்லட் காய்ச்சல், இன்புளுயென்சா, சர்க்கரை வியாதி, தைராய்டு வியாதிகள், விஷம் பொருந்திய மாத்திரைகளைச் சாப்பிடுதல், கர்ப்ப காலத்தில் எக்ஸ்ரே எடுத்தல் போன்றவற்றால் பிறவியிலேயே காது கேட்காமல் போகலாம்.

பெரும்பான்மையோருக்கு காதில் வரும் நோய்களே காது கேளாமல் போவதற்குக் காரணமாக அமைகின்றன. குறிப்பாக, பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காது நோய்கள் அடிக்கடி வருவதால், அவர்களுக்குக் காது செவிடாகிப் போவதற்கும், மந்தமாகக் கேட்பதற்கும் அதிக சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன.

இப்போது காது நோய்கள் எப்படி வருகின்றன என்பதைப் பற்றிச் சொல்கிறேன்.

வழக்கம் போல பாக்டீரியாக் கிருமிகளின் பாதிப்பால்தான் காதிலும் நோய்கள் வருகின்றன. நீங்கள் நினைக்கிற மாதிரி பாக்டீரியா கிருமிகள் காற்றில் பறந்து வந்து காதுக்குள் நுழைவதில்லை.

மூக்கில் ஜலதோஷம் பிடிக்கும் போதும், தொண்டையில் புண் வரும் போதும், பல் வலியால் துன்பப்படும் போதும் பலவகையான கிருமிகள் வாயிலும் தொண்டையிலும் வாசம் செய்யுமல்லவா? அக்கிருமிகள் செவியையும் தொண்டையையும் இணைக்கக் கூடிய சிறிய குழாய் வழியாகச் செவிக்குள் நுழைந்து விடுகின்றன.

அங்கே நடுச் செவியை அரித்துப் புண்ணாக்குகின்றன. அதனால் சீழ் பிடித்து காது வலிக்கிறது. இதை உடனுக்குடன் கவனிக்காவிட்டால் சீழ் அதிகமாகச் சேர்ந்து, செவிப்பறையைக் கிழித்துக் கொண்டு சீழ் வெளியே ஒழுக ஆரம்பிக்கும். இதைத் தான் 'காது ஒழுகுதல்' என்கிறார்கள்.

இச்சமயத்தில் பஞ்சு சுற்றிய சிறிய குச்சியால் காதை அடிக்கடி சுத்தம் செய்து, மருத்துவரின் ஆலோசனையுடன் ஆன்ட்டிபயாடிக் மருந்துகளையும் வலி நிவாரணி மாத்திரைகளையும் உட்கொண்டால் காது வலி குணமாவதோடு காதில் சீழ் வடிவதும் நின்று விடும். நோய்க் கிருமிகளும் இறந்து விடும்.

இம்முறையைப் பின்பற்றாமல் சிலர் தாங்களாகவே மருந்துக் கடைகளில் சொட்டு மருந்துகளை வாங்கி உபயோகிக்கின்றனர். இது தவறு. சொட்டு மருந்துகள் தற்காலிகமாகக் காது வலியைக் குறைக்கலாமே தவிர, காது வலிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் நோயைக் குணப்படுத்தாது.

காது ஒழுகுதலை முறைப்படி கவனிக்காவிட்டால் நாளடைவில் செவிப்பறையில் நிரந்தரமாகவே துளை விழுந்து காது கேட்காமல் போய் விடும். அது மட்டுமில்லாமல் நோய்க் கிருமிகள் செவிக்கு வரும் இரத்தக்

குழாய்கள் மூலம் மூளைக்குச் சென்று 'மூளைக் காய்ச்சல்' வரக் கூடிய ஆபத்தும் இருக்கிறது!

எனவே காது வலி என்றாலே மருத்துவரின் ஆலோசனையை உடனுக்குடன் நாடுவது நல்லது.

சில பேருக்கு தற்காலிகமாக காது கேட்காமல் போகும். அதற்குக் காரணம் காதுகளுக்குள் அழுக்குச் சேர்ந்து கட்டியாக மாறி செவிக் குழலை அடைத்துக் கொள்வதுதான்.

இச்சமயங்களில் காதுக்குள் லேசான வெதுவெதுப்பான தண்ணீரைப் பாய்ச்சினால் அழுக்கு நனைந்து, கரைந்து தானாகவே வெளியே வந்துவிடும். இல்லையென்றால் பஞ்சு சுற்றிய குச்சியால் அழுக்கை எடுத்து விடலாம். இதிலும் அழுக்கு வெளியேறவில்லையென்றால் மருத்துவரின் உதவியைப் பெற வேண்டியது அவசியம்.

சில சமயங்களில் காதுக்குள் பூச்சி, எறும்பு போன்றவை நுழைந்து கொள்ளலாம். இம்மாதிரி நேரங்களிலும் வெதுவெதுப்பான தண்ணீரைக் காதுக்குள் ஊற்றினால், பூச்சி இறந்து வெளியே வந்துவிடும்.

பயங்கரமான வெடிச் சத்தம்கூட காதை செவிடாக்கி விடலாம். எனவே, பள்ளிகளுக்கு அருகில் வெடி வெடிக்கக் கூடாது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் காதில் அறையக் கூடாது.

காதுக்குள் குச்சி, பென்சில் போன்றவற்றால் குடையக் கூடாது. இவை செவிப்பறையைக் கிழித்து காது செவிடாகக் காரணமாகிவிடும்.

பருத்திக் கொட்டை, பயிறு போன்றவை காதுக்குள் சென்றுவிட்டால் காதில் தண்ணீர் ஊற்றி எடுக்க முனையாதீர்கள். ஏனென்றால் ஊற்றிய தண்ணீரில் பயிறோ பருத்திக் கொட்டையோ நனைந்து அளவில் பெருத்துவிடுமாதலால், வெளியே வராது. எனவே, இச்சமயங்களில் மருத்துவரின் உதவியை நாடுங்கள்.

காது நோய் உள்ளவர்கள் கிணற்றில் அதிக நேரம் குளிக்கக் கூடாது. கொட்டும் அருவியில் நீண்ட நேரம் நீராடக் கூடாது. தண்ணீரில் வெகு ஆழத்திற்குப் போகக் கூடாது.

ஜலதோஷம் பிடிப்பதையும், தொண்டையில் புண் வருவதையும், 'டான்சில்' எனப்படும் தொண்டைச் சதைவளர்வதையும் ஆரம்பத்திலேயே குணப்படுத்திவிட்டால் தொற்று நோய்க் கிருமிகள் காதுக்குள் நுழைவதைத் தடுத்துவிடலாம்.

சிலருக்கு காதுகள் மந்தமாகக் கேட்கலாம். சிலருக்கு ஒரு காது மட்டும் கேளாமல் இருக்கலாம். இன்னும் சிலருக்கு இரண்டு காதுகளுமே கேட்காமல் போகலாம்.

எதுவாயிருப்பினும் ஆரம்பத்திலேயே மருத்துவரை நாடினால், தற்போதுள்ள நவீன வைத்திய முறைகளினால் காது செவிடாவதை நிச்சயம் தவிர்த்துவிடலாம்.




எவ்வளவு தூரம்?

"உன் கோலிக் குண்டை குத்தாலத்திலேயே போய் விழ வைக்கிறேன் பாரு!"

"ஒரேயடியா அடிக்காதீங்க தம்பி. என் ஆட்டம் வரட்டும். உன் கோலிக் குண்டை இலங்கை வரை அனுப்பி வைக்கிறேன்!"


சித்திரப் புதிர்! 15

ஆழி



கண்டுபிடிக்கப்பட்ட போது, இந்தக் கருவி இப்படித்தான் இருந்தது. என்ன கருவி இது?

1



2

இது எந்தநாட்டின் தேசியக்கொடி?




3

குதிரை, சிறுத்தை, முயல் இந்த மூன்றும் ஒரே சமயத்தில் ஓடத் தொடங்கினால், எது முன்னால் போய்ச் சேரும்? எது கடைசியில் போய்ச் சேரும்?

தற்போது சில கோயில்களில் மட்டுமே உள்ள இந்தப் பழங்கால வாத்தியத்தின் பெயர் என்ன?

4





5

கடலில் மிதந்து கொண்டிருக்கிற இது என்ன தெரியுமா?

விடை : வேறுபக்கம்

தினமும் தீபாவளி

மதிவண்ணன்





காரிருள் வேளையைக்
காலைப் பொழுதைப் போல்
காட்டும் நாளே தீபாவளி! — வானில்
ஆதவன் எழுமுன்
அவனியை எழுப்பி
ஆனந்தம் தரும்நாள் தீபாவளி!

வானவில் போலே
வாணம் கிளம்பி
வைரம் பொழியும்நாள் தீபாவளி! — இடி
ஒலயிடுதல் போல்
ஒன்றுக வெடிகள்
ஓசை தரும்நாள் தீபாவளி!

சுற்றிடும் மழலைகள்
புத்துடை அணிந்து
சுகம் பெறும்நாளே தீபாவளி! — நமைப்
பெற்றவர், உற்றவர்
மற்றவர் கலந்தே
பேசிக் களிக்கும்நாள் தீபாவளி!

விரும்பும் இனிப்பும்
வேண்டிய உணவும்
விதம் விதமாய்த் தரும் தீபாவளி! — இன்று
அரும்பும் மகிழ்வை
அலைவரும் என்றும்
அடைந்தால் தினமும் தீபாவளி!





கேளுங்கள்! சொல்லுகிறோம்

* ஆவுடையார் கோயிலுக்குப் போயிருக்கிறீர்களா? அங்கே சுவாமியும் இல்லை; அம்பாளும் இல்லை என்கிறார்களே, உண்மையா?

— ப. மணிசேகர், விருத்தாசலம்.

உண்மைதான். சுவாமி, அம்மன், உருவங்கள் அங்கு இல்லை. இந்தக் கோயிலின் முக்கிய சந்நிதி மாணிக்கவாசகர் சந்நிதிதான். சிவலிங்கத்தின் கீழே பீடமாக இருக்கும் பகுதியான 'ஆவுடையார்' மட்டுமே இருப்பதால், இந்தத் தலத்தை ஆவுடையார் கோயில் என்று அழைக்கிறார்கள். இக்கோயிலைக் கட்டியவரே மாணிக்கவாசகர்தான்.

* தமிழ்நாட்டில் ஆங்கிலேயரால் முதல் முதலாகக் கட்டப்பட்ட கிறிஸ்தவக் கோயில் எது?

— என். சாலமன், மதுரை — 3.

தமிழ்நாட்டிலென்ன, இந்தியாவிலேயே முதல் முதலாக ஆங்கிலேயர் கட்டிய கிறிஸ்தவக் கோயில் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் இருக்கிறது!

* கரடிகளிலே 'கண்ணாடிக் கரடி' என்று ஒரு வகை இருக்கிறதாமே, அப்படியென்றால், அது கண்ணாடி போட்டிருக்குமா?

— சி. பேரின்பன், சென்னை — 21.



கண்ணாடி போட்டிருக்காது. ஆனால், அதன் கண்களைச் சுற்றி வெள்ளையாக வட்டம் இருக்கும். அதனால்தான் அதை 'மூக்குக் கண்ணாடிக் கரடி' (Spectacled bear) என்று அழைக்கிறார்கள். இந்த வகைக் கரடிகளை தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்ற நாட்டிற்குப் போனால் பார்க்கலாம்.

* நாகூர் ஆண்டவர் என்கிறார்களே, அவர் யார்?

— சி. விஜயஸ்ரீ, சிதம்பரம்.

ஹஜரத் சையது ஷாகுல் ஹமீது குவாதிர் அலி கஞ்சசவாய் என்ற முஸ்லிம் பெரியவரைத்தான் 'நாகூர் ஆண்டவர்' என்று இந்துக்கள் குறிப்பிடுகிறார்கள். முஸ்லிம்கள் இந்தப் பெரியவரை 'நாகூர் மீரான்' என்கிறார்கள். அந்தப் பெரியவர் நாகூரில் அடக்கமாகியுள்ள 'தர்கா'வுக்கு இந்து முஸ்லிம் இருமதத்தினரும் வந்து மிகுந்த பக்தியுடன் வணங்குகின்றனர்.

* அரக்கர் என்று சொல்லுகிறார்களே, அவர்கள் இப்போது கூட இருக்கிறார்களா? எங்கே இருக்கிறார்கள்?

— பி. மாணிக்கம், செல்லூர்.

'இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சத்தார் அரக்கர்' — அதாவது, நெஞ்சிலே இரக்கம் இல்லாதவர்களெல்லாம் அரக்கர்களே' என்று கூறுகிறார் கம்பர். அப்படிப் பார்த்தால்...?

* சிந்துபாத் (Sindbad the Sailor) கதை உண்மையில் நடந்ததா?

— இரா. கவிதா, கரூர்.

இல்லை. அலாவுதீனும் அற்புத விளக்கும் (Aladdin and the wonderful lamp) டாம் தம்ப் (Tom Thumb) போல இதுவும் ஒரு கட்டுக் கதைதான்.

* இந்தியாவில் வைரம் எங்கு கிடைக்கிறது? — ஆ. கணேஷ், மின்பாறை.

கோதாவரிக்கரையிலுள்ள சம்பல்பூரிலும் நிஜாமிலும், பெல்லாரியிலும் கிடைக்கின்றன. ஆயினும், இவற்றின் அளவு மிகக் குறைவே. உலகில் 96 சதவிகித வைரம் தென் ஆப்பிரிக்காவிலிருந்துதான் கிடைக்கிறது.


* இரவில் வீட்டில் ஊசியால் தைக்கக் கூடாது என்கிறார்களே, ஏன்?

— கே. வி. கணேஷ்.

முன் காலத்தில் இப்போதிருப்பதைப் போல் ஒளிவிளக்குகள் இல்லை. அதனால், ஊசி கையிலே குத்தி விடலாம் என்ற பயத்திலே அவ்வாறு கூறி வந்தார்கள். இப்போதும் நல்ல வெளிச்சம் இல்லாத இடத்தில் இருந்து கொண்டு ஊசியால் தைப்பது நல்லதன்று.

* சென்னை மவுண்ட் ரோடிலுள்ள (அண்ணா சாலை) ஸ்பென்சர் கம்பெனியில் திரு. வி. க. வேலை பார்த்தாராமே. அது எப்போது?

— த. சோமசுந்தரம், காளையார்கோயில்.



அந்தக் கம்பெனியில் குமாஸ்தாவாக திரு.வி.க. இரண்டு ஆண்டுகள் (1906—1908) வேலை பார்த்தார். தினமும் வேலை நேரத்திற்கு முன்பே அலுவலகம் சென்று விடுவார். உடனே அங்குள்ள தொழிலாளர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு அரவிந்தர் நடத்திவந்த 'வந்தேமாதரம்' என்றபத்திரிகையைப் படித்துக் காட்டி நம் நாடு விடுதலை பெற வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்வார். இவர் இவ்வாறு செய்தது, கம்பெனியின் நிர்வாகத் தலைவருக்குப் பிடிக்கவில்லை. அதனால் கண்டித்தார். அது திரு.வி.க.வுக்குப் பிடிக்கவில்லை. அதனால் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டார்.

*** உலகில் 'அச்சு நாடுகள்' என்று ஐந்து நாடுகளைக் குறிப்பிடுகின்றனர். எதனால் அவைகளுக்கு அப்பெயர் ஏற்பட்டது? அவைகளுக்கென்று தனி உரிமைகள் அல்லது அதிகாரங்கள் உண்டா?**

— சி. சிவச்சந்திரன், அய்யம்பாளையம்.

என்ன தம்பி அச்சு நாடுகள் ஐந்து என்கிறாயே! மூன்று நாடுகளைத்தானே குறிப்பிடுவார்கள். ஜெர்மனியும் இத்தாலியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது, இத்தாலி பிரான்சு நாட்டின் மீது 1940ல் படை எடுத்தது. பிறகு, ஜப்பானும் இந்த நாடுகளுடன் சேர்ந்து கொண்டது. இந்த மூன்று நாடுகளையும் 'அச்சு நாடுகள்' (Axis Powers) என்று அழைத்து வந்தார்கள். ஆனாலும், இந்த அச்சு 1945 செப்டம்பரில் முறிந்துவிட்டது!

*** கீழாநெல்லி சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது என்கிறார்களே, உண்மையா? எந்த விதத்தில் பயன்படுகிறது?**

— ஏ. மகாலிங்கம், அகராத்தூர்.

'காமாலை, சீதபேதி, வயிற்று மந்தம் முதலியவற்றுக்கு நல்ல மருந்து' என்கிறார்கள். இலையை அரைத்துக் காயம் பட்ட இடங்களிலும், சொறி சிரங்கு உள்ள இடங்களிலும் தடவுகிறார்கள். கீழா நெல்லித் தைலத்தைத் தலையில் தடவிக் கொண்டு குளித்தால், கண் எரிச்சல் தீருமாம்.

*** 'உப்பில்லாப்பண்டம்குப்பையிலே' என்கிறோம். ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உப்பிலியப்பன் கோயிலில் உள்ள சாமிக்கு உப்பில்லாமல் நைவேத்தியம் வழங்குகிறார்களே, எதனால்?**

— ந. புருஷோத்தமன், செய்யாறு.

அந்த சாமி பெயர் உப்பிலியப்பன் அல்ல. ஒப்பிலி அப்பன் அதாவது ஒப்பு இல்லாத தலைவன் என்பதேயாகும். ஒப்பிலியப்பனை உப்பிலியப்பனாக்கி, உப்பில்லாத சாதத்தைப் படைக்கிறார்கள். வேடிக்கைதான்!

*** தமிழகத்தில் இமர்ச் சாமியார்கள் தோன்றுகிறார்களே, அவர்களை நம்பலாமா? நம்பக் கூடாதா?**

— ர. பெருமாள், சர்க்கர் கொல்லம்பட்டி

தாடி வைத்து அல்லது மொட்டையடித்து, பட்டை சாற்றி, கொட்டை அணிந்து, சட்டை இன்றி, காலில் கட்டை அணிந்து, காவி உடையுடன் வருபவர்களையெல்லாம்சாமியாரென நம்பி அவர்கள் காலில் விழுந்து காணிக்கை செலுத்தினால் ஏமாந்துதான் போவோம். சமீபகாலமாகப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்க்கும்போது ஊரை ஏமாற்றிப் பணம் பறிக்கும் சாமியார்களே அதிகமாக இருப்பது தெரிகிறது. இவர்களால், உண்மையான சில சாமியார்களைக் கூடச் சந்தேகிக்கும்படி நேரிடுகிறது.

*** பொம்மலாட்டம் எவ்வளவு காலமாக நடந்து வருகிறது?**

— வே. நாகராஜன், கமுதி.



எவ்வளவு காலம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.


நாண் அகத் தில்லார் இயக்கம்மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.

(நெஞ்சில் நாணமில்லாதவர் உலகில் இயங்குதல், மரத்தால் செய்த பொம்மையைக் கயிற்றினால் ஆட்டி உயிருள்ளது போல் மயக்குவது போலாகும்.)

என்று திருவள்ளுவரே பொம்மலாட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பட்டாசு, ஜாக்கிரதை!

ஓவியர் - S.K. ராமானுஜம் (ராஜு)





குரங்கு தன் நண்பர்களுக்கும் பட்டாசை வெடிக்கக் கொடுத்தது.
ஒட்டகச்சிவிங்கிக்கு சங்குச்சக்கரம்.
சிங்கத்திற்கு... வெடிக்கும் பட்டாசு
முயலுக்கு சுறு, சுறு-வத்தியைக் கொடுத்தது.
யானை புஸ்வாணம் வெடித்தது
குரங்கு,------- எரிந்து கொண்டி- ருக்கும் மத்தாப்பை அணைக்காமல் ---- அப்படியே கீழே- போட்டு விட்டது.
உடனே தீ... காய்ந்த இலைகள் மீது விழுந்து பற்றிக் கொண்டது
காட்டில் தீ பற்றிக்கொண்டது.
ஐய்யோ! நான் வசிக்கும் மரப்பொந்து எரியுதே!
குரங்கு மத்தாப்பை அணைக்காமல் போட்டதால் அது வாழ இடமின்றி மறுபடியும் குளிரிலும் மழையிலும் வாடியது.
நல்லவேளை, அப்பொழுது மழை பெய்ததால் காட்டின் ஒரு பகுதி எரியாமல் தப்பியது!

இத்தாலி நாட்டுக்கதை

நீச்சல் வீரன் நிகலஸ்

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

இத்தாலிக்குத் தெற்கே சிசிலி என்று ஒரு தீவு. அத்தீவின் வடபகுதியில் மெசினு என்று ஓர் ஊர். அங்கிருந்த மக்கள் மீன் பிடித்தோ அல்லது கப்பல் ஓட்டியோ வாழ்ந்தனர். அந்த ஊரில் ஒரு முதிய மீனவர் இருந்தார். அவருக்கு நிறையப் பிள்ளைகள். கடைசிப் பிள்ளையைத் தவிர மற்ற எல்லாரும் அப்பாவின் தொழிலைக் கற்றுக் கொண்டு, சிறந்த மீனவர்களாக வளர்ந்தனர்.

கடைசிப் பிள்ளையான நிகலஸ் சின்னஞ்சிறுவன். அவனுக்கு நல்ல உறுதியான உடல். குணமும் நல்ல குணம். அவன் அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்தான். ஓய்வு நேரங்களில் கடற்கரையில் நடந்தான். மீன்களை வேடிக்கை பார்த்தான். அவை தண்ணீரை எதிர்த்துக் கொண்டு லாகவமாக நீந்துவதைக் கண்டு களித்தான். மீன்களைக் கொல்லுவதற்கு அவனுடைய இளகிய மனது இடந்தரவில்லை. 'பிழைக்கத் தெரியாதவன்' என்று நிகலஸை எல்லோரும் கேலி செய்தனர். ஆனால் நிகலஸ் அவர்களை லட்சியம் செய்யவில்லை. வீசும் அலைகளையும், விரையும் கடற்பாசியையும், வானப்பறவைகளையும் அவன் பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

நாளாக ஆக நிகலஸ் கடற்கரையிலேயே அதிக நேரத்தைக் கழித்தான். நன்றாக நீந்தவும், நீரின் அடியில் நீண்ட நேரம் தங்கவும் அவன் கற்றான். நிகலஸ் கடலுக்கு அடியில் அநேக பவளப் பாறைகளைப் பார்த்தான். மேலும் அங்கே கவிழ்ந்த கப்பல்களையும், விசித்திர மீன்களையும், கடல் தாவரங்களையும் கண்டான். அந்த அதிசயங்களையெல்லாம் அவன் தன் சகோதரர்களிடமும், அம்மா, அப்பாவிடமும் உற்சாகமாகச் சொன்னான்.

நிகலஸின் பேச்சுக்களை அவனுடைய சகோதரர்கள் நம்பவில்லை. "நிகலஸுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. உளறுகிறான்," என்றான் ஓர் அண்ணன். "கடலுக்கு அடியில் அதிசய மீன்கள் இருந்தால் என்ன? அதற்காகக் காலத்தை எல்லாம் அங்கேயே கழிக்க வேண்டுமா?" என்றான் இன்னொருவன்.

"நிகலஸுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது" என்று அவனுடைய அம்மா கூட நம்பினாள். ஆகவே அவனை ஒரு சாமியாரிடம் அழைத்துப் போய் ஆலோசனை கேட்டாள். "உங்கள் பிள்ளையைப் பிசாசு பிடித்திருக்கிறது. அதை ஓட்ட நீங்கள் சில பரிகாரங்களைச் செய்ய வேண்டும்," என்று சொல்லி அவர் விளக்கினார். அம்மா அவற்றை எல்லாம் முறைப்படி செய்து முடித்தாள். பிசாசு விலகிவிடும் என்று நம்பினாள்.

நாட்கள் ஆயின. நிகலஸிடம் எந்த மாறுதலும் தெரியவில்லை. அவன் வழக்கம் போலக் கடலில் குதித்தான். நீருக்கு அடியில் நெடுநேரம் நீந்தினான். கடலின் படுகையில் தான் கண்ட புதிய, புதிய அதிசயங்களை எல்லாம் கதை கதையாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான்.



நிகலஸின் புகழ் சிசிலித் தீவு முழுவதும் பரவியது. அவனுடைய நீச்சல் திறமையையும், நீரில் பாயும் திறமையையும் மக்கள் பாராட்டினர். அவன் கடலுக்கு வெளியே இருந்ததைவிட அதன் உள்ளே அதிக நேரத்தைச் செலவிட்டான். ஆகவே, மக்கள் அவனை 'நீச்சல் வீரன்' என்றும், 'கடல் மீன்' என்றும் அன்போடு அழைத்தனர்.

நிகலஸின் புகழ் சிசிலித் தீவை ஆண்ட அரசரின் காதுகளுக்கும் எட்டியது. அந்தப் புகழ்மிக்க இளைஞனை அவர் பார்க்க விரும்பினார். அடுத்த முறை அவர் மெசினாவுக்கு விஜயம் செய்த போது, நிகலஸை அழைத்து வருமாறு பணித்தார்.

நிகலஸ் அரண்மனைக்குப் போனான். அரசர் கம்பீரமாக அரியாசனத்தில் வீற்றிருந்தார். அருகில் அவருடைய அருமை மகளான இளவரசியும் இருந்தாள். நீல நிறக் கண்களுடன் அவள் அழகிற் சிறந்து விளங்கினாள். நிகலஸ் அரசரையும், இளவரசியையும் வணங்கினான்.

''நிகலஸ், நீ ஒரு சிறந்த நீச்சல் வீரன் என்று அறிகிறேன். மிக்க சந்தோஷம். கடலுக்கு அடியில் போய், இதுவரை யாருமே பார்க்க முடியாத அதிசயங்களை எல்லாம் நீ பார்த்து வந்திருக்கிறாயாமே, அப்படியா?'' என்று அரசர் கேட்டார்.

''நான் கடலுக்கு அடியில் பார்த்ததையெல்லாம் மற்றவர்களால் பார்க்க முடியுமா முடியாதா என்பது எனக்குத் தெரியாது அரசே!'' நிகலஸ் பணிவோடு சொன்னான்.

''நிகலஸின் திறமையை இன்றைக்குச் சோதிக்கப் போகிறேன். நாம் எல்லோரும் விழாக் கப்பலுக்குப் போவோம் வாருங்கள்,'' என்று அரசர் சபையோரைப் பார்த்துக் கூறினார்.

வீரர்கள் நிகலஸை அழைத்துக் கொண்டு விழாக் கப்பலை அடைந்தனர். அது அரசரின் பயணத்திற்காக விசேஷ வசதிகளோடு செய்யப்பட்ட கப்பல். பாய் மரங்களும், பட்டுத் துணிகளும் பளிச்சென்று கண்ணைப் பறித்தன. கப்பல் நடுக்கூடலுக்கு

சித்திரப் புதிர் —15

விடை:

1. டெலிபோன்.
2. ஜப்பான்.
3. முதலில் சிறுத்தை,
   இரண்டாவது முயல்,
   கடைசியில் குதிரை.
4. பஞ்சமுக வாத்தியம்.
5. நீர் மூழ்கிக் கப்பல்.

சித்திரப் புதிர் 14ன் வினு 5க்கு விடை: முதலே.

ஒட்டப் பட்டது. அரசர் ஒரு தங்கக் கிண்ணத்தை எடுத்தார். திடீரென அதைக் கடலுக்குள் வீசினர். அது நீரில் முழுகி மறைந்தது.

அரசர் நிகலஸை நோக்கி, "அந்தக் கிண்ணத்தை எடுத்து வா!" என்று உத்தரவிட்டார்.

நிகலஸ் கடலில் குதித்தான். கடலின் அடிப்பாகத்திற்குச் சென்றான். வெகு எளிதில் கிண்ணத்தைப் பற்றினன்; அங்கே படர்ந்திருந்த சிவப்புப் பவளத்தின் ஒரு முனையையும் ஒடித்து எடுத்தான். பிறகு, நீர் மட்டத்திற்கு மேலே வந்து கப்பலில் ஏறினன். தங்கக் கிண்ணத்தை அரசரிடமும், சிவப்புப் பவளத்தை இளவரசியிடமும் சமர்ப்பித்தான்.

"பலே, நிகலஸ்! கிண்ணத்தை என்னுடைய பரிசாக நீயே வைத்துக் கொள்ளலாம். ஆனல், இப்போது உனக்கு ஒரு சோதனை. என்னுடைய இந்த வாளை எடுத்து வா," என்று சொல்லிக் கொண்டே அரசர் உறையோடு கூடிய வாளைக் கடலுக்குள் எறிந்தார். தலைகீழாகப் பாய்ந்தான் நிகலஸ். இமைப் பொழுதில் வாளை எடுத்து வந்தான்.

"சபாஷ், நிகலஸ்! நீ கெட்டிக்காரன்தான். ஆனல், இந்த மாதிரிக் காரியங்களைச் செய்ய நம் நாட்டில் அநேகம் பேர் இருக்கின்றனர். இவற்றைஎல்லாம்விட மிகமிகக்கஷ்டமான ஒரு காரியத்தைச் செய்து முடித்தால்தான் உன்னை ஒரு சிறந்த வீரனுக நான் கருதுவேன்!" என்ருர் அரசர்.

"உங்கள் ஆணை எதுவானுலும், அதை நிறைவேற்ற முயல்வேன், அரசே!" நிகலஸ் அடக்கமாகப் பதிலளித்தான்.

"சிசிலித் தீவின் அஸ்திவாரத்தைப் பற்றிய தகவல் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. அது கெட்டியான ஒரே பாறையால் ஆனதா, அல்லது தூண்கள் போன்ற குறுகிய பாறைகளின் ஆதரவில் நிற்கிறதா அல்லது தீவின் அஸ்திவாரமே அலைகடலில் மிதந்து கொண்டிருக்கிறதா என்ற விவரங்களை இதுவரையில் யாரும் கண்டுபிடிக்கவில்லை. நீ இந்தத் தீவைச் சுற்றி ஒருமுறை நீந்தி வா. மெசீனவிலிருந்து புறப்பட்டு பாலர்மோ, தொராஞேவா, சைரகியூஸ், கடானியா ஆகிய பட்டினங்களின் வழியாகச் சென்று மறுபடியும் மெசீனவுக்கு வந்து சேர். அப்படியே அஸ்திவாரத்தைப் பற்றிய செய்திகளையும் சேகரித்துக் கொண்டு வா," என்று அரசர் ஆணையிட்டார்.

"அதிக தூரமாயிற்றே! ஐந்நூறு மைலுக்கும் அதிகமாக இருக்குமே?" என்ருன் நிகலஸ்.

"அது எனக்குத் தெரியும், நிகலஸ். நேரத்தைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். வழியில் எங்கு வேண்டுமானலும் நீ தங்கலாம். ஆனல், நீ ஒருமுறை தீவைச் சுற்றி வர வேண்டும். தீவின் கடைக்காலைப் பற்றிய முழுவிவரங்களையும் சேகரித்து வர வேண்டும். தகவல் இல்லாமல் மட்டும் திரும்பி வராதே!" என்று அரசர் உத்தரவிட்டார்.

நிகலஸ் அரசரைப் பார்த்தான் இளவரசியைப் பார்த்தான். பிறகு, "எனக்காகக் காத்திருங்கள்!" என்று சொல்லிவிட்டுக் கடலுக்குள் பாய்ந்தான்.

நாட்களும், மாதங்களும் நகர்ந்தன. நீண்ட நாட்களுக்குப் பிறகு நிகலஸ் மீண்டும் அரசரைப் பார்க்கப் போனன்.

"அரசே! தனித்தனியான மூன்று பெரிய கருங்கல் பாறைகளின் மீது நம் தீவு அமைந்துள்ளது. தூணின் கடைக்கால்கள் கடலின் ஆழத்தில் புதைந்துள்ளன. அவை வலிமை உள்

ளவைதான், ஆனாலும், கடானியா வுக்கும், மெசினாவுக்கும் இடையில் உள்ள ஒரு தூண் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளது...'' என்று நிகலஸ் சொன்னான்.

''அழியப் போகிறதா? எப்படி அழியப் போகிறது?''

''தீயினால் அழியப் போகிறது, அரசே! அந்தத் தூணின் அடியில் ஒரு பெரிய நெருப்பு எரிகிறது. வெளியே தெரியாமல் உள்ளேயே கனன்று எரிந்து கொண்டிருக்கிறது. அதுதான் அந்தத் தூணைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகிறது. அதைச் சுற்றியுள்ள புற்களும், பாசியும் பொசுக்கப் பட்டிருக்கின்றன. ஒரு மைல் வட்டத்திற்கு அதன் அருகில் மீன்களே நெருங்குவதில்லை...''

''கடலுக்கு அடியில் நெருப்பா? நம்ப முடியவில்லையே? கடல் நீர் அதை அணைத்திருக்குமே?''

''அரசே! தண்ணீர் அதைப் பரவ விடாமல் தடுத்து நிறுத்தி உள்ளது. அவ்வளவுதான். அது பெரிய நெருப்பு! ஆகையால், தண்ணீரால் அதை ஒன்றும் செய்ய முடியவில்லை.''

நிகலஸின் பதில் அரசருக்கு நம்பிக்கை ஊட்டவில்லை. ''நீ சொல்வது உண்மை என்றால், உடனே போ. எனக்கு அத்தாட்சி தேவை. நீருக்கு அடியில் உள்ள நெருப்பிலிருந்து மாதிரிக்குக் கொஞ்சம் எடுத்து வா!'' என்று ஆணையிட்டார்.

நிகலஸ் அரசரையும், இளவரசியையும் மாறி மாறிப் பார்த்தான்.

''அரசே! அற்புதங்களை விளைவிக்கும் அருட்தொண்டனாக மாறினால் கூட என்னால் அந்த நெருப்பைக் கொண்டு வர முடியாது. எப்படி அதை நெருங்க முடியும்? எப்படி எடுத்து வர முடியும்?''

''எப்படி என்பதை நீயே தீர்மானித்துக் கொள். ஆணையை நிறைவேற்ற வேண்டியது உன் பொறுப்பு'' என்றார் அரசர். நிகலஸுக்கு இப்படிப்பட்ட ஆபத்தான சோதனைகளைக் கொடுக்க வேண்டாம் என்று இளவரசியும் தன் அப்பாவிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். ஆனால், அரசர் தன் ஆணையை மாற்றவில்லை.



நிகலஸ் மீண்டும் நீரில் பாய்ந்தான். கீழே, கீழே, கீழே போனான். மெசினாவுக்கும், கடானியாவுக்கும் இடையில் இருந்த அந்தக் கல் தூணை நோக்கி நீந்தினான். அதை நெருங்க, நெருங்க, நீரின் தண்மை குறைந்து கொண்டே போயிற்று. வெம்மை அதிகரித்துக் கொண்டே போயிற்று. கடைசியில், அவன் ஒரு சிவந்த ஒளிப்பிழம்பையும், புகை மண்டலத்தையும் எதிரே கண்டான். அவனது உ[illegible]ன் [illegible]வ்வொரு அணுவையும் நீரி[illegible]பம் தாக்கியது. பொறுக்க முடி[illegible]ல்லை. அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். ஒரு சில தீப்பிழம்புகளைத் தன் கைகளால் பிடிப்பதற்காக அவன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல அந்தத் தீயை நோக்கிப் பாய்ந்தான்.

நிகலஸ் அந்த அனற்கொழுந்துகளை ஒவ்வொன்றாக மாறி மாறிப் பிடித்தான். கையினின்றும் அவை நழுவிப் போயின. கைகளில் தீக்காயம் ஏற்பட்டது. அவனுடைய முயற்சிகள் வீணாயின. அவன் சோர்வுற்று, நீரின் மேல் மட்டத்திற்கு வந்தான். அவனால் நீந்த முடியவில்லை. [illegible] கண்ட ஒரு படகோட்டி அவ[illegible] தன் படகில் ஏற்றிக் கொண்டு, அரசருடைய விழாக் கப்பலுக்கு அழைத்துப் போனான்.

நிகலஸ் அரசரிடம் சென்று, "அரசே! நமது தீவைத் தாங்குகின்ற ஒரு கல் தூணின் அடியில் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. மனிதர்களால் அதை வெளியே எடுத்து வர முடியாது. ஆனால், அந்த நெருப்பின் அடையாளத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். பாருங்கள்!'' என்று சொல்லி நிகலஸ் தன் இரண்டு கைகளையும் நீட்டினான். கைகளில் தீ பட்டுக் கொப்புளங்கள் உண்டாகியிருந்தன.

''நிகலஸ்! இப்போது உன் பேச்சை நம்புகிறேன். நம் தீவுக்கு அடியில் உண்மையாகவே ஒரு பெரிய தீ எரிந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள மூன்று தூண்களில் ஒன்று விழுந்து விட்டால் சிசிலித் தீவுக்கே ஆபத்து. நம் மக்கள் பலர் உயிர் இழப்பார்கள், இல்லையா?'' அரசர் கவலையோடு கேட்டார்.

''ஆம் அரசே!''

அரசர் சிந்தனையில் மூழ்கினார். சபையில் யாருமே பேசவில்லை.

அவர் சிறிது நேரங்கழித்து, ''நிகலஸ்! மறுபடியும் போ! அந்த நெருப்பின் மூலகாரணத்தையும், அந்தக் கல் தூண் எவ்வளவு நாட்களில் அழியும் என்பதையும் கண்டு பிடி. இன்னொரு விஷயம். அந்த நெருப்பை அணைக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஆராய்ந்து சொல்!'' என்று உத்தரவிட்டார்.

''மன்னிக்க வேண்டும் அரசே! அது முடியாத காரியம்!''

''ஏன்? உனக்குப் பயமா?''

"பயம் இல்லை, அரசே! மறுபடியும் அந்த நெருப்பினுள் பாய்ந்தால், நான் திரும்பி வரமாட்டேன்,'' என்றான் நிகலஸ். இளவரசி நிகலஸுக்கு ஆதரவாகப் பேசினாள். ஆனால், அரசர் ஒப்புக் கொள்ளவில்லை.

''நிகலஸ், இரண்டு முறை உன்னால் போக முடியுமானால், மூன்றாம் முறையும் முடியும். தீயின் காரணத்தை நாம் கண்டுபிடித்தேயாக வேண்டும். பிறகு, அந்தக் கல்தூணைக் காப்பாற்ற முடியுமா? அல்லது நம் மக்களை இங்கிருந்து வேறு இடத்திற்குப் போகச் சொல்ல வேண்டுமா — என்று நாம் முடிவு செய்ய வேண்டும். தாமதிக்காதே. உடனே போ!'' என்று அரசர் உறுமினார்.

''அரசே! உங்கள் ஆணையை நிறைவேற்றத் தயாராக உள்ளேன். மனிதன் ஒருமுறைதான் சாக முடியும். தண்ணீருக்கு அடியில்தான் நான் இவ்வளவு காலம் வாழ்ந்தேன். அங்கேயே உயிர் துறந்தாலும் எனக்குச் சந்தோஷம்தான். முதலில் என் பெற்றோர்களிடமும், நண்பர்களிடமும் விடை பெற்று வருகிறேன்,'' என்று சொல்லிவிட்டு அவன் புறப்பட்டான்.

நிகலஸ் வீட்டை அடைந்தான். அம்மா, அப்பாவிடமும், சகோதரர்களிடமும் விஷயத்தைச் சொன்னான். அவர்கள் முதலில் அழுதனர். பிறகு மனத்தைத் தேற்றிக் கொண்டு, ''நீ நிச்சயம் திரும்பி வந்துவிடுவாய்.

உன்னை எதிர்பார்த்து நாங்கள் காத்திருப்போம்,'' என்று கூறினர். நிகலஸ் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் விடைபெற்றான். பிறகு தோட்டத்திற்குப் போய் ஆர்வத்தோடு தான் வளர்த்த ஒவ்வொரு செடி, கொடியிடமும் விடைபெற்றான். பிறந்த மண்ணை ஒருமுறை ஆசையுடன் நோக்கினான், வணங்கினான்.

நிகலஸ் நேராக விழாக் கப்பலுக்குச் சென்று, ''அரசே! உங்கள் விருப்பப்படி நான் நீரில் மூழ்கத் தயார்!'' என்றான். இளவரசியை நோக்கி, ''எனக்காகக் காத்திருக்க வேண்டாம்!'' என்று சொன்னான். பிறகு, சரேலெனக் கடலுக்குள் பாய்ந்தான்.

பல வருஷங்கள் கழிந்தன. நிகலஸ் வரவே இல்லை. இளவரசி தினந்தோறும் கடற்கரைக்குப் போனாள். நிகலஸ் அளித்த செம்பவளத்தைக் கையில் வைத்துக் கொண்டு அவனுடைய வருகைக்காகக் காத்திருந்தாள். ஆனால், நிகலஸ் திரும்பி வரவே இல்லை.

ஒருநாள் இளவரசி கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தாள். ஓரிடத்தில் கடல் பாசியும், நுரையும் சுழித்துக் கொண்டு நின்றன. இளவரசி அதை உற்று நோக்கினாள். அப்போது ஒரு சப்தம் கேட்டது. அந்த ஒலி கடல் பாசியிலிருந்து வந்தது. அது அவளுக்குப் பழக்கமான குரல். ஆம், அது நிகலஸின் குரலேதான்!

''இளவரசி! எனக்காகக் காத்திருக்க வேண்டாம்! வருந்தவும் வேண்டாம். இனி, நான் திரும்ப மாட்டேன்!'' என்று அந்தக் குரல் பேசியது.

''என்ன ஆயிற்று?''

''நான் கடலின் ஆழத்திற்குப் போனேன். அந்தத் தூணின் அஸ்திவாரம் நான் நினைத்ததை விட மோசமாக இருந்தது. தீ கொழுந்து விட்டு எரிந்தது. தூணே கொஞ்சம் அசைவது போல இருந்தது. சிசிலித் தீவே சரிந்து விடுமோ என்று பயந்தேன். அதை எப்படியாவது காப்பாற்ற எண்ணினேன். ஆகவே, தீயின் மையத்தில் பாய்ந்தேன். என்னுடைய தோளைக் கொடுத்து அந்தக் கல்தூணைத் தாங்கினேன். தூண் இப்போது உறுதியாக நிற்கிறது. நானும் அங்கேயே நிரந்தரமாக நிற்பேன்!''

''ஐயோ! அந்தக் கொடிய தீ உன்னை வாட்டி வருத்துமே!''

''இல்லை, இல்லை. தூணைச் சுற்றித் தான் தீ எரிகிறது. மையத்தில் இல்லை. ஆகவே, தீ என்னை ஒன்றும் செய்யாது. பிறந்த மண்ணைக் காப்பதற்காக நான் காலம் உள்ள வரையில் களிப்போடு அங்கேயே நிற்பேன்.''

கடல் பாசி சுழித்துக் கொண்டு நகர்ந்தது. குரல் அமைதி அடைந்தது. இளவரசி மனவேதனையோடு நெடுநேரம் கடலையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். திரும்பி வராத நிகலஸுக்காக அவள் எவ்வளவு நேரம்தான் அங்கே காத்து நிற்க முடியும்?

சில ஆண்டுகள் சென்றபின் அரசர் ஓர் இளவரசனைப் பார்த்துத் தன் மகளுக்கு முறைப்படி மணம் செய்வித்தார். அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. கடலை நோக்கும் போதும், கடற்பாசி சுழித்து நகரும் போதும், கடற்பறவைகள் பறந்து செல்லும் போதும் அவளுக்கு நிகலஸின் நினைவு வந்தது. ஆழ்கடலுக்கு அடியில் ஒரு பெரும் பாறையைத் தாங்கிக் கொண்டு அந்த நீச்சல் வீரன் தான் பிறந்த மண்ணைக் காப்பதை அவள் நினைத்துக் கொண்டாள்.

இந்த நிகழ்ச்சி நடந்து பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தாலும், இன்றைக்கும் கூட சிசிலித் தீவு மக்கள், நாட்டைக் காத்த அந்த நல்ல வீரனை நெஞ்சார நினைவு கூர்கின்றனர்.

பழமொழிப் புதிர்

விடை :

புதிர்: 1: எல்லாரும் பல்லக்கு ஏறினால், தூக்கிறது யார்?

புதிர்—2: யானை வரும் பின்னே; மணி ஓசை வரும் முன்னே!

விளையாட்டும் வேலையும்

ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
சுவாமிகள்



வினா: வேலை என்றால் என்ன?

விடை: ஒருவருடைய வாழ்க்கைக்காக அவருடைய தகுதிக்கும் கல்விக்கும் ஏற்பச் செய்யும் பணி.

வினா: மாணவனுடைய வேலை என்ன?

விடை: தனக்குரிய கல்வியை சந்தேகம் ஏதும் இல்லாமல் கற்றுக்கொள்வது. கற்றதை நினைவில் வைத்துக் கொள்வது. சிறந்த பேச்சுக்களை காதால் கேட்டு அறிவை வளர்த்துக் கொள்வது. அனுபவத்தால் கிடைத்த ஞானத்தை அறிவோடு கலந்து கொள்வது. பிறருக்கு கல்வியறிவால் உதவுவது.

வினா: மாணவன் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டுமா?

விடை: தேவையில்லை. ஓயாமல் படித்துக் கொண்டிருந்தால் மூளை களைத்துவிடும். தேவையான அளவிற்கு மூளைக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

வினா: மூளைக்கு ஓய்வு கொடுக்கப் படுத்துக் கொண்டிருக்கலாமா?

விடை: அது தவறு. கல்வி வளர, அது நிலை பெற்றிருக்க, பிறருக்கு உதவ, ஆரோக்கியமான உடல் வேண்டும். படிக்காத நேரங்களில் உடலுக்கும் வயதிற்கும் தகுந்த வேலை கொடுக்க வேண்டும்.

வினா: உடலுக்கு எவ்வாறு வேலை கொடுக்கலாம்?

விடை: சிறந்த வேலைகளைச் செய்யலாம். உடலை வளர்க்கக் கூடிய விளையாட்டுக்களை விளையாடலாம்.

வினா: வேலைகள் எத்தனை வகைப்படும்?

விடை: இரண்டு வகைப்படும். ஒன்று கைவேலை, இன்னொன்று மூளைக்கு வேலை.

வினா: கைவேலை என்றால் என்ன?

விடை: கைவேலை என்றால் உடம்பால் செய்யக் கூடிய வேலை. அப்பொழுது மூளைக்கு அதிக வேலை இருக்காது. ஓய்வு நேரத்தில் வீட்டிலும் பள்ளியிலும் தோட்ட வேலை செய்யலாம்.

வினா: மூளை வேலை என்றால் என்ன?

விடை: உடலைக் கடினமான வேலைகளில் ஈடுபடுத்தாமல், உட்கார்ந்தே செய்யும் வேலை. சித்திரம் எழுதுதல், கதை, கட்டுரை கவிதை எழுதுதல், பின்னல் வேலை செய்தல், பொம்மை வேலை செய்தல் முதலியவை மூளை

வேலைக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

வினா: தொடர்ந்து மூளைக்கு வேலை கொடுத்தால் படிப்பில் சோர்ந்த மூளை மேலும் சோர்வடையாதா?

விடை: ஆகாது. மூளையை கல்வியிலிருந்து வேறு ஒன்றுக்குத் திருப்பி விடுகிறோம். அதனால், களைத்த மூளை சுறுசுறுப்பு அடைகிறது.

வினா: படிக்கும் மாணவன் தோட்ட வேலை போன்றவை செய்வது இழிவல்லவா?

விடை: இந்த சிந்தனையே தவறு. தொழில் செய்வது இழிவல்ல. திருடுவது, கொலை செய்வது, சூது விளையாடுவது போன்ற செயல்கள்தாம் இழிவானவை. எத்தொழிலும் இழிவில்லை. காந்தியடிகள், தம் ஆசிரமத்தில் உள்ள நோயாளிகளின் மலத்தை அருவறுப்பு இல்லாமல் எடுத்தார். தொழில் செய்வது தன்னையும் தன் தாய்த் திரு நாட்டையும் வளர்க்கும். மேல்நாடுகளில் பயணம் போகும் பொழுது, பெட்டி படுக்கைகளைத் தூக்க கூலியாட்கள் இருக்க மாட்டார்கள். அவரவர்களுடைய பெட்டிகளை அவரவர்களே சுமக்க வேண்டும். இதை அவர்கள் இழிவாகக் கருத மாட்டார்கள். தொழில் செய்வதில் பெருமை உள்ளது. உலகில் எல்லோரும் ஒவ்வொரு வகையில் உழைப்பதால்தான் உலக இயக்கம் நடந்து கொண்டு இருக்கிறது.

வினா: வேலையால் இன்பம் கிடைக்குமா?

விடை: உறுதியாகக் கிடைக்கும். வேலை செய்யும்பொழுது ஒவ்வொரு உடல் உறுப்பும் இயங்குகிறது. அதனால், புத்துணர்ச்சியும் கிடைக்கிறது. மேலும், நாம் உண்டாக்குகின்றோம் என்ற நிலை நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நம்முடைய உழைப்பால் வந்த காய்கறியைக் காணும்பொழுது மகிழ்ச்சி வருகின்றது. நம்மால் உண்டான தென்னை மரத்தைப் பார்த்து வியக்கின்றோம். வேலை செய்யும் பொழுது பல கஷ்டங்களை அனுபவிக்கின்றோம். நாமே சிலவற்றைத் தவறாகச் செய்கின்றோம். அனுபவத்தால் திருத்திக் கொள்கிறோம்! நயப் தொழில் செய்யும்போது ஏற்படும் துன்பங்கள் அத்தொழிலால் வரும் பயனைக் காணும்பொழுது மறைந்து விடுகின்றன. அப்பொழுது மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒரு வேளை நம்மால் செய்து முடிக்க முடியாது என்ற நிலை இருந்தாலும், நாம் ஈடுபடுகின்றோம். நாம் ஈடுபடுகின்றோம் என்ற பெருமையே நமக்கு உணர்ச்சியைத் தந்து மேலும் செயலில் ஈடுபடச் செய்யும்.

வினா: நம்முடைய வேலையின் பயனை நாம் மட்டுமே அனுபவிக்க முடியுமா?

விடை: நாம் பிறருக்காகவும் வேலை செய்ய வேண்டும். நம்முடைய வேலையால் பிறர் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்றால், அது நமக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். மேலும், அது நமக்கும் பெருமைதானே! விவசாயி நெல்லைப் பிறருக்குத்தான் உற்பத்தி செய்கிறார். நமது அன்னை நம் வீட்டில் உள்ள அனைவருக்குமே உணவு சமைக்கிறார். நாம் செய்யும் தொழில் நமக்கு உதவி என்றாலும், அது பெரும்பாலும்


எப்படித் தெரியும்?

"இன்று முதல் தேதிதானே!"

"கரெக்ட்! யார் சொன்னது உனக்கு?"

"பாட்டு வாத்தியார் இன்று சம்பளம் கேட்டாரே!"





காக்கும் பொம்மை

சோளக் கொல்லை பொம்மை!
சொக்காய் போட்ட பொம்மை!
சிலுவை போன்ற கோலால்,
செய்து வைத்த பொம்மை!

வைக்கோல் நிறையத் தின்று
வயிறு புடைத்த பொம்மை!
சட்டி ஒன்றைக் கவிழ்த்துத்
தலையாய் வைத்த பொம்மை!

சட்டித் தலையில் வாயும்,
சப்பை மூக்கும், கண்ணும்
எழுதி வைத்த பொம்மை
எங்கள் வயலைக் காக்கும்!

–மு. வை. அரவிந்தன்

பிறருக்கு உதவுவதாகவே இருக்க வேண்டும்.

வினா: விளையாட்டு என்றால் என்ன?

விடை: ஓய்வு நேரங்களில் உடலின் எல்லா உறுப்புகளும் செயல்படச் செய்யும் ஆட்டம். விளையாட்டில் குறைந்தது இருவராவது இருப்பர். போட்டி உணர்ச்சி இருக்கும். ஆனால் உண்மையான விளையாட்டில் வெற்றி நோக்கம் மட்டுமே இருக்காது. விளையாட்டு சிறப்பாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கமே பெரிதாக இருக்கும். விளையாட்டில் உடலோடு மனமும் பயிற்சி அடைகிறது.

வினா: ஓய்வு நேரத்தில் எப்படி விளையாடலாம்?

விடை: ஓய்வு நேரத்தில், விளையாடத் தகுதி உள்ளவர்கள் அனைவருமே விளையாடி . ஆக வேண்டும். வேலை நேரத்தில் வேலையைப் புறக்கணித்து விளையாடக் கூடாது. உடலுக்கும் மனத்துக்கும் உகந்த எந்த விளையாட்டையும் விளையாடலாம். போட்டி மனப்பான்மையில் வெறி கொண்டு விளையாடக் கூடாது. அவ்வாறு வெறி வந்தால் உடலும் மனமும் கெடும். விளையாட்டின் சட்டங்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். தன்னுடைய் கௌரவத்தையும் நாட்டின் கௌரவத்தையும் கெடுக்காத அளவிற்கு விளையாட வேண்டும். நம்முடைய சீதோஷ்ண நிலைக்கும், நாட்டிற்கும் பொருத்தமான விளையாட்டுக்களை விளையாட வேண்டும்.

வினா: ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிடலாம்?

விடை: விளையாடத் தெரிந்தவர்கள் விளையாடலாம். மூளை, வேலை, செய்கின்றவர்கள் அதைச் செய்யலாம். ஓய்வு நேரத்தைக் கவனமாகச் செலவிட வேண்டும். மூளைக்கு ஓய்வு கொடுக்கும்போது, மனம் கட்டுப்பாடு இல்லாமல் குதிக்கும். ஆர்வத்தின் காரணமாகக் கெட்ட பழக்கங்களைக் கற்றுக் கொள்ளக் கூடாது. வேலையும் விளையாட்டும் தெரியாதவர்கள், அவற்றில் விருப்பம் இல்லாதவர்கள், தொண்டுகள் செய்யலாம். கல்வி கற்றுக் கொடுக்கலாம். மருத்துவ விடுதிக்குச் சென்று, நோயாளிகளைக் கண்டு ஆறுதல் கூறலாம். தியானம், தேகப் பயிற்சி போன்றவற்றைச் செய்யலாம்.

திருக்குறள்:

வேண்டற்க வென்றிடினும்
சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன் விழுங்கி
யற்று.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

3958 சி.கே. இரவி ராஜு, 19, உலகளந்தார் மாட வீதி, பெரிய காஞ்சிபுரம், காஞ்சிபுரம் 631 502
3959 ந. பாலாஜி, 4/6, வாஞ்சிநாதன் தெரு, மடிப்பாக்கம், சென்னை—600 091.
3960 எப். விஜய்தாமஸ், 3/86, அபிபுல்லா சாலை, சென்னை—17.
3961 கே. செல்வரங்கன், 100, கென்னடி நகர், 2 வது தெரு, சூரமங்கலம், சேலம்—5.
3962 கே. கிதாராணி, 100, கென்னடி நகர், 2 வது தெரு, சூரமங்கலம், சேலம்—5.
3963 பா. தென்றல், 1, கோபால் பிள்ளையார் கோயில் தெரு, திருவண்ணாமலை
3964 ஆர். கிருத்திகா, 35, ஜானகிராம் காலனி, சென்னை—600 106.
3965 எஸ். செந்தில்குமார், த/பெ. ஜி. சண்முகம், போலீஸ் லயன் தெரு, திருவாரூர்—611 104.
3966 பா. சிவகுமார், டி—134, அண்ணாசாலை, பிளாக்—18, நெய்வேலி—607 803.
3967 சி. கஸ்தூரி, 5, 10 வது கிழக்கு, காந்தி நகர், வேலூர்—6.
3968 எல். ஜெயமுரளி, 1/6 ஏ, தென்கரை அக்ரஹாரம், தென்கரை அஞ்சல், சோழவந்தான், மதுரை ஜில்லா—624 226.
3969 வி. புவனா, 8, சண்முக விலாஸ் காம்பவுண்ட், செல்வீஜர் 3 ம் தெரு, தூத்துக்குடி—628 002.
3970 ஜெ. கண்ணன், ஆர் 4/3, தர்மல் குவார்ட்டர்ஸ், மேட்டூர் அணை—636 401.
3971 ஏ.பி.ஆர். இளங்கோ மே/பா, டாக்டர் ராஜசேகரன், ஹாஸ்பெட்டல், கொட்டாரம், குமரி மாவட்டம்
3972 கி. ரெங்கராஜன், த/பெ. சி. கிருஷ்ணமூர்த்தி, 24, கஸ்தூரிபாய் ரோடு, கும்பகோணம்
3973 ந. பாஸ்கரன், 20 ஏ, பாரதியார் ரோடு, புதுசித்தாபுதூர், கோவை—44.
3974 எம். சத்தியமூர்த்தி, 2 வது தெரு, எம்.ஜி.புரம், பெரம்பலூர், திருச்சி மாவட்டம் 621 212
3975 இரா. வெங்கடேசன், 2/49, சாலியத் தெரு, அம்மாசத்திரம்.
3976 பெ. முருகேசன், 43, ராஜாஸ் சைக்கிள் சென்டர், திருச்சி மெயின் ரோடு, தம்மம்பட்டி—636 113.
3977 ஏ. மேரிசில்வியா, 15, மாரியம்மன் கோவில் சந்து, வரகனேரி, திருச்சி—620008
3978 சி. சசிகுமார், சி/65, எஸ்.எப்.ஆர்.சி. குவார்ட்டர்ஸ், ஆர்.எஸ்.புரம் அஞ்சல், கோவை—641 002
3979 பி. ராஜகுமார், 7 ஏ, காந்தாரி இல்லாம், அரிசிப்பாளையம், சேலம்—636 009.
3980 டி. சதீஷ் குமார், த/பெ. எம். துரை, மங்கலம் அஞ்சல், தி.மலை, தாலுகா.
3981 கே. கண்ணன், 26, டாக்டர் முனிசாமி வீதி, பொள்ளாச்சி 642 001.
3982 எஸ். செல்வம், 87—டி, சிங்காரவேலவர் தெரு, கே.புதூர், மதுரை.
3983 தி.கு. கிருஷ்ணகுமார் 38, ஜெ, சீனிவாசபுரம், கரூர்—639 001.
3984 கி. ஆனந்த நாராயணன், 9, இல்லத்தார் தெரு, கயத்தார்—627 952.
3985 எல். அருள்குமார், 51, பெருமாள் வடக்கு ரத வீதி, பாளையங்கோட்டை
3986 ஆர். வெங்கடேசன், த/பெ. ஏ. ராமசாமி, தலைமை ஆசிரியர், சோகில்பட்டி, கல்குறிச்சி அஞ்சல்
3987 நா. மணிவண்ணன், 119/ஏ, 5 வது வார்டு, பாலக்கோடு அஞ்சல், தருமபுரி மாவட்டம்
3988 ர. வரதராஜன், 3/12, ஜோதிபுரம், கோயம்பத்தூர்—641 019
3989 எம். சுகுமாரன், 260, பிள்ளையார் கோயில் லேன், இடையர் வீதி, கோவை—641001
3990 ஜெ. இளஞ்செழியன், 729, எச்/2, வகாப் காலனி, அடியக்க மங்கலம் அஞ்சல், திருவாரூர் தாலுகா.
3991 பா. சுஜாதா, 4, வடக்கு ரயில்வே காலனி, மயிலாடுதுறை.
3992 கே. பாலமுருகன், S/o. ஆர். குழந்தைவேல், சிறப்புலி நாயனார் வீதி, ஆக்கூர், தரங்கம்பாடி தாலுகா.
3993 பி. பாலாஜி, 103, மேலண்டை ராஜ வீதி, காஞ்சிபுரம்.
3994 எஸ். சுப்பிரமணியம், B—2/504, B.H.E.L., Township, திருச்சி — 14.
3995 எஸ். முரளிதரன், அனந்தலை கிராமம் (வழி) வாலாஜா பேட்டை, வ. ஆ. மாவட்டம்.
3996 எஸ். நரசிம்மன், அனந்தலை கிராமம், (வழி) வாலாஜா பேட்டை, வ. ஆ. மாவட்டம்.
3997 மு. சத்தியமூர்த்தி S/o.S. முருகேசன், ஹெல்த் இன்ஸ்பெக்டர், செய்யாறு (வ.ஆ.மா.)

3998 இரா. சுதா, மஞ்சக்குடி, குடவாசல் — 612 610.
3999 வே. சரவணன், சிறுக்குளம் (வழி) நென்மேனி, சாத்தூர் தாலுகா — 626 202.
4000 எஸ். மகாலெட்சுமி, D/o. சேதுராமன், 45, நடுத்தெரு, பூதாமூர் (P.O.)
4001 ஆர். ஜி. செல்வராசன், 10/34 A, பஜனை கோவில் வீதி, உடையார் பாளையம், கணபதி வழி, கோவை — 641 006.
4002 க. செந்தில்குமாரன், 4, சையத் ஹயக் தெரு, அரிசிபாளையம், சேலம் — 9.
4003 இரா. சுமேதா, 18 A, இராகமாலா, அக்ரஹாரம், அறந்தாங்கி — 614 616.
4004 சௌம்யசுதா, 34, ஜி. எஸ். டி. சாலை, மதுராந்தகம் — 603 306.
4005 வி. மகேஷ்குமார், 12, பொன்னுண்டிக் கவுண்டர் தெரு, சிவகாமிபுரம், புதூர், சேலம் — 7.
4006 ஜி. விஜய் ஆனந்த், 4, சந்நிதி வேளாளத் தெரு, திருவண்ணாமலை.
4007 எஸ். நர்மதா, 30, ஜீவா நகர், 2 வது தெரு, புதுவண்ணாரப்பேட்டை சென்னை — 81.
4008 கோ. பாலச்சந்தர், 83/W, தருமர் தெரு, க்ராந்திநகர், வாணியம்பாடி.
4009 ஐ. வித்யா, 163, செங்கம் ரோடு, திருவண்ணாமலை.
4010 ஆர். செல்வராஜ், S/o. இராமசாமி, O. K. மண்டபன் (Via) மாஸ்தி கவுண்டன் பதி அஞ்சல், கோவை — 641 032.
4011 இரா. சீனிவாசன், 16, டி. வி. எஸ். நகர், கோவை — 641 025.
4012 ஆர். சீதாலட்சுமி, 16, டி. வி. எஸ். நகர், கோவை — 641 025.
4013 எஸ். ஸ்ரீராம், D 16, 11 வது கிராஸ் தெற்கு, திருச்சி — 18.
4014 டி. கணேஷ்குமார், 73/1, மாரியம்மன் கோவில் தெரு, கொசப்பேட்டை, வேலூர் — 632 001.
4015 ந. சிவகுமார், 14, கார்த்திகேயபுரம் 4 வது தெரு, மடிப்பாக்கம், சென்னை — 91.
4016 எஸ். பாலசுப்பிரமணியன், 1 B 4, வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்பு, சந்தைப் பேட்டை, திருக்கோவிலூர்.
4017 ஜி. தனலட்சுமி, D/o. கே. கோவிந்தசாமி, குமாரபுரம், நள்ளி போஸ்ட் (வழி) சாத்தூர்.
4018 ஆர். பாலமுருகன், 53 A, பெரிய கங்கணாங்குப்பம், உப்பளவாடி அஞ்சல்,
4019 பி. சி. ரோகிணி, 3, ராம் நகர், இல்லை நகர், திருச்சி — 18.
4020 பி. சி. துரைராம சிதம்பரம், 39, சுதந்திர வீதி, தென்கரை, பெரியகுளம்.
4021 வி. சுதா, 19, ஆடிய பாதம் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை — 1.
4022 இரா. கார்த்திகா தேவி, D/o. கு. இராஜரத்தினம், பஞ்சு வியாபாரம், ம. ரெட்டிய பட்டி.
4023 ரா. வைத்தியநாதன், D 7, ஞானசம்பந்தர் சாலை, வட்டம் 19, நெய்வேலி — 3.
4024 ர. பழனி, 6, அப்பாள் பத்தர் வீதி, பண்ருட்டி.
4025 சி. தட்சிணாமூர்த்தி, வேளுக்குடி அஞ்சல், கமலாபுரம் வழி — 610 102.
4026 எஸ். ஆர். சிவகுமார், 3/92, கிருஷ்ணா நகர், உள்ளகரம், மடிப்பாக்கம், சென்னை — 91.
4027 ஏ. பூங்கொடி, 43, வெங்கட்ராமன் தெரு, செவ்வை நகர், சேலம் — 2.
4028 கே. பிரபாகரன், அண்டராயனூர் அஞ்சல் — 605 803, தெ. ஆ. மாவட்டம்.
4029 து. சண்கம், வேளாளர் தெரு, மணலூர், திருத்தணி அஞ்சல் — 631 210.
4030 வி. அருணா, 12, ஸ்வர்ணாம்பிகா லே — அவுட், இராம்நகர், கோவை — 9.
4031 எம். கோபாகுமார், 258, நாராயண நகர், சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம்.
4032 எம். ஸ்ரீனிவாசன், 1, ராமச்சந்திரன் தெரு, அம்பத்தூர், சென்னை — 53.
4033 ந. நவசத்தீஸ்குமார், 236, ரயில்வே காலனி, புது ஜெயில் ரோடு, மதுரை — 10.
4034 வெ. பானுமதி, 31, அக்ரஹாரம், வாசுதேவநல்லூர் — 627 758.
4035 வெ. ஹரிஹர தர்மராஜா, 31, அக்ரஹாரம், வாசுதேவநல்லூர் — 627 758.
4036 பை. கு. வைத்தியநாதன், 31, கோலக்காரன் தெரு, கொசப்பேட்டை, வேலூர்.
4037 டி. பூபாலகிருஷ்ணன், 32 A, 2 வது வீடு, வடக்கு, பேன்ஷன் லைன் ரோடு, குகை, சேலம் — 6.
4038 பி. குருமூர்த்தி, 23, சிங்கணப்பேட்டை, தெற்குத் தெரு, குகை, சேலம் — 6.
4039 தீ. சிதம்பரம், 95, கன்னிமாரம்மன் தெரு, தென்காசி.
4040 கே. ஸ்ரீவாணிப்ரியா, 289, மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் — 2.
4041 ஏ. ஷீலா, 49, கிழக்குத் தெரு, நாகர் கோயில்.
4042 தி. ராஜசேகர், 257, சேதுரஸ்தா, வேதாரண்யம்.
4043 பி. ஸ்ரீகிருஷ்ணா, 47, ஜானகிராம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33.
4044 கே. வி. உமா, C/o. கே. எஸ். வேணி மாதவன், இரும்பேடு கிராமம், (வ. ஆ. மா.)
4045 எஸ். அருண்குமார், 1 B 4 வீட்டு வசதி வாரிய வாழகைக் குடியிருப்பு, சந்தைப் பேட்டை, திருக்கோவிலூர்.
4046 இ. பிரபுசங்கர், 28, சகோதரர் தெரு, ராமவர்மபுரம், நாகர்கோயில்.
4047 கே. வி. பத்மா, C/o. கே. எஸ். வேணி மாவதன், இரும்பேடு கிராமம் — 632 317.
4048 எம். கே. ஜி. குமார், 148, பனகல் தெரு, காவேரிப்பட்டணம், தருமபுரி மாவட்டம்.
4049 எஸ். சிவப்பிரகாசம், 89, வடக்கு ரத வீதி, சொக்கலிங்கபுரம், அருப்புக்கோட்டை.

(இன்னும் வரும்)

சிரமமும்



செலவும்

குழந்தைக் கவிஞர்

மேட்டுப் பாக்கம் பண்ணை யாரின்
வீட்டைச் சுற்றித் தோட்டமாம்
தோட்டம் அதனில் கிணறு தோண்டச்
சொன்னார் அந்தப் பண்ணையார்

இருப தடிகள் தோண்டி னார்கள்;
ஏனோ தண்ணீர் வரவில்லை
பொறுமை இழந்த பண்ணை யாரோ
"போதும் நிறுத்து" என்றனர்.

வேறோர் இடத்தில் தோண்டச் சொன்னார்
மேற்குப் பக்க மூலையில்
ஆறு பேர்கள் வெட்டினார்கள்;
ஆன போதும் பலனில்லை

இருப தடிகள் தோண்டிப் பார்த்தும்
இங்கு தண்ணீர் வரவில்லை
சிரமம் இனியும் எதற்கு? மேலும்
தோண்ட வேண்டாம்-என்றனர்.

"இருப தடிகள் தோண்டி விட்டோம்
இன்னும் சிறிது ஆழமாய்ப்
பொறுமை யோடு தோண்டிப் பார்ப்போம்-"
ஒருவர் சொன்னார் இப்படி

இரண்டு அடிகள் மேலும் தோண்ட
ஈரக் கசிவு தெரிந்ததால்
விரைந்து மேலும் மேலும் அங்கே
வேலை யாட்கள் தோண்டினர்.

குபுகு பென்று நீரும் அங்கே
குதித்தே ஓடி வந்திட
விவரம் அறிந்த பண்ணை யாரும்
மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்

இருப தடிகள் தோண்டி னோமே
இன்னும் அந்த இடத்திலே
இரண்டு அடிகள் தோண்டி யிருந்தால்
இங்கும் தோண்ட வேண்டுமா?

பொறுமை இல்லை. ஆதலா லே
சிரமத் தோடு செலவுமே
இரண்டு மடங்காய் ஆனதென்றே
எண்ணி னாரே பண்ணையார்

பெருமைப்பட என்ன இருக்கிறது?



— இரா. வேந்தராஜன்

"இந்தச் செருப்பை சீக்கிரம் தைச்சுக் கொடு."

கண்ணன் நிமிர்ந்து பார்த்தான்.

அழகான வாலிபன் ஒருவன் எதிரே நின்றிருந்தான். நல்ல சிவப்பு. சுருள் சுருளான முடி. நாகரீகமான உடைகள் அணிந்திருந்தான். கையில் ஓர் அழகான தோல்பை.

"என்ன தம்பி, அப்படிப் பார்க்கிறாய்?"

"ஒண்ணுமில்லே."

கண்ணன் செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு அதைத் தைக்க ஆரம்பித்தான்.

தன்னுடைய வாழ்க்கை மாத்திரம் ஏன் இப்படி ஆகிவிட்டது? இளம் வயதிலேயே அம்மா அப்பாவை இழந்தாகிவிட்டது. எழுதப் படிக்க சுத்தமாகத் தெரியாது. அழகு இல்லே. அந்தஸ்து இல்லே. மற்றவர்களைப் போலப் பெருமைப்பட என்ன இருக்கிறது என்னிடம்?"

கண்ணன் இந்த நினைவுகளை அசை போட்டுக்கொண்டே செருப்பைத் தைத்து முடித்தான்.

"கூலி எவ்வளவு?"

"எட்டணா."

வாலிபன் அவசர அவசரமாக, ...ந்தன் கைவிட்டான். கண்ணனின் கைகளில் நாணயத்தைத் திணித்தான். வேகமாக நடக்க ஆரம்பித்தான். ஏதோ அவசர வேலை என்று ரவி நினைத்துக் கொண்டான்.

வாலிபன் கொடுத்த நாணயத்தை எதேச்சையாகப் பார்த்தான் கண்ணன்.

அது ஓர் ஒரு ரூபாய் நாணயம்!

செருப்புத் தைக்கும் கருவிகளை எல்லாம் நொடியில் பைக்குள் போட்ட கண்ணன், அதைத் தெரிந்த பக்கத்துக் கடையில் வைத்தான். அந்த வாலிபன் சென்ற திசையில் வேகமாக ஓட ஆரம்பித்தான்.

"சார், சார்...."

கண்ணனின் குரலைக் கேட்ட அந்த வாலிபன் திரும்பிப் பார்த்தான். மூச்சிரைக்க ஓடி வந்து நிற்கும் கண்ணனைப் பார்த்ததும் அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"என்ன தம்பி, என்ன?"

"ஐயா! நீங்க எனக்கு எட்டணா தரணும். மறந்து போய் ஒரு ரூபா கொடுத்திட்டீங்க. இந்தாங்க உங்க ஒரு ரூபாய். எனக்குச் சேர வேண்டிய எட்டணா மாத்திரம் கொடுங்க."

வாலிபன் கண்ணனை ஒரு நிமிடம் ஆச்சரியமாகப் பார்த்தான். ஒரு ரூபாய் நாணயத்தை வாங்கிப் பைக்



குள் போட்டுக் கொண்டு, ஓர் எட்டணா நாணயத்தை எடுத்துக் கண்ணனிடம் கொடுத்தான்.

"தம்பி, எனக்கு ஒரு உதவி செய்வாயா?"

"சொல்லுங்க, செய்கிறேன்."

"என்கூட கொஞ்சம் வாயேன். ஒரு இடத்துக்குப் போகணும்."

"ஓ...." கண்ணன் வாலிபனுடன் நடக்க ஆரம்பித்தான்.

பத்து நிமிட நடைக்குப் பின், அவர்களுக்கு எதிரே ஒரு போலீஸ் ஸ்டேஷன் தென்பட்டது.

"இங்கே ஒரு வேலை இருக்கிறது. வா, தம்பி!"

கண்ணனுக்குப் பயமாக இருந்தது, போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைய. 'சரி ஆனது, ஆகட்டும்' என்று உள்ளே நுழைந்தான்.

உள்ளே சப் இன்ஸ்பெக்டரும் நான்கைந்து போலீஸ்காரர்களும் இருந்தனர். வாலிபன் தன்னுடைய கையில் இருந்த தோல் பையை சப் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தான்.

"சார்! இந்த ஊர் லைப்ரரிக்கு எதிர்த்தாற்போல இந்தப் பை கீழே கிடந்தது. இதிலே ஆயிரம் ரூபா பணம் இருக்கிறது. இதை உரியவர்களிடம் சேர்த்துடுங்க சார்."

"உங்களுடைய நேர்மையைப் பாராட்டுகிறேன் மிஸ்டர். உங்களை மாதிரி இளைஞர்கள் இருந்தால்தான் நம் தேசம் உருப்படும்."

"சார்! நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பெருமை எல்லாம் இந்தப் பையனைத்தான் சேரும். இந்தப் பணம் முதலிலே எனக்குக் கிடைத்ததும், இதை நானே எடுத்துக்கலாமென்றுதான் இருந்தேன். ஆனால், செருப்புத் தைக்கிற இந்த ஏழைப் பையனுக்கு எட்டணாவுக்குப் பதிலா, தெரியாமல் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டேன். இந்தப் பையன் என்னைத் தேடி வந்து நாணயமாக மீதியை என்னிடத்திலே திருப்பிக் கொடுத்துட்டான். ஒரு படிக்காத ஏழைப் பையனே இவ்வளவு நாணயமாக இருக்கும்போது, நான் எப்படி இருக்க வேண்டுமென்று நினைத்தேன். உடனே என் மனசு மாறி விட்டது. பணத்தோட இங்கே வந்துட்டேன்."

"வெரிகுட், மை பாய்" என்ற எஸ்.ஐ. கண்ணனைத் தட்டிக் கொடுத்தார்.


கண்ணனுக்குப் பெருமையாக இருந்தது.

"உங்க நாணயத்தைப் பாராட்டி உங்களுக்கு ஏதாவது பரிசு கொடுக்க நான் சிபாரிசு பண்றேன்."

"சார்! அந்தப் பரிசுப் பணம் பூராவையும் இந்தப் பையனுக்கே கொடுத்துடுங்க. அதை வாங்க இவனுக்குத்தான் முழுத் தகுதி இருக்கிறது" என்றான் வாலிபன்.

பெருமைப்பட தன்னிடம் என்ன இருக்கிறது என்று வருத்தப்பட்ட கண்ணன், பணம், அழகு, அந்தஸ்து இவைகளால் மட்டும் பெருமை வந்துவிடுவதில்லை. பிறர் பொருளுக்கு ஆசைப்படாத நேர்மையும் பெருமையைத் தருகிறது என்ற உண்மையைப் புரிந்து கொண்டான்.

உறுப்பினர் வரைந்த ஓவியம்!



எஸ். ஆனந்த் 10192



''அம்மா, நாளைக்குத்தானே எனக்குப் பிறந்த நாள்?'' — செல்வி ஆவலோடு கேட்டாள்.

''ஆமாம் கண்ணு'' என்றாள் வேலம்மா.

''ஏம்மா, எனக்கு புது சொக்கா வாங்கித் தருவியா?''

''புதுச் சொக்காயா....! ம்.... ம். தர்றேண்டி கண்ணு.''

'கேக்.''

''வாங்கித் தர்றேன்.''

''அப்புறம் என்ன வாங்கித் தருவே?''

''அதான் யோசிச்சுக்கிட்டிருக்கேன். ம்.... பாதாம் அல்வா, ரவா கேசரி, லாடு.....''

''நிஜமாவா அம்மா?'' செல்வி ஆச்சரியப்பட்டாள்.

''நிஜமாத்தாண்டி கண்ணு.... சரி; அதோ பானையில இருக்கிற பழைய சாதத்தைச் சாப்பிட்டுட்டு இப்போ சமத்தா பள்ளிக்கூடம் போவியாம். நாளைக்கு நான் எல்லாம் வாங்கித் தருவேணும்...'' என்று கூறியவாறே தன் ஒரே மகள் செல்வியை வாரி அணைத்து, உச்சி மோந்தாள் வேலம்மா.

பழைய சாதத்தைச் சாப்பிட்டு விட்டு, ஆசைக் குமிழிகள் கொப்பளிக்க, புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு சிட்டாய்ப் பறந்தாள் செல்வி.

இவற்றை எல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே, குடிசையின் மூலையில் முடங்கிக் கிடந்தான் வேலம்மாவின் கணவன் கந்தன்.

கந்தன் ஒரு விபத்தில் தன் இரு கால்களையும் இழந்துவிட்டதால் அவனால் நடக்க இயலாது. மேலும் அவன் எப்போதும் நோய்வாய்ப் பட்டு, குடிசையின் மூலையே கதி என்று ஒருவழியாக ஒடுங்கிப் போயிருந்தான்.

''என்ன வேலம்மா.... கடவுள்தான் என்னை நடமாட முடியாமல் செய்து விட்டார். நாமோ ஒருவேளை கஞ்சிக் குக்கூட வழியில்லாமல் கிடக்கிறோம். உன்னால் எப்படி செல்விக்கு புதுச் சொக்காய் வாங்கிக் கொடுக்க முடியும்? பணத்திற்கு நீ எங்கே போவாய்?'

என்று கேட்டான், சுந்தன்.

''குழந்தை ஆசையாய்க் கேட்கிறாள்.... ம்.... கடவுள் ஒரு வழி காண்பிக்காமலா போய்விடப் போகிறார்? நாளைக்கு எங்க முதலாளியோட பெண் ராஜிக்கும் பிறந்த நாள். நிறைய வேலை இருக்கு. நான் வரட்டுமா?'' என்று கூறிக் கொண்டே குடிசையை விட்டு வேகமாக வெளியேறினாள் வேலம்மா.

* * * * *

கண்ணப்பர் அந்த ஊரிலேயே பெரிய பணக்காரர். அவருடைய பங்களாவில்தான் வேலம்மா வேலை செய்து வந்தாள்.

தினமும் காலையிலும் மாலையிலும் பங்களாவிற்குச் சென்று, வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுத் திரும்பும்போது, கண்ணப்பரின் மனைவி கொடுக்கும் மீந்து போன உணவை வீட்டிற்கு எடுத்து வருவாள் வேலம்மா. அதை தன் மகள், கணவனுடன் பகிர்ந்து சாப்பிடுவாள்.

தன் ஒரே மகள் ராஜியின் பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாட முடிவு செய்திருந்தார் கண்ணப்பர்.

பிறந்த நாளன்று என்னென்ன பலகாரங்கள் செய்ய வேண்டுமென்று இரு தினங்களுக்கு முன்பே, சமையல்காரரிடம் கூறி இருந்தார் கண்ணப்பர். எப்படியும் அவற்றில் சிறிதளவாவது தனக்குக் கொடுப்பார்கள், அதைத் தன் மகள் செல்விக்குக் கொடுத்து அவளைச் சந்தோஷத்தில் ஆழ்த்திவிடலாமென்ற நம்பிக்கையில்தான் வேலம்மா செல்வியிடம் பலகாரங்கள் தருவதாகக் கூறியிருந்தாள்.

அன்று ராஜியின் பிறந்த நாள்.

கண்ணப்பர் வீட்டில் அவருடைய உறவினர்களும், நண்பர்களும் கூடி இருந்தனர். ராஜி, புதிய சட்டை அணிந்து தேவதை போல் காட்சி தந்தாள். வந்திருந்தவர்கள் அவளுக்கு விதவிதமான விளையாட்டுச் சாமான்களையும் அட்டைப் பெட்டியில் கண்ணைப் பறிக்கும் உயர்ந்த ரக ரெடிமேட் ஆடைகளையும் பரிசாகக் கொண்டு வந்திருந்தனர்.



பாவம், வேலம்மா!

முதல்நாள் மாலையிலிருந்தே அவளுக்கு ஓய்வே இல்லாத வேலை. சமையல்காரரும் அவளும் இரவு முழுவதும் தூங்கவே இல்லை. விதவிதமான பலகாரங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் பகல் விருந்து அருந்திச் சென்ற பிறகு, பங்களா அமைதியாக இருந்தது.


தனக்கு வந்திருந்த பரிசுப் பொருள்களை, ஒவ்வொன்றாக ஆவலுடன் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜி.

அப்போது பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

ஒருவழியாக எல்லா வேலைகளையும், செய்து கொடுத்துவிட்டு, எஜமானியம்மாளிடம் சொல்லிக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள் வேலம்மா.

முதல் நாள் இரவு முழுவதும் கண் விழித்திருந்தது, ஓயாத வேலை, வேலை அதிகமாக இருந்த காரணத்தினால் முதல் நாள் மாலை முதல் சரியாகச் சாப்பிடாமல் இருந்தது அனைத்தும் சேர்ந்து வேலம்மாவைத் தள்ளாட வைத்தன.

வேலை முடிந்துவிட்டதால் வீட்டுக்குப் போகப் புறப்பட்டாள் வேலம்மா. எப்போதும் மீந்து போகும் பலகாரங்



களை வேலம்மாவுக்குக் கொடுக்கும் எஜமானியம்மாள் அன்று மகளுக்கு வந்த பரிசுப் பொருள்களைப் பார்த்துக் கொண்டிருந்த மும்முரத்தில் எதுவுமே கொடுக்கவில்லை. ''வீட்டிற்கு போய்விட்டு வர்றேம்மா'' என்று சொன்ன வேலம்மாவைப் பார்த்து, ''சரி'' என்று கூறி அனுப்பி விட்டாள்.

மனம் இடிந்துபோன வேலம்மா, பங்களாவின் கேட்டை நெருங்கிக் கொண்டிருந்தபோது அந்த அதிசய நிகழ்ச்சி நடந்தது.

''வேலம்மா! வேலம்மா!'' என்று கத்திக் கொண்டே ராஜி ஓடி வந்தாள். அவள் வேகமாக, ஓடி வருவதைக் கண்டவுடன், ''என்ன சின்னம்மா... ஏன் இப்படி ஓடி வர்றீங்க?'' என்று பதறியவாறே கேட்டாள் வேலம்மா.

''வேலம்மா, உன்னை அம்மா அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க. கொஞ்சம் வந்துட்டுப் போ வேலம்மா......'' என்று வேலம்மாவின் கையைப் பிடித்து இழுத்தவாறே பங்களாவை நோக்கிச் சென்றாள் ராஜி.

வேலம்மாவைக் கண்டவுடன் எஜமானியம்மாள் ஓடி வந்து வேலம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''ஏண்டி வேலம்மா.... உன்னோட பெண்ணுக்கும் இன்னைக்குத்தான் பிறந்த நாளாமே....?'' என்று கேட்டாள்.

அப்போதுதான் வேலம்மாவுக்கு தன்னை எதிர்பார்த்துத்தன் மகள் காலையிலிருந்து காத்திருப்பாள் என்பது நினைவுக்கு வந்தது. தன்னுடைய இயலாமையை எண்ணியவுடன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோட தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள் வேலம்மா.


அதைப் பார்த்தவுடன் எஜமானியம்மாள் ''அழாதே வேலம்மா... இந்த விஷயமே எனக்கு ராஜி சொல்லி இப்பத்தான் தெரியும். முன்னமே தெரிஞ்சிருந்தா, உன் மகளையும் இங்கே அழைச்சு வரச் சொல்லியிருப்பேன். சீக்கிரமா வீட்டுக்கும் அனுப்பியிருப்பேன். இரு, இதோ வந்துடறேன்'' என்று கூறிவிட்டு, அவசர அவசரமாக


உள்ளே சென்று உடன் திரும்பி வந்தாள்.

அப்போது அவளுடைய கைகளில் ஒரு புதிய டிபன் கேரியர் இருந்தது. "இந்தா வேலம்மா, இந்தக் கேரியரில் ஸ்வீட், பலகாரமெல்லாம் இருக்கு. இதை உன் பெண்ணுகிட்டே கொடு. இந்த டிபன்கேரியரை என்னோட அன்பளிப்பா வைச்சுக்கோ. இந்தா நூறு ரூபாய். இது ஐயாவோட அன்பளிப்பு" என்று கூறியவாறே டிபன் கேரியரையும் பணத்தையும் வேலம்மாவிடம் கொடுத்தாள் எஜமானியம்மாள்.

"அப்படியானால், என் அன்பளிப்பு....? இதோ இந்த அட்டைப் பெட்டியிலே புதுச் சட்டை, பாவாடை இருக்கு. வாங்கிக்கோ வேலம்மா..." என்று அட்டைப்பெட்டியைக்கொடுத்தாள் ராஜி.

அவர்களுக்கு நன்றி சொல்லி விட்டு இறைவனின் கருணையை எண்ணியவாறே, வீட்டு வாசலில் தனக்காக ஆவலோடு காத்திருக்கும் தன் மகள் செல்வியைக் காண விரைவாக நடக்கலானாள் வேலம்மா.







பெற்றோருடன் அநுபமா

பதினேழு வயதில் பத்மஸ்ரீ!

1981 ஆம் வருடம ஏழாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவி ஒருத்திக்கு பொழுது போக வில்லை என்பதால் செஸ் விளையாட ஆசைப்பட்டாள். வீட்டில் செஸ் போர்டு வாங்கிக் கொடுத்து, காய்களை எப்படி நகர்த்த வேண்டும் என்பதை மட்டும் சொல்லிக் கொடுத்தார்கள் பெற்றோர்கள். அந்தப் பெண் தன் சகோதரனுடன் விளையாட ஆரம்பித்தாள். பிறகு பள்ளியிலும் சக மாணவ மாணவிகளுடனும் செஸ் விளையாடிக் னாள். அநேகமாக, 'வெற்றி இந்த மாணவிக்குத்தான்!

பிறகு, 1982ல் அனைத்து பள்ளிகளுக்கும் இடையே நடந்த செஸ் விளையாட்டுப் போட்டியில் தன் வயதுக்கொத்த மாணவிகளைத் தோற்கடித்து 'இண்டர் ஸ்கூல் சாம்பியன்' என்ற பட்டத்தைப் பெற்றாள்.

இவள் விளையாட்டைப் பார்த்த ஸ்கூல் கோச் கோகலே, இந்தப் பெண்ணிடம் திறமை இருப்பதைக் கண்டு கொண்டு செஸ் விளையாட்டை சீரியசாக விளையாடும்படி தூண்டிவிட்டார். கோகலே ஒரு மகாராஷ்டிர செஸ் சாம்பியன். அவர் சொன்னதால், நாள் ஒன்றுக்கு இரண்டு மணி நேரம் செஸ் விளையாடுவதில் செலவிட்டாள் இந்தப் பெண். படிப்பிலும் படு சுட்டி. படிப்புக் கெடாமல் விளையாட, பெற்றோர்களும் அனுமதித்தார்கள்.

1985ல் ஆல் இந்தியா செஸ் ஃபெடரேஷன் இவளைத் தேர்ந்தெடுத்து ஆசிய ஜூனியர் பெண்களுடன் விளையாட ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்தது. அங்கும் வெற்றி வாகை சூடினாள் இந்தப் பெண். ஆசிய அரசி (Asian Queen) என்ற பட்டத்துடன் ஆசிய ரோலிங் கோப்பையையும் இந்தியாவுக்குக் கொண்டு வந்தாள்.

1985 நவம்பரில் டாக்கா (பங்களா தேஷ்) வில் நடந்த பெண்கள் ஜூனியரிலும் வென்று இந்திராகாந்தி கோப்பையைக் கைப்பற்றினாள்.

இந்தியா திரும்பியதும் மகாராஷ்டிர அரசிடமிருந்து இந்தப் பெண்ணின் பெற்றோருக்கு ஒரு கடிதம் வந்தது. உங்கள் பெண்ணிற்கு பத்மஸ்ரீ பட்டம் கொடுக்க முடிவெடுத்துள்ளது இந்திய அரசு என்று அக்கடிதத்தில் இருந்தது.

இந்த ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி, குடியரசு தினத்தன்று இந்தப் பதினேழு வயது மாணவிக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்தது.

நான்கு வருடங்களில் இத்தனை சாதனை புரிந்த இந்தப் பெண்தான் அனுபமா அப்யங்கர் — பம்பாயில் பிளஸ் — 2 படித்துக் கொண்டிருக்கிறாள்.

— காமாட்சி சந்திரசேகர்.

கண்ணன் வந்தான்!

ரங்கநாயகி நாராயணன்



வெளியில் பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. சூறாவளி போல் காற்று வீசிக் கொண்டிருந்தது. அந்தச் சிறிய ஓட்டு வீட்டின் ஜன்னல் வழியாகக் கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தாள் வள்ளி. தங்கை மீனாவுக்கு நல்ல ஜுரம். சமயம் பார்த்து அம்மாவும் ஊரில் இல்லை. பாட்டிக்கு உடல் நலம் இல்லாததால் பார்த்து வரப் பக்கத்து ஊருக்குச் சென்றிருந்தார்கள். தங்கைக்கு மருந்து வாங்க அப்பாவிடம் பணமில்லை.

அப்பா வேலை செய்து கொண்டிருந்த கம்பெனியை, திடீரென்று மூடிவிட்டதால் அப்பா வேலை இல்லாமல் கஷ்டப்பட்டார். யாரிடமாவது நண்பர்களிடம் கடன் கேட்டுப் பார்க்கலாம் என்று காலையில் சென்றவர் இன்னும் திரும்பவில்லை. அப்பா கிளம்பியபோது சிறு தூறலாக இருந்தது. வர வர பலத்து பெரும்மழையாக பொழியத் தொடங்கிவிட்டது!

சாரலடித்தது ஜன்னல் வழியாக. ஜன்னலை மூடிவிட்டு, தங்கையின் அருகில் வந்தாள் வள்ளி. மீனா ஜுர வேகத்தில் அனத்திக் கொண்டிருந்தாள். வள்ளிக்கு மிகவும் பயமாக இருந்தது. அவளும் சிறுமிதானே.

மெள்ள எழுந்து பூஜை அலமாரியிடம் சென்றாள். அங்கு அழகிய, குழலூதும் கண்ணன் பொம்மை ஒன்று இருந்தது. அந்தக் கண்ணனை வள்ளிக்கு ரொம்பப் பிடிக்கும். அவளுக்குக் கடவுள் பக்தி அதிகம். அதுவும் கண்ணனிடம் அளவில்லாத அன்பும் பக்தியும் உண்டு. சில சமயங்களில் அந்தக் குழலூதும் கண்ணனை, தன் தோழனாக நினைத்துப் பல விஷயங்களைப் பேசுவாள். அவள் அப்பாவும் அவளுக்குக் கடவுளைப் பற்றிய கதைகளையெல்லாம் சமயம் கிடைக்கும்போதெல்லாம் கூறுவார்.

இப்போதும் வள்ளி அந்தக் கண்ணன் சிலையருகே சென்றாள். ''கண்ணா! உன்னைக் கூப்பிட்டால் உடனே வந்து உதவி செய்வாய் என்று என் அப்பா கூறுவாரே. மீனாவைப் பார் கண்ணா. இரண்டு நாளாக நல்ல ஜுரம் அவளுக்கு. அப்பாவிடம் பணம் இல்லை. எங்களுக்கு நீ உதவக் கூடாதா? அப்பாவுக்கு எப்படியாவது பணம் கிடைக்க உதவி செய்ய மாட்டாயா? என் தங்கை உடம்பைக் குணமாக்கு கண்ணா'' மெல்லிய குரலில் கண்களில் நீர் வழிய முறையிட்டாள் வள்ளி.



வாயிற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. அப்பாவாகத்தானிருக்க வேண்டும். ஆவலோடு ஓடிச் சென்று கதவைத்திறந்தாள்,வள்ளி.ஏமாற்றம்! தந்தை வரவில்லை. கதவருகே ஒரு சிறுவன் கையில் குடையுடன் நின்று கொண்டிருந்தான். வள்ளியைக் கண்டதும்தயங்கியவாறே கேட்டான். ''மழையோடு, ரொம்பக் காற்றடிக்கிறது. நடக்கவே முடியவில்லை. சிறிது நேரம் நான் இங்கே நின்று விட்டுப் போகலாமா?''

வள்ளிக்கு அவனைப் பார்த்தபோது பாவமாக இருந்தது. குடையிருந்தாலும் பெரும்பாலும் நனைந்திருந்தான். ''சரி தம்பி, உள்ளே வா. கதவைத் திறந்து வைத்தால் சாரல் அடிக்கும். என் தங்கைக்கு ஜுரம். இதோ துண்டு தருகிறேன். உடம்பைத் துடைத்துக் கொள்'' வள்ளி கூறியவாறே அவனை உள்ளே அழைத்து வந்து கொடியில் கிடந்த துண்டை எடுத்துக் கொடுத்தாள்.

குடையை ஓர் ஓரமாக வைத்து விட்டு அந்தச் சிறுவன் தயங்கியவாறே உள்ளே வந்தான்.

''நான் அடுத்த தெருவில் இருக்கிறேன். என் பெயர் ராம். என் அம்மாவுக்கும் காய்ச்சல்தான். அவர்களுக்கு மருந்து வாங்கத்தான் வந்தேன். வழியில் பலத்த மழை பிடித்துக் கொண்டது.'' கூறிய சிறுவன் தொடர்ந்தான். ''உன் பெயர் என்ன? உன் தங்கையை டாக்டரிடம் காட்டவில்லையா? நீங்கள் இருவர் மட்டுமா இருக்கிறீர்கள்? உங்கள் அப்பா அம்மா எங்கே?'' முதலில் சற்றுத் தயக்கம் காட்டினாலும் உடனேயே சகஜமாகப் பேச ஆரம்பித்தான் ராம்.

அனைத்துக்கும் பதில் கூறினாள் வள்ளி. ''டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போனார் என் அப்பா. டாக்டர் மருந்துகூட எழுதிக் கொடுத்திருக்கிறார்'' சிறிது தயங்கியபின் தொடர்ந்து கூறினாள் வள்ளி. ''மருந்து விலை பதினாறு ரூபாயாம்! மருந்து வாங்கப் பணம் இல்லை. நண்பர்களிடம்கேட்பதாகச்சொல்லிப்போயிருக்கிறார்'' கவலையை மறைத்துக் கொண்டு புன்னகைத்தபடி கூறினாள் வள்ளி.

ராம் சிறிது நேரம் சுற்றுமுற்றும் பார்த்தபடி அமர்ந்திருந்தான். பிறகு மெல்ல கேட்டான். ''டாக்டரின் மருந்துச் சீட்டை நான் பார்க்கலாமா?'' வள்ளி எழுந்து சென்று மருந்துச் சீட்டைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

'அடே, என் அம்மாவுக்கும் இதே டாக்டர்தான் பார்த்தார். நல்ல கை ராசிக்காரராம். அம்மா சொல்லுவாங்க.'' இப்படிக் கூறிக் கொண்டிருந்த ராம், அந்த மருந்துச் சீட்டுடன் கையிலிருந்தபையையும்ஓரத்திலிருந்த குடையையும் எடுத்துக் கொண்டு சாலையில் இறங்கி வேகமாக ஓடினான்.

எதுவும் செய்யத் தோன்றாமல் பிரமித்துப் போய் நின்றுவிட்டாள் வள்ளி. அடடா! இவனிடம் மருந்துச் சீட்டைக் கொடுத்து விட்டோமே! அப்பா வந்தால் திட்டுவாரே! மனம் குழம்பியவாறே மீனாவிடம் வந்தாள் வள்ளி. அனலாகக்காய்ந்ததுமீனாவின் உடம்பு. கண்ணீரோடு அங்கேயே அமர்ந்திருந்தாள் வள்ளி.

மீண்டும் கதவு தட்டப்படும் சப்தம். ''இம்முறை அப்பாதான்'' எண்ணியவாறே ஓடினாள் வள்ளி. கதவைத் திறந்ததும் ராம் நின்றிருந்தான். ஒரு சிறிய பிளாஸ்டிக் உறையோடு கூடிய பாக்கெட்டை வள்ளியிடம் தந்தான்.

''அக்கா! இதில் உன் தங்கைக்கு டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து இருக்கு. வாங்கிக்கொள். என் அம்மாவுக்கு மருந்து வாங்கும்போது இவளுக்கும் சேர்த்து வாங்கினேன்.''

வள்ளிக்கு அதை வாங்கிக்

கொள்ளத் தயக்கம். "எங்களிடம் பணம் இல்லையே, இதற்கு கொடுக்க?"

"அக்கா, என் பெற்றோர் எனக்குப் பலகாரம், பட்சணம் வாங்கக் கொடுக்கிற பணத்திலே மிச்சம் பிடிச்சு முப்பது ரூபாய் சேர்த்து வச்சிருக்கேன். அதிலேயிருந்துதான் இதை வாங்கினேன். நான் பணத்தை வீண் செலவு செய்யல்லியே! என் அப்பா அம்மா ஒன்றும் சொல்ல மாட்டாங்க. இது தெரிஞ்சா மகிழ்ச்சிதான் அடைவாங்க. உன் தந்தைக்குப் பணம் கிடைச்ச பிறகு எனக்குக் கொடுக்கலாம்'' ராம் கூறி முடித்தான்.

நன்றியுடன் அதைவாங்கிக்கொண்டாள் வள்ளி. உள்ளே சென்று காப்பி தயாரித்து ஒரு கோப்பையை அவனிடம் கொடுத்தாள். "ராம், இதை வாங்கிக் கொள். அதற்குள் நான் மீனுவுக்குக் காப்பியையும், மாத்திரையையும் கொடுத்து விட்டு வருகிறேன்.''

ராம் மகிழ்ச்சியுடன் காப்பியை வாங்கிப் பருகினான். வள்ளி தங்கையை மெள்ள எழுப்பி, காப்பியையும் மாத்திரையையும் கொடுத்தாள்.


வெளியே மழை விட்டிருந்தது. சிறிய தூறலாகப் பெய்து கொண்டிருந்தது. ராம் எழுந்து கொண்டான். "நான் வருகிறேன் அக்கா. உன் தங்கைக்கு உடம்பு சீக்கிரம் குணமாகிவிடும். கவலைப்படாதே'' கூறிவிட்டு, தன் பையையும் குடையையும் எடுத்துக் கொண்டு வெளியேறினான் ராம்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள் வள்ளி. தங்கையின் அருகில் சென்று கண்ணனை நினைத்தபடி அமர்ந்தாள். சிறிது நேரம் சென்றது. மீனுவைத் தொட்டுப் பார்த்தாள். ஜுரம் குறைந்திருந்தது. உடம்பெல்லாம் நன்றாக வேர்த்திருந்தது. வள்ளிக்கு மிகவும் மகிழ்ச்சி. கடவுளுக்கு நன்றி கூற, கண்ணனிடம், ஓடினாள். "கண்ணா! உன்னை அழைத்த உடன் உதவ நீதான் ராமின் வடிவில் இங்கு வந்தாயா? உனக்கு ரொம்ப நன்றி கண்ணா'' கூறியவாறே குழலூதும் கண்ணனை வணங்கிவிட்டு வாசலுக்கு வந்தாள் வள்ளி.

தெருக் கோடியில் வள்ளியின் தந்தை வந்து கொண்டிருந்தார்.

தந்தை அருகில் வந்ததும் கண்ணன் தங்கள் வீடு தேடி வந்த அந்த இனிய செய்தியை, தான் வணங்கும் கண்ணனின் கருணையைக் கூற ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தாள் வள்ளி.

★ ★ ★



சிறந்திடுவோம்

த. பழனிவேலு.

இளமையிலே கற்றுநாமும் உயர்ந்திடுவோமே! — நம்
இனியநல்ல பாரதத்தை உயர்த்திடுவோமே!
வளமைஓங்க வறுமைநீங்க உழைத்திடுவோமே! — இந்த
வையகந்தான் போற்றிடவே திகழ்ந்திடுவோமே!
(இளமையிலே.....)


பழந்தமிழின் பெருமைகளை அறிந்திடுவோமே! — இந்தப்
பாரிலுள்ள மொழிகளிலும் சிறந்திடுவோமே!
குழந்தைக்கேற்ற பாடல்களைப் படித்திடுவோமே! — அதில்
குடியிருக்கும் கருத்துக்களைப் பதித்திடுவோமே!
(இளமையிலே.....)



நல்லதையே நாம்படித்து நலம்பெறுவோமே! — நம்
நாட்டுக்குகந்த அறிவதனால் வளம்தருவோமே!
வல்லவராய் என்றைக்குமே இருந்திடுவோமே! — வான்
வெளியினிலே வீடமைத்து விருந்திடுவோமே!
(இளமையிலே.....)

கல்வியினால் மகிமைஉண்டு உணர்ந்திடுவோமே! — எந்தக்
காலத்திலும் புகழ்பரப்பி மணந்திடுவோமே!
வல்லவராய் நல்லவராய் வாழ்ந்திடுவோமே! — புது
வரலாற்றை நாம்படைத்துச் சிறந்திடுவோமே!
(இளமையிலே......)

பயணம் தந்த மாற்றம்



-த.கி.இராமசாமி

பள்ளி வாயிலில் அந்த பஸ் வந்து நிற்பதைக் கண்டதும் — மைதானத்தில் அங்கங்கே நின்று கொண்டிருந்தமாணவ—மாணவிகள் பஸ்ஸை நோக்கி எடுத்தனர் ஓட்டம்.

எல்லோருக்கும் ஜன்னல் அருகே உட்கார்ந்துகொள்ள வேண்டும்என்ற ஆசை. ஆனால், பஸ்ஸில் அப்படி வசதி இல்லையே?

ரவிக்கு எப்பொழுதுமே சுயநலம் உண்டு. உலகத்தில் கிடைக்கும் எல்லா சுகங்களையும் தான் ஒருவனே அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை, பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்ததினால் — அவனது பெற்றோரும் ரவியின் முகம் கோணாமல் நடந்து கொண்டனர். அவன் எது கேட்டாலும் உடனே வாங்கிக் கொடுத்தனர்.

இப்பொழுதுதான் முதன் முதலாக — பள்ளி ஆசிரியரின் சொற்படி கேட்டு குற்றாலம் நீர்வீழ்ச்சிக்கு மாணவர்களுடன் உல்லாசப்பயணம்செல்ல ரவி வந்திருக்கிறான்.

பஸ் போகும் பொழுது, இயற்கைச் சூழ்நிலைகளை நன்றாக அனுபவிக்கவேண்டும்என்ற ஆசை எல்லாப் பையன்களுக்கும் — மாணவிகளுக்கும் இருப்பதைப் போலவே மாணிக்கத்திற்கும் இருந்தது. மாணிக்கம் ரவியுடன் அதே வகுப்பில் ஒன்றாகப் படிப்பவன்.

ரவி முதலில் ஓடிப் போனான். சண்டை போட்டு ஜன்னல் பக்கத்தில் நன்றாக அமர்ந்து கொண்டான். ரவியைப் போலவே இன்னும் சிலரும் நடந்து கொண்டதால், ஆசிரியருக்குக் குழப்பமாகி விட்டது.

எனவே, பஸ்ஸில் ஏறியிருந்த எல்லா மாணவ — மாணவிகளையும் கீழே இறங்கச் சொன்னார். எல்லோரும் இறங்கியதும் அவரே வரிசை வரிசையாகப் பிரித்து உட்கார வைத்தார்.

அதில் மாணிக்கத்திற்கு ஜன்னல் பக்கமும், ரவிக்கு அவனுக்குப் பக்கத்திலும் இடம் கிடைத்தது.

ரவிக்குக் கோபமும், அழுகையும் வந்துவிட்டது. பேசாமல் வீட்டிற்கே போய் விடலாமா? என்று கூட ஆத்திரம் ஏற்பட்டது.

மாணிக்கம் — மிகச் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனது தந்தை பாம்பை வைத்துப் பிழைத்து வரும் ஒரு பாம்பாட்டி. அரசாங்கம் சில சௌகரியங்களைக் கொடுத்ததனால் — மாணிக்கத்தைக் கஷ்டப்பட்டு படிக்க வைத்திருந்தார்.

ஏற்கெனவே ரவிக்கு மாணிக்கத்தைக் கண்டால் பிடிக்காது.

இப்பொழுது கேட்கவா வேண்டும்?

'உம்'மென்று முகத்தைத் தொங்கப்

போட்டுக் கொண்டிருந்தான் ரவி. மாணிக்கத்திற்கு இரக்க சுபாவமும், மற்றவர்களது எண்ணங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவும் உண்டு.

ரவிக்கு, தன் பக்கத்தில் உட்கார இஷ்டமில்லை; அதோடு ஜன்னல் சீட்டும் கிடைக்கவில்லை என்பதை அறிந்ததும், ஆசிரியரிடம் சொல்லி, ரவியை ஜன்னல் பக்கம் உட்கார வைத்து, தான் தள்ளி உட்கார்ந்து கொண்டான்.

ரவி, மாணிக்கத்திற்கு நன்றிகூடக் கூறாமல், அலட்சியமாக ஜன்னலருகே உட்கார்ந்தான். இருந்தாலும், ரவிக்கு மாணிக்கம் அருகில் இருப்பது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

பயணத்தின் பொழுது ரவி தன் கையோடு கொண்டுவந்திருந்த விலையுயர்ந்த பிஸ்கெட், சாக்லெட் முதலியவற்றைத் தானே தின்றான். ஆப்பிளை விழுங்கினான். இன்னும் என்னவெல்லாமோ தின்றான்.

பெயருக்கு ஒரு தடவையாவது மாணிக்கத்திடம் 'இந்தா சாப்பிடு' என்று எதுவும் கொடுக்கவில்லை. மாணிக்கமும் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆசிரியர் கொடுத்த உணவுப் பொருளை மட்டும் வாங்கிச் சாப்பிட்டான்.

பஸ், குற்றாலத்தை அடைந்தது.



எல்லாரையும் அழைத்து ஆசிரியர், எப்படிஎப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று போதித்தார். "எந்த இடத்திற்கும் தனியே போகக் கூடாது. யாரும் அவர்கள் இஷ்டப்படி சுற்றக் கூடாது. குறிப்பாக அருவிப் பக்கம் துணையின்றி, ஆசிரியரின் அனுமதியின்றிச் செல்லக் கூடாது!" என்று சொன்னார்.

எல்லாரும் ஆசிரியர் சொற்படி கேட்டுக் கொண்டார், ரவி ஒருவனைத் தவிர.

அவன் தன் இஷ்டப்படி சுற்றுவது ஆசிரியருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. கூப்பிட்டு எச்சரிக்கை செய்ய, ஒரு மாணவனை அனுப்பிய பொழுது — ரவி மலை மீது, தனியாக ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

'வரட்டும்' என்று பல்லைக் கடித்தார். அவரால் 'ரவி'யை மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஐந்து நிமிடம் கழிந்திருக்கும்.

'ஐயோ' என்ற அலறல் சப்தத்தைக் கேட்டு, மாணிக்கம் அந்த இடத்தை நோக்கி ஓடினான்.

அங்கே —

ரவியை ஒரு நல்ல பாம்பு கொத்தி விட்டு ஓடுவது தெரிந்தது.


பாம்பு கொத்தியதால் 'ஐயோ!' என்று அலறியபடி கீழேசுருண்டுவிழுந்தான் ரவி. இன்னும்கொஞ்சம் தள்ளி, ரவி காலை வைத்திருந்தால் 'கிடுகிடு' பள்ளத்தில் விழுந்து — சுக்கல் சுக்கலாகப் போயிருப்பான்.

நல்லவேளை; மாணிக்கம் ஓடிச் சென்று ரவியை அந்தப் புதரிலிருந்து 'பாதை'க்குக் கொண்டு வந்து கிடத்தினான்.

ஆசிரியரும் — இன்னும் சில மாணவர்களும் ரவியை நோக்கி ஓடி வருமுன்னர்,

ரவிக்கு எங்கே பாம்பு கொத்தியதோ — அந்த இடத்தில் தன் வாயை வைத்து, விஷத்தை உறிஞ்சி, வெளியே துப்பிக் கொண்டிருந்தான் மாணிக்கம்.

"என்னடா மாணிக்கம்!" என்று ஆசிரியர் குரல் கொடுத்தபோது, மாணிக்கம் ஆசிரியரை அமைதியாக



இருக்கும்படி சைகை காண்பித்தான். தொடர்ந்து ரவியின் உடம்பிலிருந்து விஷத்தை உறிஞ்சித் துப்பிக் கொண்டிருந்தான்.

ஏறத்தாழ செத்துப் போனவன் மாதிரி, கண் மயங்க, உடம்பில் அசைவு ஏதுமின்றிப் பரிதாபமாகக் கிடந்த ரவியைக் கண்டதும், ஆசிரியருக்கும் மற்றவர்களுக்கும் ரவிக்கு வந்த ஆபத்து என்ன, என்பது புரிந்து போயிற்று.

அதோடு பயமும் பிடித்துக் கொண்டது.

'மாணிக்கம் இவ்வளவு தைரியமாகச் செய்கிறானே, இவனுக்கும் ஏதாவது ஆபத்து வந்துவிடக் கூடாதே! ரவியும் பிழைக்கணுமே!' என்ற பயத்தினால் எல்லோரும் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை பண்ணலானார்கள்.

ஆசிரியருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. 'இவர்கள் இருவரையும் அலக்காகத் தூக்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லலாமா? கொண்டு செல்ல முடியுமா? அல்லது, மாணிக்கமே ரவியின் உயிரைக் காப்பாற்றிவிடுவானா? மாணிக்கமும் ரவியைப் போலச் சிறு பையன் தானே?' என்றெல்லாம் யோசித்து, குழம்பிக் கொண்டிருந்தார்.

எல்லோரும் ரவியையும் மாணிக்கத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். மாணிக்கம் தொடர்ந்து ரவிக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தான்.

கால் மணி நேரம் ஆயிற்று.

ரவி கண்ணைத் திறந்து பார்த்தான். கை, கால்களை அசைக்க ஆரம்பித்தான்.

மாணிக்கத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'அப்பாடி! இனிமேல் ரவிக்கு ஆபத்து ஏதுமில்லை' என்று முடிவெடுத்தவன், தன் வாயை நன்றாகக் கழுவ அருகிலுள்ள கனைக்குச் சென்றான்.

திரும்பி வந்த மாணிக்கத்தை ஆசிரியரும் — மாணவ[illegible] தட்டிக் கொடுத்து[illegible] னர்.

ரவிக்குத் தான் கன[illegible] தனவா என்று தெரியவில்லை.

ஆசிரியர் சொற்படி கேட்காமல், தன் இஷ்டப்படி சுற்றியதால் பூட்ஸ் காலில் மிதிபட்ட ஒரு பெரிய நல்ல பாம்பு படமெடுத்துக் கண் இமைக்கும் நேரத்தில் தன்னைக் கொத்தியது மட்டும் இப்பொழுது நினைவுக்கு வந்தது.

உடனே மாணிக்கத்தை நோக்கி ஓடினன்.

அவனைக் கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

தன் உயிரைக் காப்பாற்றிய மாணிக்கத்தை அப்பொழுது முதல் 'ரவி' விடவே இல்லை.

தான் அவனை அலட்சியப்படுத்தியது, கேவலமாகப் பேசியது, பஸ்ஸில் பயணம் செய்யும்பொழுது, அவனுக்கு ஏதும் கொடுக்காமல் தான் மட்டும் தின்று கொண்டே வந்தது, இதையெல்லாம் நினைத்து ரவி, மாணிக்கத்திடம் வருத்தப்பட்டான்.


ரவியின் இந்த மாற்றம் எல்லோருக்கும் ஆச்சரியத்தையும், சந்தோஷத்தையும் தந்தது.

மாணிக்கம் எப்பொழுதும் போல அமைதியாக இருந்தான்.

'எப்படி உனக்கு விஷத்தை எடுக்கத் தெரிந்தது?' என்று ஆசிரியர் கேட்டபொழுது மாணிக்கம் சொன்னன்:

''நாங்க பாம்பாட்டிதானே! சின்னக் குழந்தையிலிருந்தே பாம் போட பயமில்லாமல் பழகுவேன்; விளையாடுவேன். விஷத்தையும் எப்படி எடுக்கணும்னு எங்க அப்பா எனக்குக் கத்துக் கொடுத்திருக்காரு. அதுமட்டுமல்ல; இங்கே வர்றப்போ, என் அப்பா என்னிடம் ஒரு 'வேர்' கொடுத்தாரு. பாம்பு கடிச்சா விஷத்தை எடுக்கக் கூடியது இதோ இந்த வேர். ''யாருக்காவது பாம்பு கடிச்சா, அவங்க உடம்பிலிருந்து விஷத்தை உறிஞ்சு எடுத்துட்டு, அப்புறமா இந்த 'வேரைக்' கடிச்சுத் துப்பிடு'ன்னு சொல்லிக் கொடுத்தாரு. ரவியின் உயிர் பிழைச்சதுக்கு இது தான் காரணம்.

ஊருக்குத் திரும்பும்பொழுது ரவியும் மாணிக்கமும் ஒருத்தருக்கொருத்தர் மிக நெருக்கமாகப் பழகினர்கள். சிரித்துப் பேசி விளையாடினர்கள். ரவி முற்றிலும் மாறி விட்டான் என்பதை எல்லோரும் அறிந்து சந்தோஷப்பட்டார்கள். அங்கே ஒரு அற்புதமான இணை பிரியாத நட்பு வேகமாக மலர்ந்து கொண்டிருந்தது.



Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600 032. (Phone: 431543). Editor: K. Rajendran.



ஸி.பி.ராமசாமி ஐயர்

தோற்றம் : 13-11-1879 மறைவு : 26-9-1966

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

